
# செம்மண்

நிலம் 1 துகள் 25 வள்ளுவர் ஆண்டு 2051, 02 - 08 தை 2021 வாரமலர் பக்கங்கள் 24 விலை ரூபா 50/-


# கட்சிக்குள் சுருங்கிப்போன தமிழ்த் தேசிய அரசியல்!

■ ஏகலைவன் ■

கடந்த வாரத்தில் யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சி சபைகள் இரண்டின் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு நடந்த அரசியல் போட்டிகள் கவனத்துக்குரியனவாக இருந்தன. அவற்றில் முதன்மையானது யாழ்ப்பாணம் மாநகர சபை. அடுத்தது நல்லூர் பிரதேச சபை. இவை இரண்டினது தலைவர்களும் முன்மொழிந்த பாதீட்டை இரண்டு தடவைகள் எதிர்க் கட்சிகள் தோற்கடித்ததன் மூலம் அவர்கள் தமது பதவிகளில் இருந்து விலகவேண்டியவரானார்கள்.

இந்த இரு சபைகளுமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வசம்தான் இருந்தன. ஆனால், இப்போது இரு சபைகளும் அதனது கைகளில் இல்லை. அதுமட்டுமல்லாமல் இந்தச் சபைகளில் உறுப்பினர்களாகியதன் மூலமே ஓர் அரசியல் அணியாகப் பரிணமித்திருக்கக்கூடிய சட்டத்தரணி மணிவண்ணன் தலைமையிலான அரசியல் செயற்பாட்டாளர்களே (இவர்கள் இன்னும் தம்மை ஒரு கட்சியாக அடையாளப்படுத்தவில்லை) இந்தச் சபைகளின் கட்டுப்பாட்டைத் தமது கைகளில் எடுத்துள்ளனர்.

இந்த இரு சபைகளையும் தம்வசம் எடுத்திருக்கக்கூடிய மணிவண்ணன் அணி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியில் இருந்து கலைக்கப்பட்டோர் மற்றும் அவர்களின் ஆதரவாளர்களால் உருவானது. அதாவது இந்தச் சபைகளில் இதுவரை இருந்து வந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய இரு தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகளையும் தாண்டிய மூன்றாவதான ஒரு தமிழ்த் தேசிய அணி இது.

நாடாளுமன்றக் களத்திலே வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் இதுபோன்றே தமிழ்த் தேசியம் பேசும் மூன்றாவது அணியாகத் தன்னை நிலை நிறுத்திக்கொண்டார். அதன் வளர்ச்சியாக உள்ளூராட்சி சபைகளிலும் இப்போது மூன்றாவது தமிழ்த் தேசிய அணி ஒன்று

செம்மண்

வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்
ஆசிரியர்: தே.பிரேமானந்த்

# படை மயம் எங்கே கொண்டு செல்லும்?

கொரோனாப் பெருந் தொற்றுக் கட்டுப்பாடுகளுக்காக இலங்கையில் உள்ள 25 மாவட்டங்களிற்கும் ஒவ்வொரு தரைப்படை உயரதிகாரிகள் ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளனர். வெள்ளிக்கிழமை தரைப் படைத் தலைமையகத்தில் இதற்கான நியமனம் வழங்கப்பட்டது. தரைப் படைத் தளபதியும் கொரோனா கட்டுப்பாட்டுச் செயலணியின் தலைவருமான ஜெனரல் சவேந்திர சில்வா இந்த நியமனத்திற்கான கடிதங்களை வழங்கினார்.

ஜெனரல் சவேந்திர சில்வாவின் பரிந்துரைக்கு அமைய அதிபர் செயலகம் இந்த நியமனங்களைச் செய்துள்ளதாகத் தரைப் படைத் தலைமையகத்தின் செய்திக் குறிப்புத் தெரிவிக்கின்றது. மாவட்டங்கள் தோறும் அமைந்திருக்கும் தனிமைப்படுத்தல் நிலையங்கள், தனிமைப்படுத்தலுக்காகவும் சிகிச்சைக்காகவும் தனிநபர்களை இடமாற்றுவதற்கான போக்குவரத்து வசதிகள், மருந்துப் பொருட்களின் விநியோகம், தேவையான ஏனைய பொருள்களின் வழங்கல், உலர் உணவுப் பொருள்கள் என்பவற்றை ஒருங்கிணைப்பது இந்த தரைப் படை உயரதிகாரிகளின் முதன்மைப் பணியாக இருக்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

தொடக்கம் முதலே இந்த கொரோனாக் கட்டுப்படுத்தல் பணியின் தலைமைப் பொறுப்பு தரைப் படைத் தளபதியின் வசம்தான் இருக்கின்றது. பொதுமக்கள் சேவையில் உள்ள அரச அதிகாரிகளை ஒருங்கிணைத்து இந்தக் கட்டுப்பாட்டுப் பணியை படையினர்தான் பெரிதும் மேற்கொண்டு வருகின்றார்கள். அப்படியிருந்தும் கொரோனா கட்டுப்பட மறுக்கின்றது. தனது இரண்டாவது ஓயாத அலையின்போது மட்டும் கடந்த ஐப்பசி மாதத்தில் இருந்து மார்கழிக் கடைசி வரை 40 ஆயிரம் பேருக்குப் புதிதாக நோய்த் தொற்று ஏற்பட்டுள்ளது.

இந்தப் பெருந் தொற்றுக் காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையும் 200 என்கிற எண்ணிக்கையைத் தாண்டி விட்டது. இறந்தவர்களில் பெரும்பாலானவர்கள் ஐப்பசி மாதத்தின் பின்னரே உயிரை இழந்தார்கள். இந்த நிலையில் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க தரைப் படை உயரதிகாரிகள் நியமிக்கப்பட்டிருப்பது, பொதுப் பணி அதிகாரிகளின் செயற்பாடுகள் மீதான நம்பிக்கையின்மையை வெளிப்படுத்துவதாக அமைகின்றது. படை அதிகாரிகளே அதிக வினைத்திறனுடனும் விசுவாசத்துடனும் செயற்பட்டு கொரோனாவைக் கட்டுப்படுத்துவார்கள் என்பது போன்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்துகின்றது.

தலைமை ஒருங்கிணைப்பாளராகத் தரைப் படைத் தளபதி இருந்தபோது கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்கு முடியாமல் போனதற்கான காரணம் பொதுப் பணி அதிகாரிகள் அதற்கு போதிய ஒத்துழைப்பை வழங்கவில்லை என்பதைப் போன்ற தோற்றப்பாட்டையே இந்த நடவடிக்கை ஏற்படுத்துகின்றது. அத்தோடு பொதுப் பணி அதிகாரிகளைக் காட்டிலும் படை அதிகாரிகளையே இலங்கையின் அதியுயர் தலைவர் நம்புகிறார் என்பதையும் வெளிப்படுத்துகின்றது.

இது மக்களாட்சி நிலவுவதாகக் கூறப்படும் ஒரு நாட்டில் பொதுப் பணி அதிகாரிகளை மிக மோசமாக இழிவுபடுத்தும் செயல். இத்தகைய நடவடிக்கைகளில் ஆட்சியாளர்கள் ஈடுபடக்கூடாது. பொதுப் பணி அதிகாரிகள் திறம்படச் செயற்பட்டு கொரோனாவைக் கட்டுப்படுத்தவில்லையென்றால் அதற்கு அவர்களை ஒருங்கிணைத்துச் செயலாற்றிய தரைப் படைத் தளபதியே பொறுப்பேற்றுக்கொள்ளவேண்டும். அதைவிடுத்து பொதுப் பணி அதிகாரிகளைக் குற்றஞ்சாட்டி, படை அதிகாரிகள் இருந்தால் கொரோனா கட்டுக்குள் வந்துவிடும் என்று கருதுவது மடைமை.

இது எதிர்காலத்தில் பொதுப் பணித்துறைக் கடமைகள் அனைத்துமே படை அதிகாரிகளின் கட்டுப்பாட்டில்தான் திறம்படச் செயற்படுத்தப்படமுடியும் என்கிற தோற்றப்பாட்டை ஏற்படுத்துவதற்கான முயற்சியாகவும். நகர்வாகவுமே தோன்றுகின்றது. அத்தகைய ஒரு நகர்வு மிக ஆபத்தானது. நாட்டை படையினரின் முழுமையான கிடுக்கிப் பிடிக்குள் கொண்டுவந்துவிடும்.

உருவாக்கப்பட்டுவிட்டது. இப்போது இந்த மூன்றாவது அணி தமிழ் அரசியல் களத்தில் எவ்வளவு காலம் நிலைத்து நிற்கும், அது எத்தகைய அடைவுகளை எட்டும், அதன் மூலம் தமிழர்களுக்கு கிடைக்கப் போகும் அரசியல் பயன்கள் என்ன என்பதெல்லாவற்றையும் தாண்டி இந்த மூன்றாவது அணி இந்த இரு சபைகளையும் வென்றெடுத்தன் பின்னால் உள்ள அரசியல் மிக முக்கியமானது.

இந்த மூன்றாவது அணி யாழ்ப்பாண மாநகர சபையையும் நல்லூர் பிரதேச சபையையும் வெற்றி கொண்டதைத் தொடர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணித் தலைவர்களின் அரசியல் நடத்தைகள் அந்த அரசியலை அம்பலப்படுத்தின.

### கூட்டமைப்பு குத்துவெட்டு

யாழ்ப்பாணம் மாநகர சபையில் முதல்வராக இருந்தவரான இ.ஆர்னோல்ட் தோற்கடிக்கப்பட்டு மணிவண்ணன் அந்தப் பதவியை வென்றதன் பின்னயில் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ. சேனாதிராசாவின் தான்தோன்றித்தனமான, தீர்க்க தரிசனமற்ற முடிவுகளே காரணம் என்று குற்றஞ்சாட்டியிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன், இந்த தோல்விக்கு அவரே முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டும் என்றும் தெரிவித்திருந்தார்.

அவர் சொல்வதில் ஒரு நியாயம் இருக்கவே செய்தது. மாநகர சபையில் உள்ள 45 உறுப்பினர்களில் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் 16 பேர் மட்டுமே. எதிர்த் தரப்பில் 29 பேர் இருக்கின்றனர். இந்த நிலையில் ஆர்னல்ட் தவிர்த்து வேறு யாரைப் போட்டிக்கு இறக்கினாலும் அவரைத் தாம் ஆதரிப்போம் என்றது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி. அந்தக் கட்சிக்கு சபையில் 13 உறுப்பினர்கள் இருந்தார்கள். இந்த நிலையில் ஆர்னல்ட் அல்லாத வேறொருவர் மிக இலகுவாக வென்று சபையைக் கூட்டமைப்பின் வசம் தக்க வைத்திருக்க முடியும். அப்படியிருந்தபோதும் நிகழ்தகவுகளின் வழி வரக்கூடிய மிக அரிதான, ஆபத்தான வாய்ப்பைத் தெரிவாக்கின் கொண்டவர்கள் கூட்டமைப்புத் தலைவர்களே! அப்படிப் பார்த்தால் அந்த ஆபத்தான முடிவை எடுத்ததன் மூலம் அடைந்த தோல்விக்கு மாவை சேனாதிராசாவே காரணம் என்பது.

ஆனால், இந்த விவகாரம் உண்மையில் எண்ணிக்கையின் அடிப்படையில் அணுகப்பட்ட ஒரு விடயமாக என்றால் இல்லை என்பதே அதற்கான பதில். ஆர்னல்ட் மீண்டும் ஒரு தடவை வேட்பாளராக நிறுத்தப்பட்டால் அதற்கெதிராக மணிவண்ணன் நிறுத்தப்படுவார் அப்படி நிறுத்தப்படும்போது தமது கட்சிக்குள் இருக்கும் பிளவு வெளித் தெரியும் என்ற காரணத்திற்காகவே முந்திக்கொண்டு ஆர்னல்ட்டைத் தவிர வேறு யாரையும் ஆதரிக்கத் தயார் என்று முன்னணி அறிவித்தது. இது அதனுடைய உட்கட்சி அரசியல். ஏனெனில் மணிவண்ணனையும் மற்றும் ஒரிரு உறுப்பினர்களையும் கட்சியைவிட்டு விலக்கியிருக்கிறது முன்னணி எனவே அவர்கள் ஒரு அரசியல் சக்தியாக வளர்வதை அனுமதிக்கக்கூடாது என்பது அதனது இலக்காக இருந்தது.

### முன்னணியின் குத்துவெட்டு

மணிவண்ணன் வென்றதும் அவர் ஒட்டுக் குழுவினருடன் இணைந்து செயற்படும் நபரொருவர் என்று முன்னணித் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் விமர்சித்ததில் இருந்தே இரு தரப்புக் காழ்ப்புணர்வும் வெளிப்படையாகத் தெரிந்தது. ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈபிடிபி) மணிவண்ணன் மாநகர முதல்வராவதற்கு ஆதரவு தெரிவித்தமையை அடுத்தே அவர் ஒட்டுக்குழுவின் கையாள் என்கிற குற்றச்சாட்டு தூக்கி வீசப்பட்டது. மணிவண்ணனுக்கும் ஈபிடிபிக்குமான இந்த உறவு காரணமாகவே அவரைக் கட்சியைவிட்டு வெளியேற்றும் நிலை ஏற்பட்டதாகவும்கூட கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நியாயப்படுத்திக்கொண்டார்.

இதைப் பார்க்கும்போதே உட்கட்சி அரசியல் எவ்வளவு தூரம் இந்த விடயத்தில் பாய்ந்து விளையாடி இருக்கின்றது என்பதைப் புரிந்துகொள்ளலாம். இந்தப் பின்னணியில் முன்னணி ஏன் கூட்டமைப்பின் வேறொரு வேட்பாளரை ஆதரிக்க முன்வந்தது என்பதைப் புரிந்துகொள்வதும் கடினமானது அல்ல.

### மாவை சுமந்திரன் முரண்பாடு

மற்றொருபுறத்தில் மாவையைச் சாடி சுமந்திரன் வெளியிட்ட அறிக்கையில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான தானும் சிறிதரனும் ஆர்னல்ட்டுக்குப் பதிலாக சொலமன் சூ.சிறிலை முதல்வராக்கலாம் என்று சொன்னதன் பின்பும் தலைமை மாறாக முடிவெடுத்திருக்கின்றது என்று தெரிவித்திருக்கிறார். அவரது ஆதங்கத்திற்குக் காரணம் இருக்கின்றது. ஏனெனில் இதற்கு முன்னர் மாவை சேனாதிராசா நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது கட்சியின் முடிவுகள் எல்லாம் நாடாளுமன்ற உறுப்பினர்களால் மட்டுமே எடுக்கப்பட்டன. அப்படியிருக்கும்போது இப்போது மட்டும், தலைவர் நாடாளுமன்ற உறுப்பினராக இல்லாத நிலையில் மட்டும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் விருப்புக்கு மாறாக முடிவெடுக்கப்படுவது அவருக்குக் கவலையை ஏற்படுத்தியிருப்பதில் வியப்பில்லை.

சுமந்திரனின் கடிதம் தொடர்பில் பதிலளித்திருக்கும் மாவையும் சுமந்திரன் இதற்கு முன்னரும் இப்படித் தலைமையைச் சாடிக் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார் என்று தெரிவித்தார். மாநகரத்தில் தோற்கடிக்கப்பட்ட ஆர்னல்ட் ஒரு காலத்தில் சுமந்திரனின் தீவிர ஆதரவாளராக இருந்தவர். ஆனால் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஆர்னல்ட் வேட்பாளராக வருவதை பெரிதாக வரவேற்றார் என்று சொல்லிவிடமுடியாது. மாநகர சபையில் திறமையான செயற்பாட்டை நிரூபித்துவிட்டு நாடாளுமன்றத்திற்கு ஆர்னல்ட் செல்வதே பொருத்த மானதாக இருக்கும் என்பது சுமந்திரனின் வாதமாக இருந்தது.

ஆனால், குருவை மிஞ்சிய சீடப்பிள்ளையாக சுமந்திரனை வெட்டியோடிய ஆர்னோல்ட் மாவை சேனாதிராசா மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் ஆகியோரின் துணையுடன் நாடாளுமன்ற வேட்பாளரானார். அதுவும் சுமந்திரன் கொண்டு வந்தவரான அம்பிகா சற்குணநாதனுக்குக் கடும் எதிர்ப்புக்கள் வந்த நிலையில் அந்த இடத்திற்குள்ளால் நுழைந்தார் ஆர்னல்ட். இதையடுத்து தேர்தல் சமயத்திலும் கட்சிக்குள் சுமந்திரன் மீதான விமர்சனங்களின் பக்கமே அவர் நின்றார். இதனால் இருவருக்கும் இடையிலான உறவில் கடுமையான விரிசல் இருந்தது.

இதனால் முதல்வர் வேட்பாளர் தெரிவில் சுமந்திரன் ஆர்னல்ட்டுக்கு ஆதரவு தரமாட்டார் என்கிற எதிர்பார்ப்பு கட்சிக்குள்ளேயே பெரும்பாலும் இருந்தது. இறுதியில் ஆர்னல்ட் தோற்றதற்குக் காரணமாகத் தெரிவிக்கப்படும் மாநகர சபை உறுப்பினரான ம.அருள்குமரனும் சுமந்திரனின் ஆதரவாளர் என்றே வகைப்படுத்தப்படுவதால் ஆர்னல்ட் தோல்வியின் பின்னால் சுமந்திரனின் பலமான கை இருக்கும் என்கிற ஊகங்களுக்குக் குறைவில்லை.

இப்படி ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்ததாக கட்சிகளின் உட்கட்சி அரசியல் பிணக்குகள் கட்சிகளின் வெற்றி வாய்ப்புக்களைத் தீர்மானிப்பதுடன் புதிய அரசியல் சக்திகளையும் உருவாக்கி நிற்கின்றன.

ஒரு காலத்தில் இனத்தின் உரிமைக்காகவும் மேம்பாட்டுக்காகவும் சிங்களப் பெரும்பான்மை சக்திகளோடு பொருதி நின்ற தமிழ்க் கட்சிகளின் அரசியல் இப்போது இப்படி மிகக் கீழான கட்சி உள்அரசியலால் உருக்குலைந்துள்ளமை பெரும் கவலைக்குரியது.

நாடாளுமன்றப் பொதுத் தேர்தலோடு தொடங்கிய இந்த உட்கட்சி அரசியல் போட்டி இப்போது மேலும் ஒருபடி வளர்ந்து தமிழ்த் தேசிய அரசியல் என்பது உட்கட்சி அரசியல் என்றவாறாக பரிணமித்திருப்பது தமிழர்களின் பேரவலம்.

# அரசியல் என்பது வெற்றிமட்டுமல்ல ரஜினி!

● குமரேசன்

ரஜினிகாந்த் திரைப்பட வில்லத்தனத்தில் வித்தியாசம் காட்டியதை ரசித்த, கதாநாயகனாக மாறியபோது அசத்தியதை வரவேற்ற பல லட்சக்கணக்கான ரசிகர்கள் உண்டு. அரசியலில் சில நேரங்களில் மக்கள் சக்திகளுக்கு ஆதரவாக அவர் முகம் காட்டியபோது மகிழ்ந்தவர்கள் பலர் உண்டு.


மக்களை எதிர்பார்ப்புப் பதற்றத்திலேயே வைத்திருக்காமல் ஒரு நிலைப்பாட்டுக்கு வாருங்கள் என்று சொன்னவர்கள் உண்டு. அண்மைக் காலமாக உங்கள் அரசியல் கருத்துகள் மக்கள் நலனுக்கு உகந்தவையாக இல்லை என்று விமர்சித்தவர்கள் உண்டு.

கட்சியைத் தொடங்கிய பிறகு என்ன கொள்கையை அறிவிக்கிறார் என்பதைப் பொறுத்தே ஏற்படக்கூடிய தாக்கத்தைப் பற்றிப் பேச வேண்டும் என்று கூறியவர்கள் உண்டு. கட்சி தொடங்குவதற்கான உயர்நிலைப் பொறுப்பு நியமனங்கள் உங்கள் பாதையைப் பற்றிய சந்தேகத்தை ஏற்படுத்துகின்றன என்று சுட்டிக் காட்டியவர்கள் உண்டு.

இப்படி நடிகர் ரஜினிகாந்தைச் சுற்றி ஒரு பரபரப்பு அரசியல் எப்போதும் சுழன்றடித்துக்கொண்டே இருந்தது. அது அவரது திரைப்படங்கள் ஓடுவதற்கான வர்த்தக உத்தி என்று அதைப் பார்த்தவர்களும் இருந்தார்கள்.


அவரது வருகையால் பெரிய மாற்றங்கள் நடந்துவிடும் என்று சிலர் கொண்டாடியதைப் போலவே, ஒரு பாதிப்பும் ஏற்படாது என்று சிலர் குறைத்து மதிப்பிட்டதையும் ஏற்காதவர்கள் உண்டு.

அத்தோடு சேர்த்து ரஜினியின் ஆன்மீக அரசியல் தமிழ் மண் மரபின் முற்போக்கான பய



ணத்திற்குத் தடைக்கல் போடுமோ என்ற கவலையும் இருந்தது. அரசியலுக்கு வரமாட்டேன் என்கிற ரஜினியின் அறிக்கை இதற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைத்திருக்கிறது.

ரஜினி மீது அன்பு கொண்ட ரசிகர்களின் மகிழ்ச்சி, எதிர்பார்ப்புக் கணக்குடன் இருந்தவர்களின் ஏமாற்றம், பெரிய சவால் நீங்கியது என்று நினைக்கக்கூடியவர்களின் களிப்பு, இனி ஊடக நிறுவனங்கள் பரபரப்புக்கு வேறு எதையாவது எடுத்துக் கொண்டாக வேண்டும் என்ற நிலை உருவாகியிருப்பது இவற்றையெல்லாம் தாண்டி - ரஜினிக்காக மட்டுமல்லாமல், பொதுவாகவும் சில சிந்தனைகளைப் பகிர்ந்துகொள்ளப்பட வேண்டி இருப்பது அவசியமானது.



**ரஜினியின் அரசியல் முடிவு**

அரசியலுக்கு வரும் தனது முடிவில் இருந்து ரஜினி பின்வாங்கிவிட்டார். தை மாதத் தொடக்கத்தில் கட்சி தொடங்கி தமிழக சட்டமன்றத் தேர்தலில் மொத்தமுள்ள 234 தொகுதிகளிலும் போட்டியிடுவேன் என்று சொன்னவர், தான் கட்சி தொடங்கப் போவதில்லை என்பதை வருத்தத்தோடு அறிவித்திருக்கிறார்.

"இதை அறிவிக்கும் போது எனக்கு ஏற்பட்ட வலி எனக்கு மட்டும் தான் தெரியும். இந்த முடிவு ரஜினி மக்கள் மன்றத்தினருக்கும், நான் கட்சி ஆரம்பிப்பேன் என்று எதிர் பார்த்துக் கொண்டிருக்கும் ரசிகர்களுக்கும், மக்களுக்கும் ஏமாற்றத்தை அளிக்கும், என்னை மன்னியுங்கள்" என்றார் ரஜினி.

நடிகர் ரஜினிகாந்த் 2017ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் தேதி தான் அரசியல் கட்சி ஆரம்பிப்பதாகவும் 234 தொகுதிகளிலும் தனித்துப் போட்டியிடவுள்ளதாகவும் அறிவித்தார். மூன்று வருடங்கள் ஆகியும் ரஜினிகாந்த் கட்சி தொடங்கவில்லை. சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்ததால் உடல்நலம் கருதி கட்சி தொடங்க மாட்டார் எனத் தகவல் வர, உயிரே போனாலும் பரவாயில்லை கட்சி தொடங்கப்போகிறார் என அறிவித்தார் ரஜினிகாந்த்.

கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளராக பாஜகவிலிருந்து வந்த அர்ஜுன மூர்த்தியையும்,



மேற்பார்வையாளராக தமிழருவி மணியனையும் நியமித்தார். இதனிடையே கடந்த சில நாள்களுக்கு முன்பு குருதி அழுத்த மாறுபாடு காரணமாக ஐதராபாத் அப்பல்லோ வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பினார். கொரோனா தாக்கும் எந்தவித செயல்களிலும் ஈடுபடக்கூடாது என ரஜினிக்கு மருத்துவர்கள் அறிவுறுத்தினர். இதனால் ரஜினிகாந்த் கட்சி ஆரம்பிப்பாரா என்ற கேள்வி எழுந்தது.

இந்த நிலையில் ரஜினிகாந்த் இது தொடர்பில் டிசம்பர் 29 ஆம் திகதி வெளியிட்டுள்ள முக்கியமான அறிக்கையில், தான் கட்சி தொடங்கப்போவதில்லை என்கிற முடிவை அறிவித்தார்.

**அறிக்கை**
**அவரது அறிக்கையில்**
**தெரிவிக்கப்பட்டிருந்ததாவது:**

என்னை வாழவைக்கும் தெய்வங்களான தமிழக மக்களுக்கு எனது அன்பான வணக்கம், மே மாதத்தில் கட்சி தொடங்குவேன் என்று அறிவித்து மருத்துவர்களின் அறிவுரையையும் மீறி 'அண்ணாத்த' படப்பிடிப்பில் கலந்து கொள்ள ஐதராபாத் சென்றேன். கிட்டத்தட்ட 120 பேர் கொண்ட படக் குழுவினருக்கு தினமும் கொரோனா பரிசோதனை செய்து ஒவ்வொருவரையும் தனிமைப்படுத்தி, முகக் கவசம் அணிவித்து, மிகவும் கவனமாகப் படப்பிடிப்பை நடத்தி வந்தோம்.

இவ்வளவு கட்டுப்பாட்டோடு இருந்தும் 4 பேருக்கு கொரோனா இருக்கிறது என்று தெரிய வந்தது. உடனே இயக்குநர் படப்பிடிப்பை நிறுத்தி நான் உட்பட அனைவருக்கும் கொரோனா பரிசோதனை செய்வித்தார். எனக்கு கொரோனா நெகடிவ் வந்தது. ஆனால் எனக்கு குருதி அழுத்தத்தில் அதிக ஏற்றத் தாழ்வு இருந்தது. மருத்துவ ரீதியாக எக்காரணத்தைக் கொண்டும் எனக்கு குருதி அழுத்தத்தில் ஏற்றத் தாழ்வு இருக்கக்கூடாது. அது என்னுடைய மாற்று சிறுநீரகத்தைக் கடுமையாகப் பாதிக்கும். ஆகையால் என்னுடைய மருத்துவர்களின் அறிவுரைப்படி அவர்களின் மேற்பார்வையில் மூன்று நாள்கள் மருத்துவமனையில் கண்காணிப்பில் இருக்க நேரிட்டது.

என் உடல்நிலை கருதி தயாரிப்பாளர் கலாநிதி மாறன் அவர்கள் மீதமுள்ள படப்பிடிப்பை ஒத்திவைத்தார். இதனால் பல பேருக்கு வேலை வாய்ப்பு இழப்பு, பல கோடி ரூபாய் நஷ்டம். இவை அனைத்துக்கும் காரணம் என்னுடைய உடல் நிலை. இதை ஆண்டவன் எனக்குக் கொடுத்த ஒரு எச்சரிக்கையாகத்தான் பார்க்கிறேன்.

நான் கட்சி தொடங்கிய பிறகு ஊடகங்கள், சமூக வலைத்தளங்கள் மூலமாக மட்டும் பரப்புரை செய்தால் மக்கள் மத்தியில் நான் நினைக்கும் அரசியல் எழுச்சியை உண்டாக்கித் தேர்தலில் பெரிய வெற்றியைப் பெற முடியாது. இந்த யதார்த்தத்தை அரசியல் அனுபவம் வாய்ந்த யாரும் மறுக்கமாட்டார்கள்.

நான் மக்களைச் சந்தித்து கூட்டங்களைக் கூட்டி, பரப்புரைக்குச் சென்று ஆயிரக்கணக்கான ஏன் லட்சக்கணக்கான மக்களைச் சந்திக்க வேண்டியிருக்கும். 120 பேர் கொண்ட குழுவிலேயே கொரோனா பாதிப்பு ஏற்பட்டு நான் மூன்று நாள்கள் மருத்துவமனையில் மருத்துவர்களின் கண்காணிப்பில் இருக்க நேர்ந்தது. இப்போது இந்த கொரோனா உருமாறி புது வடிவம் பெற்று இரண்டாவது அலையாக வந்துகொண்டிருக்கிறது.

தடுப்பூசி வந்தால்கூட நோய் எதிர்ப்புச் சக்தியைக் குறைக்கும் Immuno Suppressant மருந்துகளைச் சாப்பிடும் நான், இந்த கொரோனா காலத்தில் மக்களைச் சந்தித்து, பரப்புரையின் போது என் உடல்நிலையில் பாதிப்பு ஏற்பட்டால் என்னை நம்பி என்கூட வந்து என்னுடன் அரசியல் பயணம் மேற்கொண்டவர்கள் பல சிக்கல்களையும் சங்கடங்களையும் எதிர்கொண்டு, மனரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பல துன்பங்களைச் சந்திக்க நேரிடும்.

என் உயிர் போனாலும் பரவாயில்லை, நான் கொடுத்த வாக்கை தவற மாட்டேன், நான் அரசியலுக்கு வருவேன் என்று சொல்லி இப்பொழுது அரசியலுக்கு வரவில்லை என்று சொன்னால் நாலு பேர் நாலுவிதமா என்னைப் பற்றிப் பேசுவார்கள் என்பதற்காக என்னை நம்பி என் கூட வருபவர்களை நான் பலிக் கடா ஆக்க விரும்பவில்லை. ஆகையால் நான் கட்சி ஆரம்பித்து, அரசியலுக்கு வர முடியவில்லை என்பதை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதை அறிவிக்கும் போது எனக்கு ஏற்பட்ட வலி எனக்கு மட்டும்தான் தெரியும். இந்த முடிவு ரஜினி மக்கள் மன்றத்தினருக்கும், நான் கட்சி ஆரம்பிப்பேன் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் ரசிகர்களுக்கும், மக்களுக்கும் ஏமாற்றத்தை அளிக்கும், என்னை மன்னியுங்கள்.

மக்கள் மன்றத்தினர் கடந்த மூன்று ஆண்டுகளாக என் சொல்லுக்குக் கட்டுப்பட்டு ஒழுக்கத்துடனும், நேர்மையுடனும் கொரோனா காலத்திலும் தொடர்ந்து மக்களுக்குச் சேவை செய்திருக்கின்றீர்கள், அது வீண் போகாது. அந்தப் புண்ணியம் என்றும் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் காப்பாற்றும்.

கடந்த நவம்பர் 30ஆம் நாள் நான் உங்களைச் சந்தித்த போது, நீங்கள் எல்லோரும் ஒரு மனதாக 'உங்கள் உடல் நலம்தான் எங்களுக்கு முக்கியம், நீங்கள் என்ன முடிவெடுத்தாலும் எங்களுக்குச் சம்மதமே' என்று சொன்ன வார்த்தைகளை என் வாழ்நாளில் மறக்கமாட்டேன். நீங்கள் என்மேல் வைத்திருக்கும் அன்பிற்கும், பாசத்திற்கும் தலை வணங்குகிறேன். ரஜினி மக்கள் மன்றம் என்றும் போலச் செயல் படும் என்று அறிவித்தார்.

மூன்று ஆண்டுகளாக விமர்சனங்களை தாங்கி தனக்கு ஆதரவளித்த தமிழருவி மணியனுக்கும், பாஜகவிலிருந்து விலகி வந்த அர்ஜுன மூர்த்திக்கும் நன்றி தெரிவித்த ரஜினிகாந்த், தேர்தல் அரசியலுக்கு வராமல் மக்களுக்கு என்னால் என்ன சேவை செய்யமுடியுமோ அதை நான் செய்வேன். நான் உண்மையைப் பேச என்றுமே தயங்கியதில்லை. உண்மையையும், வெளிப்படைத் தன்மையையும் விரும்பும், என் நலத்தில் அக்கறையுள்ள, என்மேல் அன்பு கொண்ட என்னை வாழவைக்கும் தெய்வங்களான ரசிகர்களும், தமிழக மக்களும் என்னுடைய இந்த முடிவை ஏற்றுக்கொள்ளவேண்டும் எனக் கேட்டுக்கொண்டுள்ளார்.

**இவையும் அரசியல் ஈடுபாடுதான்**

ஊடகங்கள், சமூக ஊடகங்கள் வழியாகத் தான் பரப்புரை செய்ய முடியும் என்பதால் தேர்தல் வெற்றிக்கு அது உதவாது என்று ரஜினி கூறியிருக்கிறார். தேர்தல் பங்கேற்பு அரசியலில் முக்கியமானது தான். ஆனால் தேர்தல் வெற்றி மட்டுமே அரசியல் ஈடுபாடு அல்ல என்பதையும் அவர் புரிந்துகொள்ள வேண்டி இருக்கிறது. சமுதாய அக்கறை கொள்ளுதல், மக்களைப் பாதிக்கிற பிரச்சினைகளில் தலையிடுதல், இன்றைய கொரோனா படிப்பினையைத் தொடர்ந்து இயற்கைச் சமநிலை பாதுகாப்பை வலியுறுத்துதல், அதனை வெட்டிச் சுரண்டுகிற லாப வேட்டையைத் தடுக்கக் குரல் கொடுத்தல், கருத்துச் சுதந்திர உரிமையை முன்னெடுத்தல் - இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம்; இவையும் அரசியல் ஈடுபாடுகள் தான். ரஜினிக்கு யாரும் இதனைப் புரிய வைக்கவில்லை என்பதுதான் இங்கிருக்கும் சிக்கல்.

தனது ரசிகர் மன்றத்தினரிடம் மன்னிப்புக் கேட்டதோடு, தொடர்ந்து அவர்களை மக்கள் பணிகளில் ஈடுபடக் கேட்டுக்கொண்டிருக்கிறார் ரஜினி. இதையெல்லாமும் கூடச் சிந்திக்க அவர்களுக்கு ரஜினி வழிகாட்டவேண்டும் என்பதுதான் முக்கியமானது.

"உண்மையைப் பேசுவதற்கு ஒருபோதும் தயங்க மாட்டேன்" என்று ரஜினி கூறியிருப்பது நன்று. ஆனால் என்னவோ அவர் முழு உண்மையையும் சொல்லிவிடவில்லை என்றே தோன்றுகிறது. இல்லை, இவ்வளவுதான் உண்மை என்பாரானால் அது அவர் ரசிகர்களுக்கு உண்மையாக இல்லையோ என்கிற ஐயப்பாட்டையும் ஏற்படுத்தி விடும்.

ஏனெனில் அவரைப் பின்னால் இருந்து இயக்கியது பாரதிய ஜனதாக் கட்சிதான் என்கிற பலமான சந்தேகம் அரசியல் வட்டாரங்களில் கடுமையாக இருக்கிறது. எனவே அதற்கான பதிலையும் அவர் சொல்லியிருக்கலாம். ரஜினி வந்த தமிழ்நாட்டை அடியோடு மாற்றிவிடுவார் என்பது பகல் கனவு. அதேநேரம் அவர் வருவார் வருவார் என்று இனியாவது ஏமாற்றாமல் இருப்பார்கள் என் பதும்கூட பகல்கனவாகவே தோன்றுகின்றது.






# தள்ளிப்போகும் மாகாணசபைத் தேர்தல்!




● ஸஹேடோ ஸ்வாமி

எதிர்வரும் பங்குனி அல்லது சித்திரை மாதத்தில் நடைபெறலாம் என்று எதிர்பார்க்கப்பட்ட மாகாணசபைத் தேர்தல், பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. சுற்றாடல் அமைச்சில் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த ஊடக சந்திப்பிலேயே இந்தத் தீர்மானம் வெளியிடப்பட்டிருக்கிறது. நாட்டைப் பாதித்துள்ள கொரொனா நிலைவரத்தினை காரணம் காட்டியும் மகா சங்கத்தினரின் வேண்டுகோளுக்கு அமைவாகவும் மேற்படி முடிவு எடுக்கப்பட்டதாகச் சுற்றாடல் விவகாரங்களுக்கு பொறுப்பான அமைச்சர் மஹிந்த அமரவீர அறிவித்திருக்கிறார்.

மாகாணசபைத் தேர்தல்களைக் காலம் தாழ்த்தி நடாத்தும் தீர்மானம் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்திலேயே எட்டப்பட்டதாக அமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார். மாகாணசபை முறைமையை இல்லாதொழிப்பதற்கான கோரிக்கைகள் எழுந்துள்ள போதிலும் இந்த முறையை இல்லாதொழிப்பது இலகுவானதல்ல என அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார். தவிரவும், மகாண சபைக்கான தேர்தல்கள் நடாத்தப்படாத போதிலும், மாகாண சபைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் உள்ள ஒன்பது மாகாண சபைகளும் தற்போது செயலிழந்த நிலையில், ஆளுநரின் அதிகாரத்தின் கீழ்தான் அவை உள்ளன. இந்த மாகாண சபைகளுள் பலவற்றுக்கான தேர்தல் எப்போதோ - அதாவது - அரச தலைவருக்கான தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் என்பவற்றுக்கு முன்பாக நடந்திருக்க வேண்டியது. பல்வேறு இழுபறிகள் காரணமாகத் தேர்தல் பின்தள்ளப்பட்டு வந்த நிலையில், இப்போது மீண்டும் உறுதியான வகையில் கிடப்பில் போடப்பட்டிருக்கிறது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் புதிய உறுப்பினர்கள் பதவியேற்றுக் கொண்ட உடனடிப் பின்னான தருணத்தில் மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்பில் பரபரப்பு எழுந்திருந்தது. ஆணைக்குழுவின் புதிய உறுப்பினர்கள் தலைமை அமைச்சரைச் சந்தித்தவேளையில் மாகாண சபைத் தேர்தல்களை நடாத்துவதற்கான சட்ட வழிமுறைகளை ஆராயுமாறு அவர்களிடம் தலைமை அமைச்சர் கோரியிருக்கிறார் என்று செய்திகள் வெளிவந்திருந்தன.

### வலுக்கும் எதிர்ப்பு

அரசமைப்பின் 13ஆம் திருத்தத்திற்கு அமைவாக மத்திய அரசிற்கும் மாகாண அரசுகளிற்கும் இடையிலான அதிகாரப் பகிர்வின் பொருட்டு உருவாக்கப்பட்டவையே இந்த மாகாண சபைகள். 5 ஆண்டுகள் ஆயுளைக் கொண்ட மாகாண சபைகள் முறைமையை நீக்குவது தொடர்பில் ஆட்சிக்குள் குரல்கள் ஒலித்த வண்ணம் இருக்கின்றன. அதிலும் முக்கியமாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்களுக்குப் பொறுப்பாக இருந்த இராஜாங்க அமைச்சரான சரத் வீரசேகரவே இந்த விடயத்தில் கடும் போக்கினைக் காண்பித்து வருகிறார். இவருடன் அரசின் ஏனைய அமைச்சர்களான விமல் வீரவன்ச மற்றும் உதய கம்மன்பில ஆகியோரும் இந்த விடயத்தில் ஒத்து ஊதுகின்றனர்.

> **“மாகாணசபை முறைமையை இல்லா தொழிப்பதற்கான கோரிக்கைகள் எழுந்துள்ள போதிலும் இந்த முறையை இல்லா தொழிப்பது இலகுவான தல்ல.”**

கொரொனா பெருந்தொற்றுக் காலத்தில் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கு எதிர்ப்பதில் ஒரு வகை நியாயம் இருக்கின்ற போதிலும், சிங்கள தேசிய அமைப்புக்கள் சிலவற்றின் அழுத்தம் காரணமாகவும் இந்தப் பிற்போடல் அமைவதாகச் சொல்லப்படுகின்றது. காரணம், அவையும் மாகாணசபை முறைமைக்குச் சிவப்புக்கொடி காட்டுகின்றன.

### ஆதரவும் இருக்கிறது

இந்தியாவினுடைய ஆலோசனையுடன் நடைமுறைக்கு வந்த மாகாண சபை முறையை எளிதில் தூக்கி எறிந்துவிட முடியாது என்பதும் ஆட்சியாளர்கள் சிலரின் கருத்தாக இருக்கிறது. மஹிந்த அமரவீரவும் தன்னுடைய ஊடக சந்திப்பில் அதனை பிரதிபலித்திருந்தார்.

இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகரவும் மாகாணசபை விடயத்தில் ஆதரவுப்போக்கினை வெளிப்படுத்தியிருக்கிறார். இந்தியாவுடன் கலந்தாலோசிக்காமல் மாகாணசபை முறைமையை ஒழிக்க முடியாது என்ற சாரப்பட அவர் கருத்துத் தெரிவித்திருக்கிறார். அவ் வாறு செய்யாத பட்சத்தில் பன் னாட்டு ரீதியாக நாம் பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டிவரும் என அவர் எச்சரித்திருக்கிறார்.

### தடை போடும் திருத்தம்

1988ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க மாகாணசபை தேர்தல் சட்டம் நடைமுறையில் இருந்த வேளை 2017ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல் திருத்தச் சட்டமூலத்தினை நாடாளுமன்றில் நிறைவேற்றிக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. புதிய திருத்தத்தின் கீழ் கலப்பு விகிதாசார முறை பிரேரிக்கப்பட்டிருக்கிறது. எனினும் பழைய முறையில் விகிதாசார முறை மட்டுமே நடைமுறையிலிருந்தது. பழைய முறையில் தேர்தலை நடத்துவதானால் 2017ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க திருத்தச் சட்டத்தை முழுமையாக நீக்க வேண்டும். அல்லது அதற்குரிய புதிய சட்ட ஏற்பாடுகள் குறித்து ஆராயப்பட வேண்டும்.

### தேர்தலுக்கான செலவு!


மாகாணசபைத் தேர்தலை நடத்துவதானால் அதற்கு ஆகக்குறைந்தது 4 பில்லியன் ரூபா தேவைப்படும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் புதிய தலைவர் நிமல் புஞ்சிஹேவா குறிப்பிட்டிருக்கிறார். அத்துடன், தற்போதுள்ள முறையிலா அல்லது பழைய முறையிலா தேர்தல் நடைபெறவேண்டும் என்பதை நாடாளுமன்றமே தீர்மானிக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிடுகின்றார்.

1987இல் அறிமுகப்படுத்தப்பட்ட மாகாணசபை முறைமை அது ஏற்படுத்தப்பட்டமைக்கான காரணத்தினை முழுமை செய்யாமையினால் அடிக்கடி வெள்ளையானை என சர்ச்சிக்கப்படுகிறது. மத்திய அரசிடம் குவிந்து கிடக்கும் அதிகார விடயங்கள் மாகாண அரசுகளுடன் பகிரப்படுமானால் மகாண சபைகளும் வினைத்திறனாக பணியாற்ற முடியும். ஆனால், அத்தகைய அதிகாரப் பகிர்வு என்பது கைக்கெட்டாத நிலையிலேயே உள்ளது.

மறுபுறத்தில், கடந்த முறை வட மாகாண சபை தமிழ் தரப்புகளினால் வெல்லப்பட்டும் அது கனிசமான கனவுகளை நனவாக்கத் தவறியமையினால், ஏமாறிய மனநிலை ஒன்று மக்களிடம் பதிவாகியுள்ளமையும் கட்டாயம் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. ஆனால், தமிழர்கள் தமது ஏகோபித்த மனநிலையைப் பிரதிபலிக்க அந்தத் தேர்தலை நன்கு பயன்படுத்தினார்கள் என்பதும் மற்றைய மாகாணசபைகளில் இருந்து தம்மை வேறுபடுத்தும் வகையில் வடமாகாணசபை இயங்கியது என்பதும் இங்கு கட்டாயம் நினைவுகூரப்பட வேண்டியது.

கூட்டாட்சி (சமஷ்டி) முறைக்கான பிள்ளையார்சுழி எனக் கருதப்படும் மாகாகாணசபைகள் ஒப்பீட்டளவில் அதிகாரப்பகிர்விற்கான அடி அத்திவாரத்தினை அமைக்கின்றன என்றால் ஒப்புக்கொண்டேதான் ஆக வேண்டும். அந்த அடிப்படையில் தான் மத்திய ஆட்சி சில அதிகாரங்களை வழங்கத் தயக்கம் காட்டுகின்றது.

பயனற்ற ஒன்றென மாகாணசபை முறைமை நோக்கப்பட்டாலும், சில விடயங்களையேனும் சாதிப்பதற்கான வழிகளை மாகாணசபை கொண்டிருக்கின்றது. அதேவேளை இந்தியாவினை திருப்திப்படுத்தவும் இது தேவை. ஆகவே, கொரொனாவைக் காட்டி, மாகாண சபை தேர்தல் பின்நகரத்தப்பட்டாலும் அதனை விரைவாக நடத்த அழுத்தம் வழங்குவது தள்ளிப்போகக்கூடாது.



# “பாஸ்மதி” யாருக்குச் சொந்தம்...?

● காயா

பூநகரிப் பகுதியில் பிரத்தியோகமாக விளைவது மொட்டைக்கறுப்பான். உருண்டையை வடிவக் கொழுத்த - கறுத்த நெல் அரிசி அது. அதன் சுவையும் மணமும்கூட வித்தியாசமானது. அந்தப் பகுதி மண்ணில் விளைகின்ற தன்மை மொட்டைக் கறுப்பனுக்கேயுரியது. ஆட்டக்காரி என்பது இங்கெல்லாம் பரவலாக விளையும் நெல் ரகமாகவுள்ளது. மொட்டைக்கறுப்பானைப் போலவே இன்னும் பல பிரத்தியோக அரிசி வகைகள் இலங்கையில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் உள்ளன. அவை அந்தந்த நிலங்களில் விளையும் தன்மையுடையன. அதற்கேற்ற சுவையுடையன. மண்ணின் தன்மையால் அந்த நிலத்துக்கென்ற சிறப்புடன் விளைகின்ற இதுபோன்ற அரிசி வகைகள் பல.

அந்த வகையில்தான் இந்தியத் துணைக் கண்டத்தில் - அதன் வட திசை நிலத்தில் விளைகிறது பாஸ்மதி என்கிற அரிசி வகை. இந்தியத் துணைக்கண்டத்தின் பெருநிலப் பரப்பில் பெருமளவில் விளைகின்ற இந்த அரிசி இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய பிரிவுபட்ட நாடுகளில் விளைகின்றது. பிற்காலத்தில் பிரிந்த, ஆனால் ஒரே தரைத் தன்மையைக் கொண்ட அங்கு விளைகின்ற இந்த அரிசிதான் தற்போதைய பிரச்சினை.

நமது உள்ளூர்களில் விளைகின்ற ஆட்டக்காரியைப்போலவோ, மொட்டைக்கறுப்பானைப்போலவே அல்லாமல் மிக விசாலமான பெரும் நிலப்பரப்பில் - நாடளாவிய ரீதியில் (இந்தியாவின் பல மாகாணங்கள், பாகிஸ்தானின் பெரும் பகுதி, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில்) மிகப் பெருமளவில் விதைக்கப்படுகின்ற அரிசி வகை பாஸ்மதி. உலக நாடுகள் பலவற்றுக்குப் பல்லாயிரக்கணக்கான தொன் அளவில் ஏற்றுமதி செய்யப்படுகின்ற தரத்திலுள்ளது.

நீண்ட மெல்லிய வெண்ணிறமான அந்த அரிசியின் சுவையால் கவரப்பட்டவர்களும் உலகில் பல்லாயிரக்கணக்கில் இருக்கிறார்கள். அதனால் அதற்கு உலகளவில் இருக்கின்ற பெரும் மவுசு காரணமாக அமோக உற்பத்தி, விற்பனை என உலக சந்தையில் அதற்கென்று தனியான வர்த்தக நாமமும் புகழும் உண்டு.

அவ்வகைப் பாஸ்மதி எல்லை நாடுகளான பாகிஸ்தானாலும் இந்தியாவாலும் ஏற்றுமதி செய்யப்படுவதால் அந்த அரிசிக்குரிய உலக வர்த்தகக் குறி காட்டியைப் பெற்று அதற்கு உரிமம் கோருகின்ற விவகாரம் சூடு பிடித்திருக்கிறது.

பாஸ்மதி அரிசியைத் தனது உற்பத்தியாகப் பதிவு செய்வதற்கு இந்தியா முனைந்தபோது அதற்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியத்தில் ஒரு வழக்கைத் தொடுத்துள்ளது பாகிஸ்தான். இன்னும் உள்ளூரில் பாஸ்மதியை உற்பத்திப் பொருளாகப் பதிவு செய்யாத பாகிஸ்தான் இந்தியாவுக்கு எதிராகக் கொடி பிடிக்கிறது என்று வழமை போலவே இந்திய ஊடகங்களும், இந்தியத் தரப்பும் தமது தேசிய உணர்வை அள்ளியிறைக்கத் தொடங்கிவிட்டன. அவர்களின் வாதப்படி இந்த ஆண்டு மார்ச் மாதமளவில் கொண்டுவரப்பட்ட புவிவியல் குறி காட்டிகள் (பதிவு மற்றும் பாதுகாப்பு) சட்டத்தின்படி பாஸ்மதி இன்றும் பாகிஸ்தானில் பாதுகாக்கப்பட்ட தயாரிப்பு அல்ல என்கின்றனர்.

இந்தியப் பாஸ்மதி என்பது இந்தியாவில் ஒரு குறிப்பிட்ட புவியியல் பகுதியில் வளர்க் கப்பட்டு உற்பத்தி செய்யப்படுகின்ற அரிசி என்றும் இமய மலை அடிவாரத்துக்குக் கீழே இந்து - கங்கைச் சமவெளியின் ஒரு பகுதியில் இவை வளர்க்கப்படுகின்றன என்றும் இந்தியா கூறினாலும் அது பாகிஸ்தானிலும் வளர்க்கப்படுகிறது. நிலம் ஒன்றாகவும் நாடுகள் இரண்டாகவும் இருப்பதால் அதை இந்தியா மாத்திரம் சொந்தம் கொண்டாடிவிட முடியாது என்கிற வாதமும் சூடுபிடித்துள்ளது. ஆனாலும் ஐரோப்பிய ஒன்றியத்துக்குப் பெருமளவில் ஏற்றுமதி செய்யும் நோக்குடன் பாஸ்மதி அரிசிக்கான பிரத்தியேகப் புவியியல் காட்டிக் குறிச் சொல்லைப் பெறுவதற்கு இந்தியா முற்பட்டபோது அதற்குப் பாகிஸ்தானும் விண்ணப்பித்துள்ளது. இந்தியா தனித்துச் சொந்தம் கொண்டாடுவதற்கு அது தனது எதிர்ப்பைத் தாக்கல் செய்துள்ளது.


**இந்தி யாவுக்கு அடுத்தபடியாகப் பாஸ்மதியை உற்பத்தி செய்கின்ற பாகிஸ்தானின் பாஸ்மதியே சுவையில் உயர்ந்தது என்கின்றனர் பாஸ்மதிப் பிரியர்கள்**

ஐரோப்பிய ஒன்றியத்துக்குப் பாஸ்மதி அரிசியை ஏற்றுமதி செய்வதற்கான தனி உரிமையை இந்தியாவுக்கு வழங்குவதற்குத் தனது எதிர்ப்பைப் பாகிஸ்தான் சார்பாகப் பாகிஸ்தானின் வர்த்தக ஆலோசகராக இருக்கின்ற அப்துல் ரசாக் தாவூத் என்பவர் முன்வைத்தார். பன்னாட்டு ரீதியாகப் பாஸ்மதி ஏற்றுமதியில் இந்தியா 65 சதவீதத்தையும் பாகிஸ்தான் 35 வீதத்தையும் நிவர்த்தி செய்கின்றன. பெருமளவு நிலத்தில் பெருமளவு தொன் கணக்கில் பாஸ்மதியை இந்தியா உற்பத்தி செய்தாலும் இந்தியாவுக்கு அடுத்தபடியாகப் பாஸ்மதியை உற்பத்தி செய்கின்ற பாகிஸ்தானின் பாஸ்மதியே சுவையில் உயர்ந்தது என்கின்றனர் பாஸ்மதிப் பிரியர்கள்.

அதனால் பாகிஸ்தானின் பாஸ்மதிக்குப் பரவலாகக் கேள்விகள் உள்ளன. இந்த நிலையில் அதிகளவில் தனது சார்பில் பாகிஸ்தான் தனது அரிசியைச் சொந்தம் கொண்டாடுகின்றது. ஆனால் அது பெருமளவு வர்த்தக நாமத்துக்குத் தனது அரிசியைத் தயார்ப்படுத்தியிருக்கவில்லை என்பது இந்தியத் தரப்பின் வாதம். அதாவது, கடந்த செப்ரெம்பர் மாதம் 1ஆம் திகதியன்றைய ஐரோப்பிய ஒன்றியத்தின் அதிகாரபூர்வ இதழில் குறிப்பிடப்பட்டுள்ள ஐரோப்பிய நாடாளுமன்ற 1151/2012 விதிமுறை எண்ணின்படி விவசாயப் பொருள்கள் மற்றும் உணவுப்பொருள்களுக்கான தரத் திட்டங்கள் குறித்த குழு 50(2) (அ) இன் கீழ் இந்தியா பாஸ்மதிக்கான குறிச் சொல்லுக்கு விண்ணப்பித்திருந்த நிலையிலேயே பாகிஸ்தான் ஐரோப்பிய ஒன்றியத்துக்குப் பாஸ்மதியை ஏற்றுமதி செய்வதற்குக் குறிச் சொல்லைப் பெறுவதற்கு விண்ணப்பித்திருக்கிறது.

அத்தோடு இப்போதுதான் பாஸ்மதி தொடர்பான முன்னணி நிறுவனமாகப் பாகிஸ்தானின் வர்த்தக மேம்பாட்டு ஆணையகத்துக்கு அந்த நாட்டு அரசும் அங்கீகாரம் அளித்துள்ளதாம். பாகிஸ்தான் ஆண்டுதோறும் 5 லட்சம் முதல் 7 லட்சம் தொன் வரையான பாஸ்மதி அரிசியை உலகின் பல்வேறு பகுதிகளுக்கு ஏற்றுமதி செய்கிறது என்கிறது ஒரு தரவு. இதில் 2 லட்சம் முதல் 2 லட்சத்து 50 ஆயிரம் தொன் வரை ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது.





# தோற்றுவிட்டது முஸ்லிம் அரசியல்!

> முஸ்லிம்களின் சமய, சமூக உரிமைகளை இல்லாமல் செய்யவே முயற்சிக்கின்றார்கள். அதன் ஓர் அங்கமே ஜனாஸா எதிர்ப்பு விவகாரமுமாகும்

நேர்காணல்: அகில்

இன்று தோற்றுப்போன நிலையில் முஸ்லிம் அரசியல் உள்ளது. இதனால் அபிவிருத்தியும் இல்லை உரிமையும் இல்லை எனும் இரண்டும் கெட்டான் நிலையில் முஸ்லிம் சமூகத்தின் நிலைமை உள்ளது. இதன் வெளிப்பாடாகவே முஸ்லிம் அரசியல் கட்சிகளே தேவையில்லை என்கிற கருத்துக்களும் வெளிப்படுகின்றன என்று கவலையோடு தெரிவிக்கின்றார் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தவிசாளர் ஏ.எல்.அப்துல் மஜீத்.

இணைந்த வடக்கு - கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினராகவும் கல்முனை மாநகர சபையின் முன்னாள் பிரதி முதல்வராகவும் பதவி வகித்தவர் மஜீத். எல்லோராலும் "முழக்கம் மஜீத்" என்று அன்பாக அழைக்கப்படும் இவர், கட்சியின் பீரங்கிப் பேச்சாளராகவும் மதிக்கப்பட்டவர். கடந்த சில வருடங்களாக அவர் சுகவீனமுற்று வீட்டிலேயே தங்கியிருக்கிறார். தீவிர அரசியலில் இருந்து ஒதுங்கியிருக்கிறார்.

அண்மைக்காலங்களில் முஸ்லிம் அரசியல் குறித்து செம்மண் காத்திரமான கருத்துக்களை மக்கள் அரங்கத்திற்குக் கொண்டு வரும் நிலையில், அவரைச் சந்திக்கவேண்டும் என்று கேட்டதுமே சம்மதம் தெரிவித்து, தனது வீட்டுக்கு அழைத்து மலர்ந்த முகத்தோடும் தனக்கேயுரிய கம்பீரப் பேச்சுக் குரலோடும் உரையாடினார்.

**கே:** அண்மைய சில நாள்களாக முஸ்லிம்களுக்கு என்று ஓர் அரசியல் கட்சி தேவையில்லை என்கிற கருத்து முஸ்லிம்களிடமிருந்து குறிப்பாக முஸ்லிம் அறிஞர்களிடம் இருந்து வருகின்றதே?

**ப:** 1975 - 80களில் முஸ்லிம் அரசியல் கட்சி ஒன்று வேண்டும் என்கிற உணர்வுபூர்வமான கருத்து இருந்தது. இலங்கை சுதந்திரமடைந்ததிற்குப் பின்னர் 40 வருட கால இந்த வரலாற்றுத் தேவையை, வரலாற்றுக் கடமையை முஸ்லிம் காங்கிரஸின் நிறுவுனரான தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப் முடித்து வைத்தார். ஆனாலும் இன்று முஸ்லிம்களுக்கென தனிக்கட்சிகள் தேவையில்லை என்கிற கருத்து சமூகத்திலிருந்து வெளிப்பட்டுள்ளது என்பதை நான் மறுக்கவில்லை.

1989இல் 4 உறுப்பினர்களுடன் நாடாளுமன்றம் சென்ற தலைவர் அஷ்ரப் குறிப்பிடத்தக்க சாதனைகளை நிகழ்த்தினார். முஸ்லிம் சமூகத்தின் அவலங்கள், தேவைகள், புறக்கணிப்புக்கள் தொடர்பில் 100 மணி நேரத்திற்கு நாடாளுமன்றத்தில் குரல் எழுப்பி வரலாறு படைத்தார்.

அதுவரை இஸ்லாமியத் தமிழர்களென்றும் இஸ்லாமிய சிங்களவர்களென்றும் நாடாளுமன்றத்திலும் வெளியிலும் முன்வைக்கப்பட்ட வாதங்களைத் தகர்த்தெறிந்து இலங்கை முஸ்லிம்கள் தனித்துவமான சமூகம் என்பதை ஆணித்தரமாக நிரூபித்தார்.

1994 பொதுத் தேர்தலில் 7 ஆசனங்களை முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் வென்றெடுத்த அஷ்ரப், சந்திரிகா அம்மையாரின் ஆட்சியில் முக்கிய அமைச்சுப் பொறுப்பிலிருந்து நாட்டுக்கும் சமூகத்திற்கும் சிலாகித்துக் கூறப்படுமளவிற்குச் சேவைகள் புரிந்தார்.

அவர் அபிவிருத்தியும் உரிமையும் என்ற கொள்கையை ஒரு சேரக் கொண்டு சென்றார். இந்த நோக்கின் உச்ச பிரதிபலனாக இன்றும் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் திகழ்கின்றது.

இந்தப் பின்னணியில் இன்றைய முஸ்லிம் அரசியலை நோக்கினால் அபிவிருத்தியும் இல்லை உரிமையும் இல்லை என்கிற இரண்டும் கெட்டான் நிலையிலேயே இன்றைய அரசியல் வந்து நிற்கின்றது. இதன் எதிரொலியாகவே முஸ்லிம்களுக்கு அரசியல் கட்சிகள் தேவையில்லை என்கிற கருத்து சமூகத்தில் ஏற்பட்டுள்ளது.

**கே:** இந்த நிலமைக்குக் காரணம் என்ன?

**ப:** முஸ்லிம் அரசியல் இன்று கொள்கை சார்ந்தவர்களின் கைகளில் இல்லை. அரசியல் அதிகாரம் உள்ளவர்களிடம் கொள்கை சார் விடயங்கள் எதுவுமில்லை என்பதே இதற்கான காரணம்.

**கே:** இன்றிருக்கும் இந்தத் தலைமைகளின் இந்த நிலைப்பாட்டால் முஸ்லிம் சமூகம் அல்லது முஸ்லிம் காங்கிரஸ் கட்சி கண்ட பயன்கள் என்ன?

**ப:** முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை தலைவர் அஷ்ரப் என்ன நோக்கத்திற்காகத் தொடங்கினாரோ அவரது மறைவின் பின்னர் அந்த நோக்கத்தை நோக்கி ஒரு அடிகூட நகர முடியவில்லை. கட்சியிலிருந்து அதிகாரத்திற்கு வந்தவர்களால் காலத்திற்குக் காலம் காட்டிக்கொடுக்கும் செயற்பாடுகளே இடம்பெற்று வந்திருக்கின்றது. இதனால் அவர்களால் சமூகத்திற்கு பயன்தரக்கூடிய விடயங்களை முன்னெடுக்கமுடியவில்லை.

**கே:** முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தை ஆதரித்து வாக்களித்தமை கடும் விமர்சனங்களுக்கு உள்ளாகியுள்ளதே?

**ப:** நான் கடந்த 3 வருடங்களாக சுகவீனம் காரணமாக கட்சியின் உச்சபீடக் கூட்டங்களில் கலந்து கொண்டதில்லை. இருந்தபோதும் 20ஆவது திருத்தம் தொடர்பில் உச்சபீடக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டதாகவும் தலைமையின் முடிவை ஏற்று நடக்கத் தீர்மானிக்கப்பட்டதாகவும் அறிந்தேன். ஆனால் நாடாளுமன்றத்தில் விவாதம் நடந்தபோது தலைவர் ஹக்கீம் ஒரு பக்கமாகவும் ஏனைய 4 நாடாளுமன்ற உறுப்பினர்களும் மற்றொரு பக்கம் என்கிற நிலைப்பாடு முஸ்லிம் சமூகத்தையும் முஸ்லிம் காங்கிரஸையும் கடுமையாகப் பாதித்துள்ளது.

யார் எதைச் சொல்லி நியாயப்படுத்தியபோதிலும் கட்சியின் தவிசாளர் என்ற வகையிலும் தலைவர் அஷ்ரப்புடன் சேர்ந்து கட்சியை நாடுமுழுவதும் எடுத்துச் சென்றவன் என்ற வகையிலும் இவர்களது மோசமான நிலைப்பாட்டை என்னால் சகித்துக்கொள்ள முடியவில்லை.

எத்தனையோ திருத்தங்களுக்கு எதுவித நிபந்தனைகளுமின்றி வாக்களித்த முஸ்லிம் காங்கிரஸ் நமது கோரிக்கையான கரையோர மாவட்டத்தையாவது அவற்றில் உள்ளடக்க முயற்சிக்கவில்லை என்பது கவலைக்குரியது.

கரையோர மாவட்டம் வரவில்லையென்றால் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளைத் தூக்கி எறிவோம் என்று சூளுரைத்த நம்மவர்கள், கோட்டாபய அரசு கொண்டுவரவுள்ள புதிய அரமைப்பிலாவது அதனை உள்ளடக்காது விட்டால் 20ஆவது திருத்தத்திற்கு வாக்களித்ததன் மூலம் முஸ்லிம் மக்களுக்குக் கிடைக்கப்போவது ஒன்றுமில்லை.

**கே:** ஜனாஸா எரிப்பு விவகாரத்தில் ஆட்சியாளர்களின் பிடிவாதம் எதைக் காட்டுகின்றது?

**ப:** கோட்டாபய ராஜபக்ச அதிபர் தேர்தலுக்கான தனது அறிக்கையில் "ஒரே நாடு ஒரே சட்டம்" என்பதை நடைமுறைப் படுத்தப்போவதாக அறிவித்திருந்தார். கண்டியச் சட்டம், தேச வழமைச் சட்டம், ஷரியத் சட்டம் என்பவற்றை இல்லாமல் செய்வது என்பதே இதில் தொக்கியிருப்பது. குறிப்பாகச் சீனாவில் இதேபோன்ற சட்ட நடைமுறையே பின்பற்றப்பட்டு வருகின்றது.

இத்தகை காட்டுச் சட்டமே அங்கு (சீனா, மியான்மர் - ரொஹிங்கியா) முஸ்லிம்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டது. இதே நிலையை இலங்கையிலும் தோற்றுவித்து முஸ்லிம்களின் சமய, சமூக உரிமைகளை இல்லாமல் செய்யவே முயற்சிக்கின்றார்கள். அதன் ஓர் அங்கமே ஜனாஸா எதிர்ப்பு விவகாரமுமாகும்.

சில இனவாத, மதவாத பௌத்த தேரர்களினதும் பெருந்தேசியவாதிகளினதும் முனைப்பும் இதில் அடங்கியிருக்கின்றது.

காதி நீதிமன்றம், முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் போன்ற முஸ்லிம்களின் உரிமைகளுக்கும் வேட்டு வைக்க வேண்டும் என்பதும் இவர்களது இலக்காகும். நாம் விழிப்புடன் செயற்படவேண்டும்.

**கே:** ஜனாஸா எரிப்புத் தொடர்பில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் உரத்துக் குரல் கொடுத்திருப்பது தொடர்பில் என்ன நினைக்கிறீர்கள்?

**ப:** ஆரோக்கியமான நிலைப்பாட்டின் தொடக்கப் புள்ளியாகவே நான் இதனைப் பார்க்கின்றேன். விரும்பியோ விரும்பாமலோ வடக்கு, கிழக்கு தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் பல்வேறு நெருக்கடிகள், துயரங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

பௌத்த சிங்கள மேலாண்மையை விரிவாக்குவதற்காகவே இந்த இரு சமூகங்களையும் மோத விட்டுத் தமது இலக்குகளை அடைந்தனர் என்கிற வரலாறு தொடர நாம் இனியும் இடமளிக் கக்கூடாது.

அத்தகைய சூட்சிகரமான செயல்திட்டங்களுக்குப் பலியாகி விடாமல் இரு சமூகங்களினதும் அறிவாளிகள், அரசியல்வாதிகள் இணைந்து தமது விருப்பு வெறுப்புக்களை ஓரமாக வைத்துவிட்டு இரு சமூகங்களினதும் அரசியல் விருப்புக்கள், பொதுவான இலக்குகளை அடைவதற்கு முயற்சிக்கவேண்டும்.

தமிழ்ச் சமூகத்திற்குள் முற்போக்கு சிந்தனையுள்ள அரசியல்வாதியாக நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் போன்றோரைப் பார்க்க முடிகின்றது. அதேபோன்று முஸ்லிம் சமூகத்திலிருந்தும் பரந்துபட்ட சிந்தனையுடைய இளைஞர்கள் அரசியலுக்கு வரவேண்டும்.

**கே:** இன்றைய அரசியல் சூழலில் ஈழத்துடன் இணைவதா, முஸ்லிம் தேசத்தை நிறுவுவதா என்பதை முஸ்லிம்கள் முடிவு செய்யவேண்டும் என்கிற கருத்தும் வெளிப்படுத்தப்படுகின்றதே, அது பற்றி என்ன சொல்கிறீர்கள்?

**ப:** இலங்கையில் இப்போதிருக்கும் அரசியல் சூழலில் ஈழம், முஸ்லிம் தேசம் என்கிற கதைகளுக்கு அறவே இடமில்லை. அதேவேள்ள வடக்கு - கிழக்கு இணைப்பு என்பதைப் பேரினவாதச் சிந்தனை கொண்ட கோட்டா அரசு அனுமதிக்கப்போவதுமில்லை.

**கே:** கல்முனை வடக்கு தமிழ் உப பிரதேச செயலக தரமுயர்த்தல் தொடர்பாக உங்கள் நிலைப்பாடு என்ன?

**கே:** சமூக ஒற்றுமைக்காகச் செயற்படுவதே எனது குறிக்கோள். யாசகம் கேட்பவனின் கால் புண் போன்று இந்த விவகாரத்தை இன்னும் நீடிக்க விடக்கூடாது. சுமூகமான பேச்சு, விட்டுக் கொடுப்புக்களுடன் இதற்கு நியாயமான தீர்வு எட்டப்பட வேண்டும்.

# என்நாளும் நலம் வாழ மருத்துவம்



மருத்துவர் - கந்தையா சோதிதாசன்

## மாரடைப்பை தடுக்குமா மரக்கறி பழவகைகள்..

*இனிய சுவை அன்னாசி இஞ்சியோடு எலுமிச்சை*
*கனிந்ததொரு மாதுளை வெள்ளரிக்காய் - சின்ன*
*வெங்காயம் பீற்ரூட் முள்ளங்கி நல்லகரட் கோவா*
*நம்காயம் காக்கும் நம்பலாம் நம்முணவே நல்மருந்து.*

*குருதி நாளங்களில் கொழுப்பு படிவதால் இருதய அடைப்பு ஏற்படுகிறது. இது மனிதனை இறப்புவரை அழைத்துச் செல்கிறது*
*இன்று இதற்கான நவீன சிகிச்சைகள் ஏராளம் இருந்தாலும் வறுமைக்கோட்டுக்குள் இருக்கும் ஏழை மக்களுக்கு இது பெரும் பொருளாதாரச் சுமையை ஏற்படுத்தி விடுகிறது.*

பொருட்செலவில்லாது மாரடைப்பு நோயிலிருந்து விடுதலை பெற வழியிருக்கிறதா என்றால் இருக்கிறது என்கிறார்கள் இயற்கை மருத்துவர்கள். மரக்கறி பழவகைகளை அதிகம் உணவில் சேர்த்துக்கொண்டாலே இதயம் பலம்பெற்று குருதியில் கொழுப்பின் அளவைக் கட்டுபடுத்தி நலம் பெறலாம்.

அந்த வகையில் பின்வரும் மரக்கறிகள் பழவகைகள் மற்றும் மூலிகைகள் பயனுள்ளதாகின்றது

### கரட்

இதை அதிகம் உணவில் (பச்சையாக) சேர்த்துக் கொள்வதால் கொலஸ்ரோல் அளவு குறைவடைகிறது. இரத்தம் சுத்தமாகிறது.

### பீ ற் ரூ ட்

போலிக் அமிலம் மற்றும் இரும்பு சத்து இதில் அதிகம் இருப்பதால் இதை உண்பவருக்கு குருதிச் சோகை வருவதில்லை இதுவும் கொலஸ்ரோல் அளவை குறிப்பிடத்தக்க அளவில் குறைக்கிறது

### இஞ்சி

இது குருதிகுழாய்களில் இரதம் உறைவதை தடுத்து மாரடைப்பு ஏற்படுவதை தவிர்க்கிறது. இதை நாளாந்த உணவில் சுவையூட்டியாக சேர்த்துக்கொள்ளலாம். காலையில் இஞ்சி, தேன் சேர்த்து தொடர்ந்து அருந்தி வர கொலஸ்ரோல் அளவை கட்டுப்பாடில் வைத்திருக்கலாம்.

### வெங்காயம்

இதை இதயத்தின் தோழன் என்று சொல்லலாம். இது குருதியில் கொழுப்பு சேர்வதை இயல்பாகவே கரைத்து, உடலெங்கும் குருதி ஒட்டத்தைச் சீர் செய்கிறது.

### அப்பிள்பழம்

உடல் எடையை குறைக்கவும், உடலில் குருதி ஒட்டத்தை அதிகரிக்கவும் உதவுகிறது.

அப்பிளில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் வைட்டமின் சி உள்ளது. அதுவும் ஒரு நாளைக்கு உடலுக்கு தேவையான 14% அத்தியாவசிய வைட்டமின்களை உள்ளடக்கியிருப்பதால், இதனை தினமும் சாப்பிடுவது நல்லது. மேலும் அப்பிளில் பெக்டின் என்றும் கரையக்கூடிய நார்ச்சத்து அதிகம் உள்ளதால், அவற்றை சாப்பிட உடலில் உள்ள கெட்ட கொலஸ்ட்ராலானது கரைந்துவிடும்.

### அன்னாசி

இதுவும் குருதியைச் சுத்திகரிக்கும் என்பதோடு உடல் எடையைக் கணிசமானளவு குறைக்கிறது

### எலுமிச்சை

குருதி ஓடத்தை அதிகரித்து இதயச் செயற்பாட்டிற்கு உதவுகிறது. உடலுக்கு சுறு சுப்பையும் உற்சாகத்தையும் வழங்குகிறது.

### உள்ளி

அன்றாட சமையலில் சுவையூட்டியாக சேர்க்கப்படும் உள்ளியும் இஞ்சி போன்று கொலஸ்ரோலை கட்டுப்படுத்துவதில் பெரிதும் பங்களிக்கிறது.

### வெண்பூசணி

வெண்பூசணிக்காயின் சாறு 30 மில்லியளவு எடுத்து ஒரு தேக்கரண்டி தேன் சேர்த்துச் சாப்பிட்டால் இதய பலவீனம் நீங்கும். குருதி சுத்தமாகும். அத்துடன் இதில் இருக்கும் பீட்டா கரோட்டின் மற்றும் விட்டமின் சத்துக்கள் புதிய செல்கைளை உற்பத்தி செய்ய உதவுகிறது. இவற்றோடு முள்ளங்கி, வெண்டைக்காய் என்பனவும் பப்பாளி, மாதுளை போன்ற பழ வகைகளும் குருதியில் கொழுப்பு சேராமல் தடுத்து மாரடைப்பில் இருந்து நம்மை காப்பாறுகின்றன.

எனவே இவற்றை உணவில் அதிகம் சேர்த்து கொள்ளவதால் மாரடைப்பு வருமோ என்ற பயமின்றி வாழலாம். நம் உணவே நமக்கு மருந்தாகிறது.

# உங்கள் உடலை நீங்களே காதலியுங்கள்!



உங்கள் உடல் உள்ளபடியே இருப்பதை சாதகமாக அணுகவேண்டும் என்கிற எண்ணத்தை விதைப்பதில் நடிகை ஷமீரா ரெட்டி அக்கறை காட்டி வருபவர். வாரணம் ஆயிரம் படத்தில் இளசுகளின் மனதைக் கொள்ளைகொண்ட வெள்ளையுடைத் தேவதையாக வலம் வந்த அவர், திருமணத்திற்குப் பின்னர், தான் அம்மா ஆனதன் பின்னரும் தனது உடலை வெளிப்படுத்தத் தயங்கியதில்லை. உங்கள் உடலைப் பற்றி நீங்கள் சாதகமாக எண்ணவில்லை என்றால் யார் எண்ணுவார்கள் என்று கேட்கிறார் அவர். சமீபத்தில் தனது இரு குழந்தைகளோடு கடற்கரையில் பொழுதை மகிழ்ச்சியாகக் கழித்த படங்களைப் பதிவிட்டுள்ள ஷமீரா, காதலையும் தன்னம்பிக்கையையும் உங்கள் உடலுக்குத் தேவை அது அதனைக் கேட்டுக் கொண்டே இருக்கும் என்று பதிவிட்டுள்ளார். நீங்கள் எப்படியிருக்கிறீர்களோ அப்படியே நீங்கள் அழகுதான் என்றும் எழுதியிருக்கிறார். நான் மிகச் சிறந்த உடலமைப்பைக் கொண்டிருந்தபோதும்கூட நீச்சலுடை என் உடலில் கச்சிதமாகப் பொருந்துவதில் ஆங்காங்கே குறைகள் இருக்கத்தான் செய்தன. ஆனால், இன்று என்னுடைய இரு குழந்தைகளும் என்னைச் சுற்றிக் குதூகலித்திருக்கும் நிலையில் நான் மேலும் மகிழ்ச்சியாகவும் தன்னம்பிக்கையோடும் உணர்கிறேன் என்றும் அவர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

# நிலவைப் பார்த்து வானம் சொன்னது...

எழுத்தாளர் மு.சிவநேசன் எழுதும் புதிய தொடர்



4

இரண்டாம் உலகப் போரில் ஈடுபட்ட பிரிட்டனை சேர்ந்த கப்டன் ரொம் மோர் கடந்த சித்திரை (ஏப்ரல்) மாதம் ஒன்பதாம் திகதி ஒரு வக்கரின் உதவியுடன் நடைப் பயணத்தை ஆரம்பித்து இருந்தார். அவரது இலக்கு தனது நூறாவது பிறந்த நாளான 30, ஏப்ரல் 2020 அன்று ஆயிரம் பவுண்டுகளை மருத்துவ துறையினருக்கும் நோயாளிகளுக்குமான நிவாரண நிதி சேர்ப்பதே. உதவி செய்வதற்கு வயது ஒரு தடையல்ல என்பதை அவர் நிரூபிக்கத் தவறவில்லை. சும்மா வெட்டியாக இருப்பவர்கள் இந்த வரலாற்றை மனதிலே பதித்தாக வேண்டும்.

2018இல் தான் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு புற்றுநோய்க்கான சிகிச்சை பெற்றவேளை மருத்துவர்கள், தாதியர்கள், மற்றும் பணியாளர்கள் காட்டிய அர்ப்பணிப்புமிக்க அதீத அக்கறைக்கு நன்றிக்கடனாகவே அவர் இதனைத் தொடக்கி இருந்தார்.

இவரது பணி ஊடகங்களில் பிரபல்யமானதை தொடர்ந்து அன்பளிப்புக்கள், உதவுதொகைகள் குவியலாயின. ஆயிரம் பவுண்டுகள் மட்டுமே இலக்கு என்று ஆரம்பித்த அவருக்கு பத்து நாள்களில் கிடைத்த தொகையோ 17 மில்லியன் பவுண்டுகள். இத்தொகை அவரது நூறாவது பிறந்த நாளன்று 33 மில்லியனை எட்டி விட்டது.

சுமார் 15 இலட்சம் பேர் அவருடைய முயற்சிக்கு பங்களிப்பை நல்கி இருந்தார்கள்.

தனது நூறு வயதை நெருங்கும் நிலையில் உடலை மிக வருத்தி வெறும் ஆயிரம் பவுண்டுகளுக்காக நூறு லைப்ஸ் தூரத்தை தனக்குத்தானே இலக்காக நிர்ணயித்து, அதாவது 25 மைல்கள் தூரத்தை கடக்க திட்டமிட்டு இருந்த வேளையில், அது சித்திரை பதினாறாம் திகதியே எட்டப்பட்டுவிட, சிவனே என்று ஒய்ந்து இருக்காமல், நடையினை இடைநிறுத்தாமல், மேலும்



ஒரு நூறு லைப்ஸ் தூரத்தை இலக்காக நிர்ணயித்த துணிச்சலையும் அர்ப்பணிப்பையும் என்னவென்பது.

இதற்கு கிடைத்த வெகுமதிதான் வைத்தியசாலைப் பணிகளுக்காக அவர் சேகரித்த அந்த 33 மில்லியனாக மிளிர, விடயம் தலைமை அமைச்சரதும் எலிசெபெத் மகராணியினதும் கவனத்தை ஈர்த்து விட்டது. பிரிட்டிஷ் அரசு அவரது முயற்சியை மெச்சி கௌரவ கேணல் பதவியையும் வழங்கி இருந்தது.

அவரது பிறந்த நாளன்று கிடைத்த வாழ்த்து மடல்களைப் பிரிக்க இருபது பேர் பணிக்கு அமர்த்தப்பட்டனர்.

பிரிட்டன் விமானப்படையின் ஹோக்கர் ஹரிக்கேன் எல்.எவ். 363 ரக விமானமொன்று அவரது வதிவிடத்திற்கு மேலாக பறந்து மரியாதை செலுத்தியது.

இவ்வளவு தூரம் நல் உள்ளம் படைத்த கொடையாளிகளை தான் எதிர்பார்த்திருக்கவில்லை என்பதே அவரது பிரமிப்பு.

தவிர முடக்க நிலையிலும் அரண்மனைக்கு அழைக்கப்பட்ட முதல் மனிதனாக, மகாராணியால் நேரடியாக பதக்கமும் கௌரவமும் வழங்கப்பட்ட நிகழ்வினில் அவர் நெகிழ்ந்து போயிருக்கிறார்.

பிரிட்டன் றெயில்வே தொடருந்து ஒன்றிற்கு அவரது பெயரை கௌரவமாக வைத்து விட்டது. பொலிசாரும் அதியுயர் மோப்ப நாய் ஒன்றிற்கு அவரது பெயரை சூட்டி இருந்தனர். இவ்வாறாக இனி உலகம் உள்ளவரை இந்தப் பெயரும் வரலாற்றில் நிலைக்கப் போகிறது.

இதனைத் தொடர்ந்து செய்திகள் புயலாக கிளம்பியதும் உலகெங்கும் பல முதியவர்கள் தள்ளாத வயதிலும் கொரோனாவிற்கு எதிராக பல விழிப்புணர்வுக்காக வழிகளைத் தேடிக் கொண்டனர்.

> **செய்திகள் புயலாக கிளம்பியதும் உலகெங்கும் பல முதியவர்கள் தள்ளாத வயதிலும் கொரோனாவிற்கு எதிராக பல விழிப்புணர்வுக்கான வழிகளைத் தேடிக் கொண்டனர்.**

போதை, பொய், களவென்றும், பல்சர், போனென்றும், தற்கொலை, விபத்தென்றும் பெற்றோரை வதைக்கும் இளைஞர்களுக்கு இது சமர்ப்பணம்.


இவ்வாறாக உலகெங்குமுள்ள பலர் தங்களுடைய இயலாமையிலும் பிறரது துயர்கண்டு துடிக்கின்ற நிலமையை கொரோனா பேரனர்த்தம் தந்துவிட்டது. சமூக ஊடகங்களே அவர்களை முதலில் வெளிச்சம் போட்டுக் காட்டி வருகின்றன. இத்தகைய தியாகிகள் எமது மத்தியிலும் இலைமறை காயாக செயற்பட்டுக் கொண்டே இருக்கிறார்கள்.

முடக்க நிலையில் உள்ளவர்களுக்கு உணவு தேவைப்படின் என்னை தொடர்பு கொள்ளுங்கள் என்று ஒரு தொலைபேசி இலக்கம் யாழ்ப்பாண முகநூலில் உலவிடக் கண்டோம். அந்த இலவச விநியோகத்திற்கு எவ்வளவு பெரிய மனசு வேண்டும்.

இத்தகையவர்களின் பணிகளை இனங்கண்டு ஆராய்ந்து விபரமான கட்டுரைகளை வரைதலில் எமது உள்ளூர் அச்சு ஊடகங்கள் அக்கறை காட்டவேண்டும். இத்தகைய பணிகளை பிரபல சர்வதேச பத்திரிகைகளே செய்து வருகின்றன. இதில் தகவல் சேகரிப்பு, அனுமதி, உரிமங்கள், படப்பிடிப்பு, பேட்டிகள் எனத் தமது வளங்களை ஈடுபடுத்தி மிகவும் அக்கறையாக அந்த ஊடகங்கள் செயற்பட்டு வருகின்றன.

இத்தகைய முயற்சிகள் தியாகத்திற்கான உந்துசக்தியாக விளங்குவதோடு மேலும் பலரை அவ்வாறான செயற்பாடுகளை நோக்கி ஈர்க்கவே உதவும்.

## நீச்சலடித்த விநோத நத்தார்த் தாத்தா...!



கடந்த கிறிஸ்மஸ் தினத்தன்று தாய்லாந்தின் தலைநகர் பாங்கொங்கிலுள்ள மீன்கள் காட்சியகம் ஒன்றில் நத்தார் தாத்தா நீச்சலடித்தமை அங்கு சென்றவர்களை ஆச்சரியத்துக்குள்ளாக்கியது.

மீன்களால் சூழப்பட்ட அந்த நத்தார்த்தாத்தா சுவாசக் கருவிகளை அணிந்தவாறு நீச்சலடித்தமையே இவ்வாறு பலரையும் வெகுவாக ஈர்த்தது. இந்த நீச்சலடிக்கின்ற நத்தார்த் தாத்தவைப் பார்வையிடுவதற்காக அந்தக் காட்சியகத்தில் குழந்தைகள் குவிவது அதிகரித்தது. கொரோனாத் தொற்றுக் காரணமாகக் கிறிஸ்மஸ் களியாட்டங்கள் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் இம்முறை பொது இடங்களில் நத்தார்த் தாத்தாக்களின் ஆட்டங்களும் பாட்டுகளும் தவிர்க்கப்பட்டிருந்தன. இந்த நிலையிலேயே மேற்படி மீன்கள் காட்சியகத்தின் பெரிய நீர்த் தொட்டிக்குள் நத்தார்த் தாத்தா நீச்சலடித்து அனைவரையும் ஈர்த்துள்ளார்.

மீன் தொட்டிக்குள் நீச்சலடிக்கும்போது அவர் தனது கையில் சில உணவுப்பொருள்களை வைத்திருக்க அவற்றை அங்குள்ள மீன்கள் வந்து உண்டும் சென்றன. குறித்த காட்சியகத்தின் மீன்களைக் கவனித்துப் பராமரித்துத் தொட்டிகளைச் சுத்தம் செய்கின்ற ஊழியரான நிக்காகரன் சாரிவோங் என்பவரே இவ்வாறு நத்தார் தாத்தாவாகத் தன்னை அலங்கரித்தவராவார். “இது கிறிஸ்துமஸ் நேரம், எனவே மீன்களுக்கு உணவளிக்கவும் குழந்தைகளை மகிழ்ச்சிப் படுத்தவும் இதைச் செய்கிறேன்” என்றுள்ளார் அவர்.



# சாம்பலில் இருந்து மீண்ட உணவகம்...!



● பொன்வண்டு

ஐரோப்பிய - மேற்குலக நாடுகளில் நிலவுகின்ற பண்பாடுகள் பிறந்த தேசம் என்று வரலாற்றாசிரியர்களால் குறிப்பிடப்படுகின்ற இடம் உரோம். அதைத் தன்னகத்தே கொண்ட இத்தாலியில் தனிச் சாம்ராச்சியமாக அமைந்தது உரோம்.

உரோம் மாத்திரமன்றி இன்னும் பல இடங்கள் பழமை வாய்ந்தவையாகவும், பண்பாடு மற்றும் கலை கலாசாரங்களின் பிறப்பிடங்களாகவும் கண்டறியப்பட்டு இத்தாலியில் முத்திரை குத்தப்பட்டுள்ளன. இவ்வாறு அங்கு அடையாளப்படுத்தப்பட்டுள்ள புராதன இடங்கள் ஏராளம்.

அவற்றுள் ஒன்றுதான் ஐக்கிய நாடுகள் சபையின் யுனெஸ்கோவால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள இத்தாலியின் நேபிள்ஸ் நகரத்திலிருந்து, தென் கிழக்காக 23 கிலோ மீற்றர்கள் தொலைவில் உள்ள புராதன நகர்களில் ஒன்றான பொம்பெயி. கிறிஸ்துவுக்குப் பின் 79 களிலேயே அங்குள்ள வெசூவியஸ் என்கிற எரிமலை வெடித்து அதனால் விசிறப்பட்ட சாம்பல்களுள் புதைந்து அழிந்த



போன நகரம் அது. அந்த நகரில் 4 முதல் 6 மீற்றர்கள் வரையில் அந்த எரிமலைச் சாம்பல் படிந்துள்ளது என்று பிற்பட்ட ஆய்வுகளில் இருந்து தெரிய வந்தது. அதன் பின்னர் 1749ஆம் ஆண்டுதான் அந்த இடம் கண்டறியப்பட்டது. அதுவும் தற்செயலாக...


அதுவரையில் இந்த நகரம் எரிமலைச் சாம்பலுக்குள் தொலைந்து போயிருந்தது. அதன் பின்னர் இந்த நகரில் முன்னெடுக்கப்பட்ட ஆய்வுகளில் இருந்து உரோமப் பேரரசின் காலத்தில் இந்தப் பகுதியிலும் மக்களின் வாழ்க்கை, பண்பாடுகள் மேலோங்கியிருந்தன என்று தெரிய வந்தது. ஆராய்ச்சியாளர்கள் குவியத் தொடங்கினர். அதிக கவனம் பெறத் தொடங்கியது.

காலப்போக்கில் வருடத்துக்கு 25 லட்சம் வரையிலான சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கின்ற சுற்று லாத் தளமாகவும் மாறியது. இந்த நிலையில்தான் புதையுண்ட அந்த நகரில் புதியதொரு கண்டு பிடிப்பு வெளிப்பட்டுள்ளது.

### பொம்பெயி உணவுக் கடை

ஒரு சில நாள்களுக்கு முன்னர் பொம்பெயியில் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களால் பழங் காலத்தில் இயங்கிய தெருவோர உணவுக் கடை என்று கருதத்தக்க விற்பனைக் கூடம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. கி.பி 79 இல் எரிமலை வெடிப்பில் புதைந்த பொம்பெயில் வீதியோரத்தில் வைத்து உரோமானிய வழிப்போக்கர்களுக்கு உணவுகளை விற்பனை செய்த இடமாக இது இருக்கலாம் என்கிற கோணத்தில் அவர்கள் அந்தப் பகுதியைச் சல்லடையிட்டு ஆராய்ந்தனர்.

அந்தப் பகுதியில் தொல்பொருள் பூங்கா என்று அடையாளப்படுத்தப்பட்டிருந்த ரெஜியோ வி என்கிற தளத்தில்தான் இந்த வீதியோரக் கடை கண்டுபிடிக்கப்பட்டது. இந்த வீதியோரக் கடையின் முற்புற விற்பனைப் பகுதிச் சுவரில் ஓவியங்கள் சில காணப்படுகின்றன. இத்தனை வருடங்களுக்குப் பிற்பாடு கூட நிறம் மங்கிப்போகாமல் இருக்கின்ற அந்த ஓவியங்கள் குறித்தும், முன்புறத்தில் குழி வடிவில் உணவு வகைகளைத் தாங்கும் - காட்சிப்படுத்தும் விதத்தில் அமைக்கப்பட்ட கட்டமைப்புகள் குறித்தும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்போது வரையான ஆராய்ச்சிகளின் முடிவின் படி அந்தக் குழிகளுக்குள் சூடான பானங்கள் மற்றும் உணவுப் பொருள்கள் வைக்கப்பட்டிருந்தன என்றும், சூடான உணவைக் கொண்ட அந்தக் குழிவான குவளைகளில் கிட்டத்தட்ட 2ஆயிரம் ஆண்டுகள் பழமையான உணவின் தடயங்கள் காணப்பட்டன என்றும் தெரியவந்திருக்கிறது.



### முன்புற விளம்பர ஓவியங்கள்

வீதியோரக் கடையின் முன்புறத்தில் மின்னும் வர்ணங்கள் கொண்டு ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. அந்த ஓவியங்கள் மூலம் குறித்த கடையின் வரவேற்புப் பகுதி அலங்கரிக்கப்பட்டிருக்கிறது என்றும் வரையப்பட்ட இடத்துக்கு நேராகவுள்ள குழிகளில் இட்டு விற்கப்பட்ட உணவில் உள்ள பொருள்களின் ஒரு பகுதியாக இருந்த விலங்கு களையே இவ்வாறு முன்புறத்தில் வரைந்திருக்கலாம் என்றும் ஆராய்பவர்கள் தெரிவிக்கிறார்கள்.

இதன்படி அந்த முன்பக்கச் சுவர் - குந்தில் கோழி, வாத்துகள், நாய் போன்ற மிருகத்தின் உருவம் ஆகியன வரையப்பட்டுள்ளன. அத்தோடு அலங்கரிக்கப்பட்ட வெண்கலக் கிண்ணம், சமையல் பாத்திரங்கள், குவளைகள், சமைக்கப் பயன்படுத்தப்படும் பீங்கான் ஜாடிகள் என்பனவும் அங்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

### உணவுத் தடயங்கள்

வீதியோரக் கடையின் முன்புறத்தில் உணவு காட்சிப் படுத்தப்பட்டிருந்த குழி வடிவக் கொள்கலன்களில் இருந்து பன்றி இறைச்சி, மீன், நத்தைகள் மற்றும் மாட்டிறைச்சி ஆகியவற்றின் தடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன என்று இந்த ஆராய்ச்சிக்குப் பொறுப்பான தலைமை அதிகாரி அமோரெட்டி என்பவர் கூறியிருக்கிறார்.

இந்தக் கண்டுபிடிப்பு உணவுகளைத் தயாரிப்பதற்குப் பழங் காலத்தில் பல்வேறு வகையான விலங்குப் பொருள்கள் பயன் படுத்தப்பட்டதற்குச் சாட்சியமாகிறது என்றும் அவர் கூறியுள்ளார். பொம்பெ தொல்பொருள் பூங்காவின் இயக்குநர் மாசிமோ ஒசானா என்பவரின் கருத்துப்படி இந்த ஆரம்பப் பகுப்பாய்வுகளில் இருந்து தெருவோரக் கடையின் முன்புறத்தில் வரையப்பட்ட ஓவியங்கள், அங்கு விற்கப்பட்ட உணவு மற்றும் பானங்களையே குறிக்கின்றன என்பதாகவே அமைந்தது. எது எப்படியிருப்பினும் கிரேக்க - உரோமானியப் பழங்கால வாழ்க்கையின் அரிய ஆவணமாக்கமாக இப்போது பொம்பே அமைந்துவிட்டது.



### இதுவரையான ஆய்வுகள்

18ஆம் நூற்றாண்டில் இருந்து அகழ்வுகள் மற்றும் ஆய்வுகளை பொம்பெயில் முன்னெடுத்து வருகின்ற நிலையில் தற்போதுதான் 'ஃப்ரெஸ்கோஸ்' என்றழைக்கப்படும், ஈரமான சுண்ணாம்புக் கல் மீது வரையப்பட்டிருந்த ஒரு வகையான ஓவியங்கள் மற்றும் சுடுமண் பாத்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

தற்போது கண்டுபிடிக்கப்பட்ட ஓவியங்களில் காணப்படும் படங்கள் மூலம் இந்த நகரத்தில் இயங்கிய துரித உணவகமாக இது இருந்திருக்கலாம் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். பன்றி இறைச்சி, மீன், நத்தை, மாட்டிறைச்சி போன்ற இறைச்சிகளைப் பயன்படுத்தியதற்கான தடயங்கள் இந்தப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட பாத்திரங்களில் காணப்படுவதும் உறுதியாகியிருக்கிறது.

இதற்கு முன்னர் கடந்த மாதம் இந்தப் பகுதியில் முன்னெடுக்கப்பட்டிருந்த ஆய்வில் எரிமலைச் சாம்பலில் புதைந்திருந்த உரோமப் பேரரசின் ஆண்டான் - அடிமை உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டன. எரிமலைச் சாம்பலில் புதைந்து கிடக்கும் பொம் பெய் நகரத்தின் மூன்றில் ஒரு பகுதி, இன்னும் ஆராய்ச்சி செய்யப்படாமல் இருக்கிறது. அந்தச் சாம்பலைக் கிளறிப் பார்க்கும்போது இன்னும் பல புதிய விடயங்கள் வெளிப்படலாம் என்கிற எதிர்பார்ப்புக்கு வித்திட்டுள்ளது தற்போதைய கண்டுபிடிப்பான தெருவோர உணவகம்...!

## காதலின் சொல்

1
கனவின் பாரத்தை கண்கள் தாங்காது என்கிறாள்
நம் இடையே உள்ள காற்றின் இடைவெளிகளையும்
நேசத்தால் நிரப்பு என்கிறாள்.
இது பேசும் நேரமல்ல என்கிறாள்..
அந்த நிலவினை மூடிவிட்டு வந்துவிடு என்கிறாள்.
அவன் இப்போது வழங்கும் வள்ளல் ஆகிறான்.
ஆசையின் போர்வையால் அவளை
- போர்த்திக்கொள்கிறான்.
ம்ம் அவள் வெட்கத்தின் இடை வெளிகளில்
எட்டி பார்க்கிறது இந்த நிலவு .....

2
அன்பே இந்த நிமிடம்..
காற்றை அசையாதிருக்கச் சொல்
நிலவை கிழக்கே வருகின்ற மேகத்திற்குள்
- மறையச்சொல்.
வெட்கத்திற்கு விடுமுறை என்று அறிவி ....
நம் காதலின் சுதந்திரத்தை கொண்டாடு
இந்த நிமிடம் முத்தத்தில் தொடங்குகிற நமது ஆடலை
பாடட்டும் இரவு.
நீ இந்த இசையை மட்டும் நிறுத்தாதே

- அஞ்சு

## மறைந்தது தொன்மை...!

களுத்துறை - தெடம்கொட பிரதேசத்தின் க்ளோடன் தோட்டத்தின் ஹெதரலியா பிரிவில் வசித்து வந்த வேலு பாப்பானி என்கிற பெண்மணி இயற்கை எய்திய செய்தி வெகு பிரபலம்...! ஏன் தெரியுமா...? தனது 117ஆவது வயதில் இறந்த அவர்தான் இதுவரை இலங்கையின் அதிக வயதுடைய நபராக இருந்துள்ளார்....! இதனால்தான் இலங்கையின் தொன்மையான நபர் மறைந்தார் என்று அவருடைய இறப்புப் பரவலாகப் பேசப்படுகிறது.



உணவு உட்கொள்ளச் சிரமப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், அவர் இறந்துள்ளார். பிற்பட்ட சில அரச பதிவுகளின்படி அவர் 1903ஆம் ஆண்டு மே மாதம் 3ஆம் திகதியன்று பிறந்தவர் அவர் என்று தெரியவந்தாலும், அவருடைய பிறப்பு அதற்கு முந்தையதாக இருக்கலாம் என்கிற ஐயமும் உண்டு. இவரை 'இலங்கையின் மூத்த தாய்' எனக் குறிப்பிட்டு, 2019ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதியன்று (சர்வதேச முதியோர் தினம்) அவருக்கு சான்றிதழொன்று வழங்கப்பட்டது. அதில் முதியோருக்கான தேசிய சபையின் தலைவர் மற்றும் செயலாளர் ஆகியோர் கையெழுத்திட்டிருந்தனர்.

# போடுறது பிழையோ? அள்ளாதது பிழையோ?

■ கதிரேசன் காத்தவராயன்

அதிலை திருவெம்பாவைக்குக் கோயிலடிப் பக்கம் போனன். சண்முகத்தார் தம்பர் மயிலண்ணை ஆக்கள் நிண்டினம். ஏம்பாவாய் பாடினால் கொரோனா வராதெண்டாரும் சொன்னவையோ தெரியேல்லை சனம் நல்லாய் நிண்டுது பாருங்கோ. "கதிரேசண்ணை யாழ்ப்பாணத்திலை மழைக் குப்பிறகு மலை முளைச்சிருக்குதாம்! பாக்கப் போகேல்லையோ?" எண்டு கேட்டார் தம்பர்.

"ஓ...ஓ...ஓ ! அந்த மலையையோ! இஞ்சையும் சந்திக்குச் சந்திகிடக்குதுதானே அதைப் பாக்காமலுக்கு யாழ்ப்பாணத்திலை போயே பாக்கவேணும்....? உந்தப் புரவிப் புயல் வந்தாலும் வந்துது... சனம் பாவம் வலு கஸ்டத்தைப் பட்டுதுகள்... ஆனால் உங்கை கனபேர் கனவு கலைஞ்சு திகைச்சு முழிச்சிருக்கினம் கண்டியளோ...! குளத்தைக் காணேல்லை எண்டு குளறுகிறவையும் வாய்க்கால் எங்கைபோட்டுதெண்டு தேடியழுகிறவையும் றோட்டுகளை உப்பிடிப் போட்டிருக்கப்படாதெண்டு சிணுங்குகிறவையும்....! வீட்டுக்குவீடு எஞ்சினியர் இருக்குதெண்டு புழுகினவையைத்தான் தேடித் திரியிறன் ஒருதரும் அம்புடுகினமில்லை..." எண்டு நிப்பாட்டினன்.

சண்முகத்தார் பாவம் முகம் ஒடிக்கறுத்துப் போச்சுது.. ஒண்டுக்குரண்டு எஞ்சினியர் அவரிட்டை. ஆனால் ரண்டும் நாட்டிலை இல்லை. இருந்தாலும் ஒண்டும் நடந்திருக்காதுதான். ஏனெண்டால் அவங்களை பொத்தி வைச்சல்லே படிப்பிச்சவர். தம்பர்தான் வாய்திறந்தார். "குப்பை அள்ளவும் எஞ்சினியர்மாரே வேணும்? அண்ணை நீங்கள் நெடுகவும் புலம்புற நீங்களல்லே உந்தக் குப்பையளைப் பற்றி... சும்மா வாய்க்காலுக்குள்ள நாலு சருகு சேந்தாலே பிரச்சனையாகுது. லோட் லோட்டாக் கிடந்தால் என்ன பாடுபடுத்தும்?"

"இஞ்சார் தம்பு...! அதைத்தானே அனுபவிச்சிருக்கிறம். உனக்கிருக்கிற உந்த விளக்கம் இல்லாதவையாலைதான் பிரச்சனை. எஞ்சினியராயிருந்தாலேன்ன டொக்ரராயிருந்தாலென்ன உன்னை என்னைப்போலை இருந்தாலென்ன அவையவை சரியானபடிக்கு யோசிக்கவேணும் கண்டியோ! எந்த ஒரு வேலையையும் செய்ய முன்னம் ஒண்டுக்கு நாலுதரம் யோசிக்கவேணும்.. எங்கடையாக்களுக்கு ஒருதரமாவது யோசிக்கிற பழக்கம் இருக்கோ சொல்லுங்கோ பாப்பம்? தலைக்கு மேலாலை போனப் பிறகுதானே திடுக்கிட்டெழும்பி கூப்பாடுபோடுறது. புத்திசாலியள் செய்யிற வேலையே இது? சமூகப் பொறுப்புள்ள தாய்ச் சொல்லிக் கொள்ளுகிற ஆக்கள் செய்யிற வேலையே?" எண்டு நான் நிப்பாட்டினன்.

> “ எந்த ஒரு வேலையையும் செய்ய முன்னம் ஒண்டுக்கு நாலுதரம் யோசிக்கவேணும்.. எங்கடையாக்களுக்கு ஒருதரமாவது யோசிக்கிற பழக்கம் இருக்கோ சொல்லுங்கோ பாப்பம்? ”

"சரியாய்ச் சொன்னாய் கதிரேசு..! கண்டு பிடிச்சு அள்ளிப் போட்டப் பிறகுதானே எல்லாரும் ஐயோ ஆத்தே எண்டு கத்துகினம்... தெரியாமலுக்குத்தான் கேக்கிறன் உந்தக் குப்பை மலையளைப் பற்றி இணையங்களுக்குள்ள நெருப்புக் கொழுத்துகிறவையும் உந்தத் தெரு வழியதானே திரியுறவை... கையிலை கிடக்கிற போனைப் பாத்தபடியே குடிச்சு முடிஞ்ச போத்திலுகளை எறியிறதிலையும் சேந்ததுகள்தான் உதுகள் எண்டது விளங்காதவை.. அவை எறியாமலுக்கு இருந்தால், ஆராலும் போட்டதுகள் கிடக்கிறதை உரிய இடங்களுக்கு வடிவாய்த் தெரியப்படுத்தியிருந்தால் உப்பிடி மலையளவு சேந்திருக்குமோ? சண்முகத்தாற்றை கொதிப்பான கேள்வியளிலை ஒரு ஞாயம் இருக்குதல்லோ?

அதோடை உந்தத் துப்பரவாக்கிற வேலையளை நாள்நட்சத்திரம் பாக்காம அடிக்கடி செய்யலாமில்லே? அப்பிடிச் செய்திருந்தால் உப்பிடிக் குவியலாய் லோட் கணக்கிலை வந்திருக்காதல்லே? உதுகளைப் பாக்கவேண்டிய ஆக்கள் தங்களை ஐயா பாக்கிறாரோ எண்டு அவைபோற இடமெல்லாம் பின்னாலை முன்னாலையெண்டு திரியினம்... இதுகளைப் பாக்க நேரமெங்கை கிடக்கப்போகுது?" எண்டு தம்பர் தன்ரை அவதானத்தைச் சொன்னார். சண்முகத்தார் உற்சாகமாய் ஓமோம் எண்டார்.



றோட்டிலை பரவிக் காயவிட்ட மாதிரிக் கிடக்கிற குப்பையையே பாக்கத் தெரியாத ஆக்களுக்கு வாய்க்காலுகளுக்குள்ள புல்லுகள் செடியளுக்குள்ள ஒளிச்சுக் கிடந்த உதுகள் எப்பிடித் தெரியும்? மற்றது பெரியாக்கள் வாகனங்களுக்குள்ள இருந்துகொண்டு தங்கடை போனுகளுக்குள்ளை தலையை முழுசாய் ஓட்டினபடி போறதாலையும் உதுகள் பாதுகாப்பாய் இருந்திருக்கும். எங்டை காலத்திலை மழை காலங்களிலை பூச்சிபூரானுகள்தான் வெளிக்கிட்டு வாறதுகள். இப்ப எல்லாமல்லே வெளிக்கிடுகுதுகள்?" எண்டு சொல்லிக்கொண்டிருக்க திருநீறு சந்தனம் வந்துது. அதோடை சொப்பிங் பையிலை பிரசாதமும் வந்துது. நானொரு பார்வை பாக்க பிரசாத்தைத் தந்த தம்பிமுத்தர் சுகாதார நடைமுறைப்படி இப்பிடிப் பையிலைதான் பிரசாதம் குடுக்கவேணுமாம் எண்டார். ஆரெண்டு கேக்கேல்லை. வீட்டை வந்திட்டன். ■

● பேர் அறிஞன்

# வளமிகு வாழ்விற்கான வழிகாட்டலின் நிலை...?

13

செழிப்பு அபிவிருத்தி முன்னேற்றம் போன்ற சொற்களின் பாவனையும் அதனாலெழும் ஒருவிதமான பிரமிப்பு மனோநிலையும் அதிகரித்திருக்கிறது. இந்த மாற்றம் சமூகத்தினது எண்ணங்களிலும் நடைமுறைகளிலும் ஏற்படுத்திக்கொண்டிருக்கும் விளைவுகள் தொடர்பான அவதானங்கள் பரவலாகப் பெறப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால் கவனத்தில் கொள்ளப்படுகின்றனவா என்றால் அங்கேதான் எமது நிலை தெளிவாகும். இவற்றிற்கான பரிகாரமாக இவை ஏற்படாத வகையில் எடுக்கப்படவேண்டிய அல்லது எடுக்கக்கூடிய வழிகளைக் கண்டடைதல் அவசியமாகிறது. அதற்கான வழி சமூகத்தினது சிந்தனையில் ஏற்படும் மாற்றமாகவும் அதன்வழி செயல் முறை மாற்றமாகவும் அமைவது அவசியமாகிறது.

பொருத்தமான அல்லது சரியான முன்யோசனையற்ற அபிவிருத்திகளின் வெளிப்பாடாக நாம் இயற்கை விடும் சவால்களுக்கு முகங்கொடுக்க முடியாமல் திண்டாடும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இவற்றுக்கான எடுத்துக்காட்டுக்களாக ஏராளமான விடயங்களை முன்வைக்கமுடியும். இவை ஒருபுறமிருக்க முன்யோசனையற்ற அதீத அபிருத்தித் திட்டங்களுக்குள்ளாக முடங்கிப் போயிருக்கின்ற பொருளாதாரம் ஏற்படுத்திக்கொண்டிருக்கும் தாக்கங்கள் உரிய கவனிப்பைக் கோருகின்றன.

இவற்றுக்கும் வழிகாட்டலுக்கும் என்ன சம்மந்தம் என்ற கேள்வி சிலருக்கு எழலாம். இங்கு சிலருக்கு என குறிப்பிட்டதன் நோக்கம் (ஏன் - எதற்கு - எப்படி - போன்ற வினாக்களுக்கூடாக) சிந்திப்பவர்கள் எத்தனைபேர் உள்ளனர் என்கிற எண்ணத்தினாலேயேயாகும்.

பட்டங்கள் பதவிகளோடு உள்ளவர்கள்தானே திட்டங்களை வகுக்கின்றனர்? அப்படியிருக்க எதிரிடையான விளைவுகள் அல்லது பூச்சிய விளைவுகள் ஏன் கிடைக்கின்றன? போன்ற கேள்விகள் எழுவது நியாயமானதுதான். அவர்களால் கடந்த காலத் தவறுகளிலிருந்து பாடங்கற்கவோ விளைவுகளை முன்கூட்டியே ஊகிக்கவோ முடியாமலிருப்பதே இதற்கான முதன்மைக் காரணியாக அமைகிறது என்பதையும் நடை முறைசார்ந்து தமக்கிருக்கும் கோட்பாட்டறிவைப் பயன்படுத்தக்கூடிய ஆற்றலற்றவர்களாக அவர்கள் இருக்கின்றனர் என்பதையும் ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

**கடந்தகாலத் தவறுகளை மட்டு மல்ல நிகழ்காலத் தவறுகளையும் அனுபவிக்கிறோம். கடந்தகாலத் தவறுகளை இனங்கண்டு பரிகாரம் கண்ட டையப்பட்டிருக்குமானால் நிகழ்காலத் தவறுகள் குறைவடைந்தோ இல்லாமலோ ஆகியிருக்கும்.**

இந்நிலையில் அவர்களைச் சிந்தனையாற்றலற்ற புத்தகப் பூச்சிகளாக்கிய கல்வித் திட்டங்கள் மற்றும் அத்தகையவர்களுக்கு அதீத அங்கீகாரம் கொடுக்கும் சமூகம் தொடர்பான கவனக்குவிவை மேற்கொண்டு அவற்றுள் மாறுதலுக்கான விதைகளை நாட்டிப் பராமரிக்க வேண்டிய பெரும் பொறுப்பை ஏற்க வேண்டியவர்களாக வழிகாட்டுனர்கள் மற்றும் ஆலோசகர்கள் உள்ளனர். ஆனால் இவர்கள் சமூக எண்ணங்களில் மாற்றங்களை ஏற்படுத்துபவர்களாக இல்லாமல் சமூகத்தினது ஓட்டத்துடன் அள்ளுண்டுபோகும் சாதாரணர்களாகவே இருந்துவிடுகின்றனர் என்பது தான் கவலைக்குரியதாகிறது.

கடந்தகாலத் தவறுகளை மட்டு மல்ல நிகழ்காலத் தவறுகளையும் அனுபவிக்கிறோம். கடந்தகாலத் தவறுகளை இனங்கண்டு பரிகாரம் கண்டடையப்பட்டிருக்குமானால் நிகழ்காலத் தவறுகள் குறைவடைந்தோ இல்லாமலோ ஆகியிருக்கும். ஒரே தவறுகளும் ஒரே விதமான தவறுகளும் தொடர்கின்றன என்றால் சிந்தனையில் மாறுதல் இல்லை என்பதைவிட வேறெந்த முடிவுக்கு வரமுடியும்? இப்பகுதி முழுமையிலும் மீள மீள வலியுறுத்தி வருவது ஆரோக்கியமான சிந்தனை மாற்றம் என்பதையே.

ஏனெனில் சிந்தனை மாற்றம் என்பதுதான் வாழ் முறையை அதனது தேவைகளை எதிர்பார்ப்புகளை செல்நெறியை செயலொழுங்கை என எல்லாவற்றையும் கட்டுப்படுத்துகிறது. கட்டியமைக்கிறது. நிறைவாக்குகிறது. மொத்தத்தில் முழுமையும் அதுவாகவே இருக்கிறது. இதனை நாம் சரிவரப் புரிந்துகொள்வதன் ஊடாகவே பயணிக்கிறோமா? எந்தளவு புரிந்து வைத்திருக்கிறோம்? மனனம் செய்தல் அப்படியே ஒப்பு வித்தல் என்பதற்கப்பால் எமது செயற்பாடுகளை அடையாளப்படுத்தவோ வகைப்படுத்தவோ முடியுமா?

மனனம் செய்தல் - ஒப்புவித்தல் - சான்றிதழ் பெறுதல் - தொழில் தேடுதல் பெறுதல் - பணம் பொருள் சொத்து புகழ் தேடுதல் - நோய் மற்றும் சவால்களைச் சந்தித்தல் - சந்ததிக்கான வழி தேடுதல் - சடங்குகள் சம்பிரதாயங்களுக்குக் கட்டுப்படுதல் - சாவு (இது மட்டும் தானாக நடக் கிறது) வாழ்க்கை வட்டம் முடிகிறது. இச்செயலொழுங்கில் நாமாகச் சிந்தித்துச் செய்தவை எத்தனை? இவ்வொழுங்கில் அனேகமாக முழுமையானவை சமூகம் எனும் பெயரில் யாராலோ எப்போதோ எங்கோ ஏதோவொரு தேவைக்காக உருவாக்கப்பட்டவைதான் என்பதே உண்மை. இவ்வொழுங்குமுறை எல்லோருக்கும் பொதுவானதா? யார் யாருக்குப் பொருத்தமானது? எப்போதுபொருந்தும்?

இவ்வொழுங்குமுறை தனியன் ஒருவனது தேவைகள் விருப்பங்களை நிறைவாக்கி மகிழ்வான வாழ்வு என்பதை அர்த்தப்படுத்துமா?

(தொடரும்)

# ஒளியை நோக்கி வாழுங்கள்...

■ சாம் - ரமேஸ்குமார்

இந்த உலகத்தில் வாழும் ஒவ்வொரு மனிதனின் வாழ்வும் அடர்ந்த கார் இருளில்தான் பயணித்துக் கொண்டு இருக்கின்றது. அவர்கள் மனம் எப்போதும் இருளையே சிந்திக்கும்வரை அவர்கள் வாழ்வின் பயணமும் இருளாகத்தான் இருக்க முடியும்.

அதனால்தான் இந்து தர்மம் அவர்களை நோக்கி "தமஸோமா ஜ்யோதிர் கமய" என்கின்றது. அதாவது இருளில் இருந்து ஒளியை நோக்கி செல்லுங்கள் என்று அன்பான அழைப்பு விடுக்கின்றது.

ஒவ்வொரு மனிதனும் தாங்கள் இருளில்தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்பதைச் சற்றும் சிந்திக்காத வரையில் அவர்கள் ஒருபோதும் ஒளியை நோக்கி செல்லவே முடியாது. அதனால் அவர்களின் ஆத்ம விமோசனத்தை எண்ணற்ற பிறவிகள் வரை இழக்கின்றார்கள்.

சில மனிதர்கள் இருளையே ஒளியென நினைத்தும். பொய்மையை உண்மையென நினைத்தும். தமது வாழ்வோட்டத்தை கற்பனையில் அர்த்தமற்றதாக்கிக் கொண்டு இருக்கின்றார்கள். அவர்கள் உண்மையை உள்ளபடி உணர வேண்டுமானால், அவர்கள் சிந்தனை

எப்போதும் தர்மத்தை நோக்கியதாக இருக்க வேண்டும்.

குறிக்கோள் இல்லாத மனிதன் தலையில்லா முண்டத்துக்குச் சமமாவான். தலையிருந்தால்தான் ஒருவனால் சிந்திக்கவே முடியும். சிந்தனையில்லாதவனும் ஏற்கனவே தலையிருந்தும் தலையில்லாதவன் ஆகின்றான்.

விலங்குகளும் கால்களினால்தான் நடக்கின்றன. மனிதர்களும் கால்களினால்தான் நடக்கின்றார்கள்.

ஆனால் நாம் விலங்குகளை மட்டுமே கால்நடையென அழைக்கின்றோம். ஏன்..?

மனிதன் கால்களினால் மட்டும் நடப்பவனல்லன். அவன் சிந்தனையினாலும் நடக்கின்றான். நன்மை தீமையெனும் இரு வினைகளை பகுத்துணரக்கூடிய ஆற்றல் அவனுக்கு இருக்கின்றது. அதனால் அவன் மனிதன் என பெயர் பெறுகின்றான்.

ஆனால் சமகாலத்தில் ஒரு கூலித் தொழிலாளியிடம் இருக்கும் சிந்தனை ஆற்றல்கூட, படித்த, பெரும் பதவி வகிக்கின்ற மனிதர்களிடத்தில் பெரும்பாலும் காணக் கிடைப்பதில்லை. ஏனெனில் அவர்களின் சிந்தனை ஆற்றலை அவர்களின் அகங்காரம் சிறை பிடித்து வைத்திருக்கின்றது.

அதனால்தான் சுவாமி ராமகிருஸ்ண பரமஹம்சர் "ஏட்டுச் சுரைக்காய் ஒருபோதும் கறிக்கு உதவாது என்பார். அதாவது சிந்திக்கும் ஆற்றலை தராத கல்வியால் எந்தப் பயனுமே கிடையாது. பதவியைப் பிடிக்கவும், வயிற்றை வளர்க்கவும், சொகுசு வாழ்க்கை வாழவும், பணத்தை பதுக்கவுமே அக்கல்வி முறையானது உதவுகின்றது.

கல்வி என்றால் கருணை என்று பொருள். கல்வி கற்றவனிடத்தில் ஒரு சிறிதளவாவது கருணை இல்லை என்றால் அவன் நிரந்தரமாய் தர்ம சிந்தனையற்றவனாகி விடுகின்றான். அப்போ அவன் கற்றது கல்வியல்ல. அவன் கற்ற கல்வியால் எந்தப் பயனும் இல்லை.

கல்வி கற்ற மனிதர்களின் நோக்கம் என்றும் அவர்களுக்குள் இருக்கும் மேலான ஆத்ம ஒளியை ஒவ்வொரு நொடியும் தரிசிப்பதாகவே இருக்கவேண்டும். உண்மைக் கல்வியிலிருந்து தர்ம சிந்தனை உதிக்கின்றது. அச்சிந்தனையில் இருந்து நல்ல செயலாக்கம் உருவாகின்றது. இவையனைத்தும் சேர்ந்தே இன, மத, மொழி கடந்த சமதர்மம் எங்குமே தொடங்குகின்றது.

ஆகவே பாமரனாக இருந்தாலும் சரி, கல்விமானாக இருந்தாலும் சரி அறியாமை எனும் இருளில் இருந்து பேர றிவு எனும் ஒளியை நோக்கிய அவர்களின் நிகழ்காலச் சிந்தனைகள் நிச்சயம் எதிர்கால இறப்பை வென்றுவிடும்.

தீபன் - கொக்குவில்

# கவனம்... இது பேய்க் கதை

கதை 17

## விரட்ட முடியாத ஆவிகள்...!

யாழ்ப்பாணம் நல்லூர்க் கோவில் அமைந்துள்ள இடம் முன்னர் முஸ்லிம்களின் மயானமாக இருந்தது என்றொரு செவி வழிக்கதையுண்டு. நல்லூர்க் கோவிலைச் சுற்றியுள்ள சில காணி உறுதிகளில் முஸ்லிம் மயானம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் சொல்கிறார்கள். இதனால் நல்லூர்க் கோவிலுக்கு அருகிலுள்ள பல வீடுகளில் ஆவிகளின் அதிர்வுகள் இருப்பதாகக் கூறப்படுகிறது. பல வீடுகளில் இரவில் நிம்மதியாகப் படுத்துறங்க முடியாதபடி ஆள் அரவம், ஏனைய சத்தங்கள் என இருப்பதுண்டு. பலர் ஒரு பெருமைக்காக அங்கு குடியிருந்தாலும் கொழும்பிலும் வெளிநாடுகளிலும் வாழ்பவர்களாகவே உள்ளனர். அவ்வப்போது வந்து ஒரு சில நாள்களோ, வாரங்களோ அவ்வீடுகளில் தங்கிச் செல்கின்றனர். மற்றப்படி அவ் வீடுகள் பூட்டப்பட்டே கிடக்கின்றன. சில வீடுகளில் இரவு, பகலாக மின்குமிழ்கள் ஒளிர்ந்த வண்ணமே உள்ளன. இந்த அணையா விளக்குகள் எரியும் வீடுகளில் ஆவிகளின் எதிர்வினைகள் அதிகம் இருக்கின்றது என்று கூறப்படுகிறது. பலர் ஒருவகை மனநோய்க்கு உட்பட்டும், சந்தோசமாக வாழ முடியாமலும் உள்ளனராம்.

இந்த நிலையிலிருந்து விடுபடுவதற்காக ஆவிகளை விரட்டுகின்ற சடங்குகள் அல்லது ஆவியைக் கட்டிப்போடும் முயற்சிகளையும் சிலர் எடுத்தபோதிலும் அவை பயனளிப்பதில்லையாம்...! இதுபற்றி விடயம் தெரிந்தவர்கள் கூறுகையில், “பிணங்கள் புதைக்கப்படும் சில இடங்களில் அந்த உடல்களில் உள்ள ஆவிகளை அங்கு நிரந்தரமாகத் தங்கும் மந்திரங்களையும் ஓதி விடுவதால் அப்பேர்ப்பட்ட ஆவிகளை எந்த முயற்சியாலும் கலைத்துவிட முடியாது” என்கின்றனர்.

வீட்டுக்கு நிலையம் எடுக்கின்ற ஒருவர் இது பற்றிக் கூறுகையில் “சில இடங்களுக்கு நிலையம் எடுக்கப்போகும்போது அந்த இடம் ஒளியிழந்து காணப்படும். அந்த இடத்தில் பிணங்கள் புதைக்கப்பட்டிருக்கின்றன என்கிற செய்தியை அது மனதுக்குள் சொல்லிவிடும். இதனால் இந்த இடத்தில் வீடு கட்டுவதற்கு நிலையம் இல்லை” என்று தான் கூறிவிடுவார் என்றும் “அதுபற்றி வேறுயாரிடமாவது விசாரித்தால் உண்மை தெரியவரும்” என்றும் கூறுகிறார்.



அந்தப் பகுதியில் பலர் தாம் விரும்பிக் கட்டிய வீட்டில் வாழ முடியாத நிலை ஏற்படுவதற்கு இதுவே காரணமாகிறது, அதனால் தான் அவற்றை வேறு யாருக்காவது விற்றுவிட்டுச் செல்லவேண்டியுள்ளது என்பது அவரது கருத்து.

அந்தப் பகுதியில் பல இடங்களில் புறம்போக்கான இடங்களும் உள்ளன. அங்கு பெரு மரங்கள் வளர்ந்திருக்கும். பேயோ, பிசாசோ, முனி போன்ற கெட்டது ஏதோ இருக்கிறது என்று அந்தப் பகுதியை மக்கள் நீண்டகாலமாக ஒதுக்கியும் வருகின்றனர். இவ் விடங்கள் பெரும்பாலும் அரசுக்குச் சொந்தமானவையாக இருப்பதால் அவ்விடங்களில் வீடுகளோ அலுவலகங்களோ கட்டினாலும் எதிர்பார்த்த முன்னேற்றம் ஏற்படுவதில்லை.

நிலத்துக்கு அடியில் பிணம் அல்லது ஏதாவது கெட்ட விடயங்கள் புதைக்கப்பட்டிருந்தால் இத்தகைய பாதிப்புகள் ஏற்படுவதுண்டு. இவ் வாறானதொரு நிலையே நல்லூர்க் கோவிலை அண்டிய பகுதிகளிலும் காணப்படுகிறதாம்.

ஆவிகள் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு மட்டும்தான் ஓர் இடத்தில் இருக்கும் என்ற கருத்தை நல்லூர் கோவிலை அண்டிய பகுதிகள் பொய்ப்பிக்கின்றன. இவற்றை அறிவு பூர்வமாக நிரூபிப்பதில் சிரமங்கள் இருந்தாலும் நடைமுறையில் இதை நம்புவோர் பலரும் பாதிக்கப்படுகின்றனர் என்பதை அங்கு வாழ்பவர்களின் அனுபவங்கள் ஊடாகச் சொல்ல முடியும். இவ்வாறான சில தடயங்களை அங்கு வாழ்பவர்கள் அறிந்திருந்தாலும் அவற்றை வேறு யாருக்காவது விற்பதற்காக இந்தச் செய்திகளை வெளியில் கூறுவதில்லையாம் என்றும் ஒரு கதையுண்டு. எப்படியிருந்தாலும் நல்லூரில் நீங்கள் ஒரு துண்டுக் காணியை வாங்கவேண்டும் என்றால் குறைந்தது கோடீஸ்வரராக இருப்பது கட்டாயம். ■

## கடந்த ஆண்டில் கலக்கிய கங்கணா...!

தாம் தூம் படத்தில் ஜெயம் ரவிக்கு ஜோடியாக நடித்ததன் மூலம் தமிழ்த் திரையுலகுக்கு அறிமுகமானவர் ஹிந்தி நடிகை கங்கணா ரணாவத். அதிக படங்களில் நடித்திராவிடினும் கடந்த வருடத்தில் அதிகளவில் பேசப்பட்ட பெயர் அவருடையது தானாம்...!

அதற்குக் காரணம், இந்தியக் கிரிக்கெட் வீரர் மகேந்திரசிங் டோனியின் வாழ்க்கை வரலாற்றுப் படத்தில் டோனியின் பாத்திரமேற்று நடித்த நடிகர் சுஷாந்த் சிங்கின் இறப்புத் தொடர்பில் கங்கணா வெளியிட்ட கருத்துகளும் அவரது இறப்பு விவகாரத்தில் அவர் எடுத்த நிலைப்பாடுகளுமே. அதைத் தொடர்ந்தும் சில பல விவகாரங்களில் கங்கணா பேசிய கருத்துகளாலும் அவர் அதிகம் பேசப்பட்டார்.

சுஷாந்த் சிங்கின் திரை வளர்ச்சியைத் தலைமுறை தலைமுறையாகத் திரைத்துறையில் கொடிகட்டிப் பறந்துவருகின்ற பிரபலங்களின் வாரிசுகளே பாதித்தனர் என்றும் அதனால் அவர் பெரும் மன உளைச்சலுக்கு ஆளானார் என்றும் திரைப் பிரபலங்களைச் சாடினார். பிரபலங்களின் திரை ஆதிக்கத்தையும் புட்டுப் புட்டு வைத்தார். தொடர்ந்து திரைப் பிரபலங்கள் போதைப் பொருள் விடயத்தில் ஆதிக்கம் செலுத்துவதை வெளிப்படையாகப் பேசினார். இதனால் பலரது போதை முகங்களைத் தோலுரித்தார். பலர் விசாரணைக்கு உட்பட்டனர். சிலர் சிறையும் சென்றனர்.

சுஷாந்த் சிங்கின் இறப்பையொட்டிய சர்ச்சைகளின் தொடராகக் கங்கணா ரணாவத்துக்கும், மகாராஷ்டிர அரசுக்கும் முரண்பாடு நீடித்தது. இதனால், அரசும் காவல் தரப்பும் கங்கணாவை மாறி மாறி விமர்சித்தன. இந்தியாவின் மும்பைப் பகுதியானது பாகிஸ்தானிடமிருந்து ஆக்கிரமிக்கப்பட்ட காஷ்மீர் என்றும், அதன் தற்போதைய நிர்வாகத்தைத் தலிபான்களுடனும் ஒப்பிட்டும் பேசினார் கங்கணா. இதன் எதிரொலியாக மும்பையின் பாந்த்ரா பகுதியில் இருந்த அவருடைய அலுவலகக் கட்டடத்தின் ஒரு பகுதி, விதிகளை மீறிக் கட்டப்பட்டது என்றுகூறி மும்பை மாநகராட்சி அதிகாரிகள் அதை இடித்தனர். அதற்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்த கங்கணா அதில் வெற்றி கண்டார். அதனால் அவர் திரையுலகில் மாத்திரமன்றி வெளி உலகிலும் ஒரு “ஹீரோ” தரத்துக்குப் பேசப்பட்டார்.

இதைத் தொடர்ந்து இந்தியாவில் எழுச்சி பெற்ற விவசாயிகள் போராட்ட விவகாரத்தாலும் கங்கணாவின் பெயர் எழுச்சி கண்டது. விவசாயிகள் போராட்டத்தில் தீவிரவாதிகள் பங்கெடுக்கத் தொடங்கியுள்ளனர் என்று அவர் கூறிய கருத்துப் பெரும் சர்ச்சையானது. அதாவது இந்திய அரசின் புதிய சட்டங்களை நீக்கக் கோரி விவசாயிகள் முன்னெடுத்துள்ள போராட்டத்தில் கலந்துகொள்வதற்காகச் சென்ற பில்கிஸ் பனோ என்ற 86 வயது மூதாட்டியைப் பொலிஸார் தடுத்தனர் (குடியுரிமை திருத்தச் சட்டத்தை எதிர்த்து டெல்லியில் நடந்த போராட்டத்தில் பங்கேற்றவர் இந்த மூதாட்டி) இந்த நிலையில், “100 ரூபா கொடுத்தால் மூதாட்டி பில்கிஸ் பனோ எந்தப் போராட்டத்திலும் பங்கேற்பார்” எனப் பதிவிட்டார். இதற்குப் பலரும் கடும் கண்டனம் தெரிவித்தனர். இத்துடன் நிற்காது அந்த மூதாட்டிக்குப் பதில் வேறு ஒருவரின் ஒளிப்படத்தையும் கங்கணா பதிவிட்டிருந்தார். அதுவும் இணையத்தில் சர்ச்சையானது. இறுதியாக இந்த விவகாரம் குறித்துக் கங்கணா கூறியபோது, கடந்த சில நாள்களாக உணர்வு ரீதியான, மன ரீதியான தாக்குதல்களை எதிர்கொள்கிறேன் என்றும் பாலியல் மற்றும் கொலை மிரட்டல்களும் கூட வருகின்றன என்றும் தெரிவித்தார்.



அத்தோடு ஒட்டுமொத்த விவசாயப் போராட்டத்தையும் அவர் கொச்சைப்படுத்தினார். இந்தப் போராட்டமே அரசியல் கட்சிகளால் தூண்டி விடப்பட்டுள்ளது, இதில் எவ்வித சந்தேகமும் இல்லை, தீவிர வாதிகளும் அதில் பங்கெடுக்க தொடங்கியுள்ளனர் என்றார். எது எப்படியோ திரைப்பட நடிப்பைத் தாண்டியும் இப்படியாகப் பல விடயங்களிலும் கருத்துத் தெரிவித்ததால் கடந்த வருடத்தில் அதிகம் பேசப்பட்டிருக்கிறார் நடிகை கங்கணா...!



# சிகப்பு வட்ட மர்மம்

முன்னுரை

பத்தொன்பது மற்றும் இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற ஆங்கில எழுத்தாளர் சர் ஆர்தர் கானன் டாயில் என்று சொன்னால் மிகையாகாது. 1911ஆம் ஆண்டு "The Strand Magazine" என்னும் ஆங்கில இதழில் வெளியான அவரது ஒரு சிறுகதை இது. வாடகைக்கு விடப்பட்ட தன் வீட்டின் குத்தகைதாரர் பற்றிய ஒரு பெண்ணின் புகாரை ஹோல்ம்ஸ் விசாரிப்பது பற்றிய சிறு கதை.

சிறு கதை 3

அந்த அறையில் ஆள் நடமாட்டம் தெரி கிறது!" என்றார் ஹோல்ம்ஸ் அடிக்குரலில். அவரது மெலிந்த ஆர்வமுள்ள முகம் சாளரத்தின் சட்டத்தில் பதிந் தது. "ஆம், நான் அவரது நிழலைப் பார்க்க முடி கிறது. அதோ மீண்டும் வருகிறான்! அவனது கையில் ஒரு மெழுகுவர்த்தி இருக்கிறது. இப் பொழுது அவன் குறுக்கே பார்த்தான். அவளும் பார்க்கிறாளா என்று அவன் உறுதிப்படுத்த வேண்டு மல்லவா. அவன் இப்பொழுது ஒளியைப் பளிச் சிட வைக்க ஆரம்பித்தான். அவனது செய்தியை யும் குறித்துக் கொள்ளுங்கள், வாட்சன். அதன் பின் நாம் அதை உறுதிப்படுத்திக் கொள்ளலாம். ஒரே ஒரு பளிச்சிடல் - அது நிச்சயம் 'ஏ' தான். அதன் பின், நீங்கள் எத் தனை கணக்கு வைத்திருக் கிறீர்கள். இருபது. நானும் அதேதான் எண்ணினேன். அதன் பொருள் 'டீ'. 'ஏ டீ' புரிந்துகொள்ளக் கூடி யதுதான். இன்னுமொரு 'டீ'. இது நிச்சயம் அடுத்த வார்த்தையின் தொடக்க மாக இருக்கும். இப்பொழுது 'டீ ஈ என் டீ ஏ'. அதன் பின் நீண்ட மவுனம். நிச் சயம், இது மட்டுமே இருக்க முடியாது, வாட்சன். 'ஏடீடீ ஈ என் டீ ஏ' என்பதில் எந்தவிதப் பொருளும் இல்லையே. அதை மூன்று சொற்களாக 'ஏ டீ, டீ ஈ என், டீ ஏ' எடுத்துக் கொண் டாலும் ஒத்து வராது. கடைசிச் சொல்லான 'டீ ஏ' வை ஒருவர் பெயரின் எழுத்துச் சுருக்கமாக எடுத்துக் கொண்டாலொழிய அதுவும் சரியாக இருக்காது. மீண்டும் ஆரம்பித்து விட்டான். என்னவாக இருக்கும்? "ஏ டீ, டீ ஈ' ஏன் திரும்பவும் அதே செய்தி. ஆர்வமாக இருக்கிறது, வாட்சன். மிகவும் ஆர்வமாக இருக் கிறது. திரும்பவும் ஆரம்பித்து விட்டான். 'ஏ டீ' - ஏன் மீண்டும் அதே எழுத்துக்கள் மூன்றாவது முறையும். 'ஏ டீ, டீ ஈ என், டீ ஏ' மூன்று முறை. இன்னும் எத்துணை முறை தொடர்வானோ? இல்லை, இதுதான் இறுதியானது போல் தெரிகிறது. அவன் சாளரத்தின் கதவைப் பூட்டி உள்ளே சென்று விட்டான். இதில் இருந்து எதாவது புரி கிறதா? வாட்சன்."

"சங்கேதச் செய்தி, ஹோல்ம்ஸ்"

எனது நண்பர் புரிந்து விட்டது போல் நமட்டுச் சிரிப்பு சிரித்தார். "இது ஒன்றும் அவ்வளவு தெளிவற்ற சங்கேதச் செய்தி இல்லை, வாட்சன்" என்றார். "ஏன்? நிச்சயமாக அது இத்தாலிய மொழி. அவ்வளவுதான். அதில் உள்ள 'ஏ' அது ஒரு பெண்ணிற்கான செய்தி என்பதைத் தெளிவுபடுத்து கிறது. 'கவனம், கவனம், கவனம்' எப்படி, வாட் சன்."


"நெற்றிப் பொட்டில் அடித்து விட்டீர்கள் என்று நினைக்கிறேன்"

"அதில் சந்தேகமே இல்லை. அது ஒரு மிகவும் அவசரமான செய்தி. மூன்று முறை அனுப்பப்பட்டி ருப்பதில் இருந்தே அதன் அவ சரம் தெரிகிறது. ஆனால் எதில் கவனம் தேவை? கொஞ்சம் பொறுங்கள், அவன் மீண்டும் சாள ரத்தின் அருகில் வருகிறான்."

மீண்டும் பதுங்கிக் கொண்டு வரும் மனிதனின் மங்கிய நிழல் ஒன்று தெரிந்தது. செய்திப் பரி மாற்றம் தொடங்கியதால் சாள ரத்தில் இருந்து விளக்கின் வேக மான வெளிச்சக் கீற்று மின்னத் தொடங்கியது. இப்பொழுது மிக வேகமாக வரத் துவங்கியது. அவ்வளவு வேகமாக வந்ததால் அதைப் பின் பற்றவே இயலவில்லை.

"பி ஈ ஆர் ஐ சி ஓ எல் ஓ" என்றால் என்ன வாட்சன்? ஆம் அது ஆபத்து, இல்லையா? ஆம், ஜோவ் என்பவனால் அனுப்பப்படும் அபாய எச்சரிக்கை. திரும்பவும் அனுப்புகிறான். 'பி ஈ ஆர் ஐ', ஆஹ், என்னதான் நடக்கிறது அங்கே?"

விளக்கு சட்டென்று அணைந்துவிட்டது. சாள ரத்தின் வெளிச்சச் சதுரம் மறைந்து விட்டது. அந் தப் பெரிய வீட்டின் மூன்றாவது தளம் ஒரு கறுப் புத் துணி சுற்றியது போல் காணப்பட்டது. பல அடுக்குகள் கொண்ட ஒளிரும் சாளரங்களுக்கு மத்தியில். அந்த இறுதியான எச்சரிக்கை அழுகை திடீரென்று இடையில் நிறுத்தப்பட்டது. எப்படி, யாரால்? அதே சிந்தனை எங்கள் இருவருக்கும் ஒரே நேரத்தில் ஏற்பட்டது. ஹோல்ம்ஸ் ஒளிந் திருந்த இடத்தில் இருந்து சட்டென்று எழுந்தார்.



"இது மிகவும் தீவிரமானது, வாட்சன்." என்று கத்தினார். "எதோ ஒரு பெரிய அசம்பாவிதம் அங்கே நடந்து கொண்டிருக்கிறது. அப்படியொரு செய்தி ஏன் சட்டென்று நிற்க வேண்டும். நான் உடனே ஸ்காட்லாந்து யார்டு காவல் துறையை வரச் சொல்கிறேன். இருந்தாலும் இங்கிருந்து கிளம்பவே மனம் இடம் கொடுக்கவில்லை."

"நான் வேண்டுமானால் காவல் நிலையம் செல்லட்டுமா?"

"சூழ்நிலை என்னவென்று நாம் சரியாக அவர் களுக்கு விளக்க வேண்டும். வேறு எதாவது அப்பாவித்தனமாகக்கூட எதுவும் நடந்து கொண் டிருக்கலாம். வாருங்கள், வாட்சன். நாமே அங்கு சென்று என்ன நடக்கிறது என்று பார்க்கலாம்."

ஹோவீ தெருவில் வேகமாக நாங்கள் நடந்து கொண்டிருக்கும்போது நான் கிளம்பிய வீட்டைத் திரும்பிப் பார்த்தேன். அங்கே மேலே இருந்த சாளரத்தின் மெல்லிய வெளிச்சத்தில் ஒரு தலை, ஒரு பெண்ணின் தலை தெரிந்தது. அது மிகக் கலவரத்தோடு இரவில் கூர்மையாகத் தன் பார் வையை வீசிக் கொண்டிருந்தது. பாதியில் நிறுத் தப்பட்ட செய்தி மீண்டும் தொடரும் என்று எதிர்பார்த்துக் கொண்டு மூச்சுவிடாமல் காத்திருந் தது.

ஹோவீ தெருவின் அடுக்கு மாடிக் குடியிருப்புகளின் நுழைவாயில் கதவினருகில் கழுத்துப்பட்டியும் நீண்டதொரு கோட்டும் அணிந் திருந்த ஒரு மனிதன் இரும்புக் கிராதியில் சாய்ந்து கொண்டிருந் தான். எங்கள் முகங்களின் மேல் வெளிச்சம் விழுந்ததும் அவன் எங்களை நோக்கி வந்தான்.

"ஹோல்ம்ஸ்" என்று கத்தினான்.

"கிரெக்சன்!" என்று எனது நண்பனும் அழைத் தான். பின்னர் அவன் ஸ்காட்லாந்து யார்டு துப் பறிவாளனின் கைகளைக் குலுக்கினான். "பய ணங்கள் காதலர்களின் சந்திப்புகளில் முடிகிறது. என்ன விஷயமாக இங்கு வந்திருக்கிறீர்கள்?"

"நீங்கள் என்ன விஷயமாக இங்கு வந்திருக்கி றீர்களோ, அதேதான் என்று நினைக்கிறேன்." என்றார் கிரெக்சன். "நீங்கள் எப்படி இதில் சம்பந் தப்பட்டிருக்கிறீர்கள் என்று எனக்குப் புரிய வில்லை."

"இரு வேறு இழைகள், ஆனால் ஒரே முடிச்சை நோக்கி. நான் அந்த சைகைகளை நோக்கி வந்தேன்."

"சைகைகளா?"

"ஆம், அந்த சாளரத்தில் இருந்து. ஆனால் அது பாதியில் நிறுத்தப்பட்டு விட்டது. எதனால் என்று கண்டுபிடிக்கவே நாங்கள் சென்று கொண்டிருக்கிறோம். நீங் கள் இறங்கி விட்டதால் இனி எனக்கு இதில் வேலை ஒன்றும் இருக்காது என்று நினைக்கிறேன்."

"சற்றுப் பொறுங்கள்." என்று கிரெக்சன் ஆவலுடன் கத்தினார். "நான் உங்களுக்கு இந்த நன்மை யாவது செய்கிறேன், திரு ஹோல்ம்ஸ். நீங்கள் எங்கள் பக்கத்தில் இருப்பத னால் நான் வலிமையாக இருப்பதாக உணர்கிறேன். இப்படிப்பட்ட ஒரு வழக்கு இதுபோல் இதுவரை எனக்கு அமைந்ததில்லை. இந்தக் குடியிருப்பு களுக்கு ஒரே ஒரு வாயில்தான் இருக்கிறது. அதனால் அவனை நாம் பத்திரமாகப் பிடித்து விடலாம்."

"யாரவன்?"

"நன்று. திரு ஹோல்ம்ஸ். இந்த முறை நாங்கள் உங்களைவிட ஒரு படி மேலே இருக்கலாம். நீங்கள் எங் களுக்கு உங்களது மிகச் சிறந்ததான உதவியைச் செய்ய வேண்டும்" அவரது கைத் தடியை நிலத்தில் அடித்தார். அதைப் பார்த்து ஒரு வாடகைக் கார் ஓட்டும் ஓட்டுநர் ஒருவர் கையில் தன் சாட்டையுடன் தெருவின் மறு முனையில் நிறுத்தி வைத்திருந்த தனது நான்கு சக்கர வாகனத்தில் இருந்து மெதுவாக நடந்து வந்தார். "நான் உங்களை திரு ஷெர்லாக் ஹோல்ம்ஸ் அவர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கலாமா?" என்று அந்த ஓட்டுனரிடம் கேட்டார். "இது பின் கேர்ட்டன் அமெரிக்க நிறுவனத்தில் பணி புரியும் திரு லெவெர்ட்டன்."

"லாங் தீவு குகை மர்மத்தின் கதாநாயகன்" என்றார் ஹோல்ம்ஸ். "உங்களைச் சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சி"

அந்த அமெரிக்கர் அமைதியான வியாபாரத் தொழில் செய்யும் இளைஞர் போல் தெரிந்தார். நன்கு மழிக்கப்பட்ட கூர்மையான முகம். புகழாரம் சூட்டியதால் மெல்லிய புன்னகையோடு இருந்தார். "நான் எனது வாழ்வின் பாதையில் பயணித்துக் கொண்டிருக்கிறேன், ஹோல்ம்ஸ்." என்றார் அவர். "கோர்கியானோ எனக்குக் கிடைத்தால்"

"என்ன? சிவப்பு வட்டத்தின் கோர்கியா னோவா?"

"ஓ! அவரது பெயர் ஐரோப்பா வரை பிர பலமா? நன்று. நாங்கள் அவரைப் பற்றி அமெ ரிக்காவில் அறிந்திருக்கிறோம். அவர் ஒரு

ஐம்பது கொலைகளிலாவது சம்பந்தப்பட்டிருக்கிறார். இருந்தும் அவரைப் பிடிக்க ஒரு சின்ன தடயம்கூட சிக்கவில்லை. நான் அவனை நியூயார்கிலிருந்து தேடி வந்திருக்கிறேன். லண்டனில் கிட்டத்தட்ட ஒரு வாரமாகத் தேடி அலைந்து விட்டேன். எதாவது ஒரு தடயம் கிடைத்து அவனைக் கைது செய்து விட மாட்டோமா என்று ஏங்குகிறேன்.

நாங்கள் அந்த வாடகை வீடு வரை அவனைத் துரத்தி வந்து விட்டோம். அதற்கு ஒரே ஒரு கதவுதான் இருக்கிறது. அதனால் இந்த முறை அவன் தப்பிக்க முடியாது. அவன் உள்ளே சென்ற பின் மூன்று பேர் வெளியே சென்றிருக்கிறார்கள். எனக்கு உறுதியாகத் தெரியும் அதில் இவன் இல்லை என்று.''

''திரு ஹோல்ம்ஸ் சைகைகள் பற்றிச் சொன்னார்'' என்று கிரெக்சன் பேச ஆரம்பித்தார். ''எப்பொழுதும் போல் அவருக்கு நம்மைவிட அதிகம் தெரிந்திருக்கும்''

ஹோல்ம்ஸ் சில வார்த்தைகளில் நாங்கள் அனுபவித்ததைத் தெளிவாக எடுத்துரைத்தார். அந்த அமெரிக்கன் தனது கையால் இன்னொரு கையில் ஓங்கி அடித்துக் கொண்டார் வெறுப்பில்.

''அவன் நம்மைக் கண்டு பிடித்து விட்டான்'' என்று கத்தினார்.

''ஏன் அப்படி நினைக்கிறீர்கள்?''

''அப்படித்தான் தோன்றுகிறது. இல்லையா. அவனது கூட்டாளிக்கு செய்தி அனுப்பிக் கொண்டிருக்கிறான். அவனுடைய கூட்டத்தில் பல பேர் லண்டனில் இருக்கிறார்கள். உங்கள் கூற்றுப்படியே எதோ ஒரு அபாயம் இருக்கிறது என்று தெரிவித்திருக்கிறான். அதைப் பாதியில் வேறு நிறுத்தி விட்டிருக்கிறான். ஏனெனில் அந்தச் சாளரத்தில் இருந்து நம்மைக் கவனித்திருக்கக்கூடும். இல்லையேல் அபாயம் எவ்வளவு அருகில் இருக்கிறதென்று தெரிந்திருக்கக் கூடும். அதனால் அதில் இருந்து தப்பிக்க உடனே செயல்பட்டிருக்க வேண்டும். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள், ஹோல்ம்ஸ்?''

''நாம் உடனே மேலே சென்று பார்க்கலாம் என்று நினைக்கிறேன்''

''ஆனால் அவனைக் கைது செய்ய நமக்கு ஆணை எதுவும் இல்லை''

''அவன் யாரும் வசிக்காத ஓரிடத்தில் சந்தேகிக்கக் கூடிய சூழ்நிலையில் இருக்கிறான்.'' என்றார் கிரெக்சன். ''இப்பொழுது அதுபோதும். அவனை மண்டி இட வைத்ததும் நியூயார்க் நமக்கு உதவி செய்ய முடியுமா என்று தெரிந்து கொள்கிறேன். இப்பொழுது நான் அவனைக் கைது செய்யும் பொறுப்பை எடுத்துக் கொள்கிறேன்.''

நமது உளவுத்துறை துப்பறியும் விஷயத்தில் சொதப்பலாம் ஆனால் வீரத்தில் என்றும் சோடை போனதில்லை. ஸ்காட்லாந்து யார்டின் அலுவலக மாடிப்படிகளில் ஏறும் அதே மிடுக்குடன் அமைதியாக தோரணையோடு கிரெக்சன் அந்தக் கொலைகாரனைக் கைது செய்ய மாடிப்படிகளில் ஏறினார். அந்த பின் கேர்ட்டன் அவரைக் கடந்து செல்ல முயற்சித்தான். ஆனால் அவர் அவனைத் தன் முட்டியால் தடுத்து நிறுத்திப் பின்னே செல்லச் சைகை செய்தார். லண்டனில் நேரும் அபாயங்களை எல்லாம் தெரிந்தவர்கள் லண்டன் காவல்துறை மட்டுமே.

இடது புற குடியிருப்பின் கதவு மூன்றடி எடுத்து வைத்தபோது பாதி திறந்த நிலையில் இருந்தது. கிரெக்சன் அதை மெதுவாகத் திறந்தார். அதற்குள் முழுமையான அமைதி தவழ்ந்தது. கும்மிருட்டு படர்ந்திருந்தது. நான் ஒரு தீக்குச்சியைக் கிழித்து அந்தத் துப்பறிவாளனின் விளக்கைப் பற்ற வைத்தேன். நான் அவ்வாறு செய்யும்போது அதன் திரி பற்றிச் சரியாக எரிய ஆரம்பிக்கும் நேரம் எங்கள் அனைவரின் கண்களும் ஆச்சர்யத்தால் விரிந்தன. கம்பளம் இல்லாத அந்தத் தளத்தில் புத்தம் புதிய ரத்தக் கோடுகள் தெரிந்தன. அதன் மேல் உள்ள சிவந்த காலடித் தடங்கள் உள்ளே இருந்த ஓர் அறையின் உள்ளேயும் வெளியேயும் எங்களை வழி நடத்திச் சென்றன. அதன் கதவு மூடப்பட்டிருந்தது. கிரெக்சன் அதன் கதவைத் திறந்து தன் விளக்கின் வெளிச்சத்தைப் பாய்ச்சினார். நாங்கள் அனைவரும் ஆர்வத்தோடு அவரது தோளின் மேல் எட்டிப் பார்த்தோம்.

அந்த அறையின் நடுவில் ஒரு பெரிய மனிதனின் உருவம் சுருண்டு கிடந்தது. அவனது நன்கு மழிக்கப்பட்ட கறுப்பான முகம் மிக மோசமாக கோணலாய் இருந்தது. அவனது தலையைச் சுற்றி ஒரு ஒளி வட்டம் போல் சிவப்பு நிறத்தில் குருதி வட்டமடித்திருந்தது. அவனது முழங்கால்கள் மேலே எழும்பி இருந்தன. அவனது கைகள் விரிந்திருந்தன அதீத வலியினால். மேல் நோக்கி இருந்த அவனது அகன்ற பழுப்பு நிற கழுத்தின் நடுவில் இருந்து வெள்ளை நிற பிடி கொண்ட கத்தி நீண்டு கிடந்தது. எவ்வளவு பெரிதாக இருந்தாலும் கோடரியால் வெட்டப்பட்ட ஒரு மாட்டினைப் போல் அந்த அடி அவனை வீழ்த்தி இருக்க வேண்டும். அவனது வலது கைக்குப் பக்கத்தில் பயங்கரமான இரு முனையும் கூரான கத்தி ஒன்று தரையில் கிடந்தது. அதன் அருகில் கறுப்பு நிறத்தில் குழந்தைக் கையுறை இருந்தது.

''ஆஹ், இது கோர்கியானோ அல்லவா.'' என்று பதறினான் அந்த அமெரிக்கன். ''யாரோ நம்மை முந்தி விட்டார்கள்''

''இங்கே இருக்கிறது அந்த மெழுகு வர்த்தி, திரு ஹோல்ம்ஸ்'' என்றார் கிரெக்சன். ''இதோ நீங்கள் என்ன வேண்டும் என்றாலும் செய்து கொள்ளுங்கள்.''

ஹோல்ம்ஸ் அவரை நோக்கி அடி எடுத்து வைத்து, மெழுகுவர்த்தியைப் பற்ற வைத்தார். சாளரத்தின் முன்னும் பின்னும் அசைத்து விட்டு இருட்டில் பார்த்தார். அதன் பின் அணைத்து விட்டுக் கீழே எறிந்து விட்டார்.

''அது உதவியாய் இருக்கும்'' என்றார். பின் அவர் வந்து ஆழ்ந்த யோசனையில் இருக்கும்போது அந்த இரு துப்பறிவாளர்களும் அந்த உடலை ஆராய்ந்து கொண்டிருந்தார்கள். ''நீங்கள் கீழே காத்துக் கொண்டிருக்கும்போது மூன்று பேர் உங்களைக் கடந்து சென்றார்கள் என்று சொல்லி இருந்தீர்கள்.'' என்றார் இறுதியில். ''நீங்கள் அவைகளைச் சரியாகக் கவனித்தீர்களா?''

''ஆம்''

''ஒரு முப்பது வயது மதிக்கத்தக்க கருப்பு தாடி வைத்துக் கொண்டு நடுத்தர பருமனில் ஒருவன் சென்றானா?''

''ஆம், அவன்தான் கடைசியாகச் சென்றான்''

''அதுதான் நீங்கள் தேடக் கூடிய ஆள் என்று நினைக்கிறேன். நான் அவனது விவரங்களைக் கொடுக்கிறேன். அவனது பாதங்கள் பற்றிய மிகச் சிறந்த விவரம் இருக்கிறது. அது உங்களுக்குத் போதும் என்று நினைக்கிறேன்''

''பற்றாது என்று நினைக்கிறேன், திரு ஹோல்ம்ஸ். லட்சக்கணக்கான லண்டன் மக்கள் தொகையில் அவனை இதை வைத்துக் கண்டு பிடிப்பதென்பது இயலாது''

''இருக்கலாம். அதனால்தான் உங்கள் உதவிக்கு இந்தப் பெண்மணியையும் அழைக்கலாம் என்று நினைக்கிறேன்''

(தொடரும்)

# சாதிப்பதற்கு எதுவும் தடையில்லை!


மாட்டுத் தொழுவத்தில் வேலை செய்து அவ்விடத்தையே படிக்கும் இடமாகவும் மாற்றிக்கொண்டு கடின உழைப்பால் நீதிபதியாகத் தெரிவாகி இருக்கிறார் ஒரு ஏழை விவசாயப் பால்காரனின் மகள்.

இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்தில் நடைபெற்ற நீதித்துறை சேவைக்கான தேர்வில் தனது முதல் முயற்சியிலேயே வெற்றி பெற்றிருக்கிறார் பால் கியாலி லால் சோனல் சர்மா.

உதயபூர் நகரைச் சேர்ந்தவர் பால் கியாலி லால் ஷர்மா. இவர் அதே ஊரில் பால் வியாபாரம் செய்து வருகிறார். இவருக்கு 4 பெண் குழந்தைகள். அவர்களில் இரண்டாவது மகள்தான் சோனல் சர்மா. இவர் சட்டப் படிப்பில் இளங்கலை மற்றும் முதுகலை பட்டங்களை முடித்துள்ளார். அவற்றில் 3 தங்கப் பதக்கங்களை பெற்றவர்.

அத்தோடு 2018ஆம் ஆண்டு ராஜஸ்தான் நீதித்துறை சேவை தேர்வை எழுதியிருந்தார் சோனல் சர்மா. முடிவுகள் 2019ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டன. அப்போது தேர்வில் 1 மதிப்பெண் குறைவாக எடுத்ததன் காரணமாக சோனல் சர்மா காத்திருப்போர் பட்டியலுக்கு தள்ளப்பட்டார்.

தினமும் அதிகாலை நான்கு மணிக்குக் கண் விழித்து கால்நடைகளுக்கு உணவு கொடுப்பது, மாட்டுக் கொட்டகையை சுத்தம் செய்வது, சாணம் அள்ளுவது என தனது தந்தைக்கு உதவி செய்த படியே காத்திருந்தார்.




நீதித் துறை தேர்வில் வெற்றி பெற்றவர்கள் ஒரு வருட மேற்பயிற்சியைப் பெறவேண்டும். ஆனால், 2018ஆம் ஆண்டு தேர்வில் வெற்றி பெற்றவர்களில் 7 பேர் பயிற்சியில் சேரவில்லை. இந்த செய்தி சோனலுக்குத் தெரியவந்துள்ளது.

> படிப்பதற்கு வசதிகளோ வாய்ப்புக்களோ தேவை இல்லை. சாதிக்க வேண்டும் என்ற தளம் பாத நிலைப்பாடு ஒன்றே போதுமானது.

இதனால், கடந்த செப்டம்பர் மாதம் இது குறித்து ராஜஸ்தான் உயர் நீதிமன்றத்தில் ஒரு மனுவைத் தாக்கல் செய்திருந்தார் சோனல். இதனையடுத்து, கடந்த புதன்கிழமை ராஜஸ்தான் அரசு காத்திருப்போர் பட்டியலில் உள்ளவர்களுக்கு அந்த வாய்ப்பை வழங்கியது.

இதனால், சோனல் நீதிபதியாகும் வாய்ப்பைப் பெற்றுள்ளார். ''எனக்கு சிறந்த கல்வியை வழங்க என் பெற்றோர் கடுமையாக உழைத்துள்ளனர். இப்போது என்னால் அவர்களுக்கு ஒரு வசதியான வாழ்க்கையை வழங்க முடியும். படிப்பதற்கு வசதிகளோ வாய்ப்புக்களோ தேவை இல்லை. சாதிக்க வேண்டும் என்ற தளம்பாத நிலைப்பாடு ஒன்றே போதுமானது. படிக்கும் நாள்களில் புத்தகம் கொப்பி வாங்கு வதற்கு கூட முடியாதளவிற்கு வறுமை இருந்தது எங்கள் வீட்டில். ஆனால் அவைகளை நினைத்து ஒரு நாளும் படிப்பை கைவிடும் எண்ணம் என் மனதில் வந்ததில்லை என்னவென்றாலும் படித்தே ஆக வேண்டும் என்ற எண்ணம் மாத்திரமே மனதில் இருந்தது'' என்கிறார் சோனல்.

# த பேர்ட்ஸ்



ஷங்கர் இயக்கி, ரஜினிகாந்த் நடித்து **2010** ஆம் ஆண்டில் வெளியாகிய படம் எந்திரன். அதன் தொடர்ச்சியாக **2018**ஆம் ஆண்டில் வெளியான படம் **2.0.** ரஜினிகாந்த் அதன் நாயகன் ஆனாலும் வில்லன் பாத்திரம் வழங்கப்பட்ட அக்சய் குமார் என்கிற பட்சிராஜாவே திரைக்கதையின் நாயகனாக இருப்பார். பறவைகளுக்கு மனிதர்கள் இழைத்த தீங்குகளைத் தட்டிக்கேட்கப் புறப்பட்ட புதிய ரகக் ஹீரோவான அவரை இயக்குநர் வில்லனாகவே காட்சிப்படுத்தியிருப்பார். அந்தக் கதையில் பறவைகளுக்கு மனிதர்களால் இழைக்கப்படுகின்ற எண்ணிலடங்காத தீங்குகள் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும். அந்தத் தீங்குகளை எதிர்த்து மனிதர்களைப் பழிவாங்கும் பாத்திரமே பட்சிராஜாவினுடையது.

அதைப்போன்றதொரு கதையே இந்த அமெரிக்க ஆங்கிலத் திரைப்படத்தின் கதையும். ஆனால் இந்தத் திரைப்படம் **2.0**விலிருந்து மிகவும் பழமையானது. காலத்தால் முந்தையது. **1963**ஆம் ஆண்டில் வெளியாகியது. இதில் பறவைகளே பழிவாங்குகின்றன. திகில் - விறுவிறுப்பூட்டும் இந்தப் படத்தை அல்ஃபிரட் ஹிட்ச்காக் என்பவர் தயாரித்து இயக்கியுள்ளார். ராட் டெய்லர், டிப்பி ஹெட்ரன், ஜெசிகா டேண்டி, சுசேன் பிளெஷெட், வெரோனிகா கார்ட்ரைட் ஆகியோர் நடித்துள்ளனர். அமெரிக்காவின் கலிபோர்னியாவிலுள்ள பொடேகே வளைகுடாப் பகுதிக்கு புதிதாகக் குடியமர வருகின்ற மிட்ச் பெரென்னரின் குடும்பத்தைக் குறிவைத்துப் பறவைகள் தாக்குவதை பதைபதைக்கும் காட்சிகளாகக் காட்டுவதே படம். இறுதியில் காரணம் கூறப்படுகிறது.

**கதைக் கோர்வை**

மெலானி என்ற இளம்பெண் தனது தங்கையின் **11**ஆவது பிறந்த நாளுக்கு "லவ்பேர்ட்ஸ்" தேடி சான்பிரான்சிஸ்கோ நகரெங்கும் அலைகிறாள். நகரத்தில் எங்கு தேடியும் அவை கிடைக்கவில்லை. அந்தக் கடை ஒன்றுக்கு வேறு ஏதோ வேலையாக வந்த மிர்ச்சியிடம் அவளுக்குப் பழக்கம் ஏற்படுகிறது. அவளுக்கு லவ்பேர்ட்ஸ் தருகிறேன் என்று கூறுகிறான். அதற்காகத் தான் தங்கியிருக்கும் பொடேகா வளைகுடா பகுதிக்கு அவளை வரச் சொல்கிறான்.

அவன் சொன்ன நேரத்துக்கு அவனைத் தேடி அவள் படகில் செல்கிறாள். அவன் அவளை வரவேற்கிறான். அவள் படகில் துறையை அடையும் இடத்தில் கடற்பறவை ஒன்று வேகமாகப் பறந்துவந்து அவளைத் தாக்குகிறது. அவளுடைய தலையிலிருந்து குருதி கசிகிறது. மிர்ச்சி அவளை வீட்டுக்கு அழைத்துச் செல்கிறான். அவளிடம் லவ்பேர்ட்ஸைக் கொடுக்கிறான். அவளும் நன்றியோடு அதைப் பெற்றுக்கொள்கிறாள்.

மெலானிக்கு அவன் தனது தாய், தங்கையை அறிமுகம் செய்கிறான். அவள் தனது ஆசிரியையை சந்திக்க வேண்டியுள்ளதால் லவ்பேர்ட்ஸைப் பிறகு எடுத்துச் செல்லலாம் என்று மிர்ச்சியின் வீட்டில் அதை ஒரு இடத்தில் மறைத்து வைக்கிறாள். தனது வகுப்பு ஆசிரியையைச் சந்திக்கச் செல்கிறாள். சென்றவள் அண்ணியின் வீட்டிலேயே இரவு தங்கிவிடுகிறாள். அவள் தங்கியிருக்கும் அன்று இரவு வெளியே பறவைகளின் இரைச்சல் கேட்கிறது. ஒரு கடற் பறவை வேகமாக வீட்டுக்க உள்ளே வர முயன்று முன்கதவில் மோதி இறக்கிறது.

◆ ◆ ◆ ◆

மறுநாள் தங்கை கேத்தியின் பிறந்தநாள். அங்குவரும் குழந்தைகள் பலரும் அங்குள்ள தோட்டத்தில் ஓடியாடி விளையாடி மகிழும்போது கடற்பறவைகள் வட்டமிடுகின்றன. கண்ணைக் கட்டி விளையாடும் கேத்தியைத் தாக்குகிறது ஒரு பறவை. பின்னர் நிறையப் பறவைகள் கீழிறங்கி வந்து குழந்தைகளை மட்டுமல்ல அவர்களின் பெற்றோர்களையும் தாக்குகின்றன. அனைவரும் ஓடிச்சென்று மரவீட்டின் உள்ளே போய் கதவை மூடிக்கொண்டு பதுங்கிக் கொள்கின்றனர். மறுநாள் வீட்டில் காலை உணவு உண்டு முடித்தபின் புகைபோக்கியின் வழியே ஏராளமான பறனவகள் உள்ளே பறந்து வந்து அவர்களைத் தாக்குகின்றன. வீட்டுக்குள் நுழைந்து அனைவரையும் சூழ்ந்து தாக்குகின்றன. அனைவரும் அங்கும் இங்கும் ஓடிப் பறவைகளிடமிருந்து தப்பிக்க முடியாமல் காயப்படுகின்றனர்.

◆ ◆ ◆ ◆

இன்னொரு நாள் மெலானியின் தாய் கடைக்குப் போய்விட்டு வீட்டுக்குத் திரும்புகிறாள். அந்தப் பெரிய மரவீடு திறந்து கிடக்கிறது. வீட்டில் இருந்தவர்களைக் காண



வில்லை. அவர்கள் எங்கே போனார்கள் என்று தேடுகிறாள். வீட்டுக்குள் இருந்த பொருள்கள் அனைத்தும் உடைந்திருக்கின்றன. அதிர்ச்சியுடன் சுற்றிலும் நோட்டமிட்டவாறே ஒவ்வொரு அறையாகச் சென்று பார்க்கையில் ஓர் அறையில் அந்த வீட்டின் பெரியவர் கண்கள் தோண்டப்பட்டு இறந்து கிடப்பார். சுற்றிலும் பறவைகளின் இறகுகள் கிடக்கும்.

◆ ◆ ◆ ◆

ஒருநாள் பாடசாலைக்குச் சென்ற தங்கையை அழைத்து வருவதற்காக மெலானி விளையாட்டு மைதான இருக்கையில் காத்திருக்கிறாள். சற்று நேரத்தில் வானத்தைத் திடீரென்று அவள் பார்க்கும்போது ஒரு பறவை கடும் வேகத்தோடு பறந்து வந்து ஏற்கெனவே அங்கு அமர்ந்திருக்கும் பறவைகளோடு அமர்கிறது. ஏராளமான பறவைகளைக் கண்ட அவள் அதிர்ச்சியடைந்து பள்ளி வகுப்பறைக்குள் சென்று ஆசிரியையிடம் நிலைமையைக் கூறுவாள். மாணவர்கள் வேறு வழியூடாக வெளியேறி ஓடும்போது பறவைகள் வேகமாகப் பறந்து வந்து அவர்களைத் தாக்கத் தொடங்குகின்றன. தப்பிப்பிதற்காகப் பிள்ளைகள் அங்குமிங்குமாகச் சிதறி ஓடுகின்றனர்.




◆ ◆ ◆ ◆

இன்னொரு நாளில் மெலானி வீதியில் நடந்து போய்க்கொண்டிருக்க திடீரெனப் பறவைகள் தாக்க வருகின்றன. அங்கிருந்த மக்கள் எல்லாம் அலைமோதி அருகிலிருக்கும் மதுபானக் கடைக்குள் நுழைகிறார்கள். இவளும் அவர்களுடன் ஓடிச்சென்று கடைக்குள் தஞ்சம் புகுகிறாள்.

அப்போது அவர்கள் யன்னல் வழியே பார்த்துக்கொண்டிருக்கும்போது பெட்ரோல் நிரப்பு நிலையம் அருகில் காரை நிறுத்திவிட்டு ஒருவர் பெட்ரோல் நிரப்பிக்கொண்டிருக்கிறார். ஒரு பறவை பறந்துவந்து அவரை அடித்துவிட்டுச் செல்கிறது.

அவர் கீழே விழுவதைப் பார்த்து மதுபானக்கடைக்குள் தஞ்சம் அடைந்த சிலரும் ஓடிச்சென்று கீழே விழுந்தவரைத் தூக்குவார்கள். பறவை தாக்கியதால் பெட்ரோல் குழாயை தவறவிட்டதால் அந்த பெட்ரோல் வீதியின் குறுக்கே மெல்ல வழிந்தோடி வரும். ஆனால் கீழே விழுந்தவரை காப்பாற்றப் போனவர்கள் அந்தப் பறவை போன திசையையே பார்ப்பார்களே தவிர பெட்ரோல் வழிவதைப் பார்க்க மாட்டார்கள். அந்த நேரம் பார்த்து பெட்ரோல் வழிந்த இடத்தில் ஒருவர் காரைக் கொண்டு வந்து நிறுத்தி வெளியே வந்து நின்று சிகரெட் பிடிக்க தீக்குச்சியைப் பற்றவைப்பார்.

மதுபானக்கடை ஜன்னல் வழியே திடீரென இக்காட்சியைப் பார்க்க நேர்ந்த மெலானி மற்றவர்களிடம் "அங்கே பாருங்கள் தீக்குச்சியை பெட்ரோல்மீது போட்டுவிடப் போகிறார்" அவரைத் தடுத்து நிறுத்துங்கள் எனச் சொல்ல "அனைவரும் சிகரெட் பற்றவைப்பவரை வேண்டாம் பற்றவைக்காதீர்கள்" என ஆரவாரித்து கதவைத் திறந்துகொண்டு வெளியே செல்ல அந்த மனிதர் ஏதோ சத்தம் கேட்கும் பதற்றத்தில் விரலில் பற்றவைத்த தீக்குச்சியைப் போட்டுவிடுகிறார். பெற்ரோலில் தீ பட்டுவிடுகிறது. இதனால் அங்கிருந்த கார்கள் எல்லாம் வெடித்து எரிந்து பெட்ரோல் நிரப்பு நிலையமும் எரிந்து சாம்பலாகின்றன. இப்படியாகக் பறவைகளின் தாக்குதல் காட்சிகள் அடுத்தடுத்து வருகின்றன. முடிவில் அவர்கள் அந்தப் பகுதியிலிருந்து வெளியேறி விடுவதென முடிவு செய்கிறார்கள்.

பறவைகளால் இறந்த சிலரைத் தவிர மீதியுள்ளவர்கள் காரில் புறப்படுவார்கள். பறவைகள் இவர்கள் வீட்டுக்கெதிரே கொலைவெறியோடு காத்திருப்பதைப் போன்ற தோற்றத்தோடு ஆயிரக்கணக்கில் அமர்ந்திருக்கும். ஒவ்வொருவராக காருக்குள் போய் அமர்வதை அமைதியாகப் பார்த்துக் கொண்டிருக்கும். அனைவரும் வந்து அமர்ந்த பிறகு கார் செல்வதை பார்த்துக்கொண்டேயிருக்கும்.

◆ ◆ ◆ ◆

இவ்வாறாகப் பலகோர்வையான சம்பவங்களால் பின்னப்படுகிறது திரைக்கதை. இதற்கு எல்லாம் முன்பாக **1961**இல் ஒரு சம்பவம். கலிபோர்னியாவின் கடலோரத் தலைநகரத்தின் வீட்டுக்கூரைகள் எங்கும் கடற்பறவைகள் எக்கச்சக்கமாக இறந்துகிடக்கின்றன. அதையொட்டி மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் அந்தப் பறவைகள் உண்ட உணவில் நஞ்சு இருந்தமை தெரியவருகிறது.

**நடிப்பும் ஒளிப்பதிவும் சிறப்பு**

மெலானி என்கிற இளம்பெண்ணின் திகிலான உணர்ச்சிப் பிரவாகத்தை நடிகை டிப்பி ஹெட்ரென் வெளிப்படுத்தியுள்ள விதம் திரைப் படத்தோடு பார்வையாளர்களைக் கட்டிப்போட வைக்கிறது. ஹொலிவூட்டின் ராட் டாய்லோர், ஜெஸிக்கா டேண்டி உள்ளிட்ட கலைஞர்களின் நடிப்பும் கதைக் களத்துக்கே பார்வையாளர்களை அழைத்துச் சென்றுவிடுகிறது. இப்படத்தின் ஒளிப்பதிவால்; காட்சிகளின் இயல்பை நேர்த்தியாக வழங்க முடிந்திருக்கிறது இதன் ஒளிப்பதிவாளரான ரோபர்ட் பர்க்ஸால்.

# உள்ளக சுயநிர்ணயத்தை பிரபாகரன் நிராகரித்தார்...

● வி.அருணாசலம்



2001ஆம் ஆண்டின் பிற்பகுதியில் நோர்வேயின் சமாதானத் தூதர் எரிக் சொல்கெய்ம் பிரபாகரனை மல்லாவியில் சந்தித்துத் தனது சமாதான முயற்சிக்கான நல்லெண்ணத்தை உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தார். அந்தச் சமாதான முன்னெடுப்பை பிரபாகரனும் வரவேற்றிருந்தார். அந்த நல்லெண்ண விடயம் முடிந்து விடைபெறும் நிலையில் சொல்கெய்முக்கு ஒரு நினைவுச் சின்னத்தை வழங்கினார் பிரபாகரன். அது தங்க முலாம் பூசப்பட்ட தமிழீழ நாட்டைப் பிரதிபலிக்கும் சின்னம். அதனூடாகப் பிரபாகரன் தனது நோக்கத்தை வெளிப்படையாகவே சொல்கெய்முக்குக் கொடிட்டுக் காட்டியிருந்தார்.

### ஒஸ்லோ உடன்படிக்கை வித்தியாசமானது

1987ஆம் ஆண்டில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் 13 ஆவது திருத்தச் சட்டம், வடக்குக் கிழக்கு இணைப்பு, காணி அதிகாரம், பொலிஸ் அதிகாரம் என்று பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்த போதும் தமிழ் மக்களுக்கான அரசியல் உரிமைகள் பற்றித் தனியாகப் பேசப்பட்டபோதிலும் அந்த ஒப்பந்தத்தில் தமிழரை ஒரு தரப்பாக ஏற்றுக்கொள்ளவில்லை. இதனால் இன்றுவரை இந்தியா - இலங்கை ஒப்பந்தத்துக்கு மாறாக இந்தியாவோ, இலங்கையோ செயற்படும்போது அதைத் தர்க்கபூர்வமாகத் தட்டிக் கேட்கும் அதிகாரம் தமிழருக்கு இருக்கவில்லை.

ஒஸ்லோ உடன்படிக்கையின்போது நோர்வேயின் நடுநிலைமையில் இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் சம தரப்பாகக் கையாளப்பட்டனர். இது இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் காணப்படாத ஒரு சிறப்பம்சமாகும். இலங்கை அரச குழுவினரும், விடுதலைப் புலிகளின் சமாதான செயலகமும் பேச்சுகளில் ஈடுபட்டதுடன் அந்தப் பேச்சுகள் பல நாடுகளிலும் நடந்தேறின என்பது தமிழருக்குக் கிடைத்த ஒரு பன்னாட்டு அங்கீகாரமாகும். இதைவிடத் தலைமறைவு இயக்கமான விடுதலைப்புலிகளுக்குப் பன்னாட்டு அரங்கில் ஓர் அரசியல் தளம் திறந்து விடப்பட்டது. பொதுவாக இவ்வாறான பேச்சுகள் இறைமை உள்ள இரண்டு அரசுகளுக்கு இடையில்தான் மேற்கொள்ளப்படுவதுண்டு. ஆனால், விடுதலைப்புலிகள் தமக்கென்று ஒரு கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை வரையறுத்து வைத்திருந்ததும் நிழல் அரசு ஒன்றை நடத்தியதும் அதைவிட ஆனையிறவு முகாம் தாக்குதல் வெற்றி, முகமாலை தீச்சுவாலைத் தாக்குதல் வெற்றி ஆகியவற்றில் இராணுவச் சமநிலையுடன் இருந்தமையும், இலங்கை படைகளுக்கு ஏற்பட்ட பெரியளவு இழப்புகள் எனப் பல காரணிகள் விடுதலைப் புலிகளைச் சம தரப்பாகத் தரமுயர்த்தியிருந்தது.

2001ஆம் ஆண்டு இரட்டைக் கோபுரத் தாக்குதலின் பின்னர் விடுதலைப் போராட்ட அமைப்புகள் பலவற்றை அமெரிக்கா பயங்கரவாதப் பட்டியலில் சேர்த்திருந்தது. இந்தச் சூழ்நிலையில் 1991 ஆம் ஆண்டில் ராஜீவ்காந்தியின் படுகொலையுடன் தொடர்புபட்டிருந்த புலிகள் ஒரு பயங்கரவாத அமைப்பு என்ற நிலைக்குத் தள்ளப்பட்டனர். புலிகள் மீதான பயங்கரவாத முத்திரையை இல்லாது ஒழிப்பதற்கு நோர்வே எடுத்த முடிவு சாதகமாக அமைந்திருந்தது.

அமெரிக்கா இவ்வாறான பயங்கரவாத அமைப்புகளுடன் நேரடியாகப் பேசுவதில்லை என்ற முடிவையும் எடுத்திருந்தது. இந்தப் பின்னணியில் தனது நிலைப்பாட்டை மாற்றிய அமெரிக்கா தாய்லாந்தில் இலங்கை அரச தரப்பினருக்கும் விடுதலைப் புலிகளுக்கு இடையில் நடைபெற்ற பேச்சுகளின்போது தனது உதவி இராஜாங்க அமைச்சர் ரிச்சார்ட் ஆம்ரோஜ்ஜைக் கலந்துகொள்ள வைத்தது.

அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட ரிச்சாரட் ஆம்ரோஜ் புலிகளிடம் இரண்டு விடயங்களைத் தெரிவித்திருந்தார். இலங்கையில் பிரிவினை சாத்தியமற்றது என்பதும், பயங்கரவாதத்தைக் கைவிடுகிறோம் என்று புலிகள் அறிவிக்கவேண்டும் என்பதுமே அவை. இந்தக் கோரிக்கைகளுக்கும் புலிகள் மௌனம் சாதித்தனர். அதேவேளை யாழ்ப்பாண ஆயர் இல்லத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய ஆம்ரேஜ், "புலிகள் தமது தற்கொலைப்படையைக் கலைத்துவிட்டதாக அறிக்கை விடவேண்டும்" எனவும் கோரினார்.

இந்தப் பின்னணியில் உள்ளக சுயநிர்ணய உரிமையை ஏற்பது என்று அன்ரன் பாலசிங்கம் முடிவெடுத்தார். அதன் அடிப்படையிலேயே ஒஸ்லோ பிரகடனம் வெளியிடப்பட்டது.

### ஒஸ்லோ பிரகடனம்

இலங்கை அரச தரப்பினரை ஒரு பூட்டிய அறையிலும் புலிகள் தரப்பை இன்னோர் பூட்டிய அறையிலும் இருத்திவிட்டு ஒஸ்லோ பிரகடனம் இரு சாராருக்கும் வாசித்துக் காட்டப்பட்டது. முடிவில் இலங்கை அரச தூதுக்குழு அதில் கையொப்பமிட்டது. புலிகள் தரப்புக்கு வாசித்துக் காட்டியபோது "இதைவிட ஒரு தீர்வு எமக்குக் கிடைக்கப் போவதில்லை இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதுதான் சரியானது" என்று கருணா அம்மான் அன்ரன் பாலசிங்கத்துக்குக் கூறினார் என்றும் அதனால் அந்த ஒப்பந்தத்தில் அன்ரன் பாலசிங்கம் ஒப்பமிட்டார் என்றும் கூறப்படுகிறது.


### பிரபாகரன் நிராகரித்தார்

உள்ளக சுயநிர்ணய உரிமை என்ற விடயத்தில் "சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழ் மக்களின் வரலாற்றுத் தாயகங்களில் ஐக்கிய இலங்கையின் சமஷ்டி அமைப்பில் சகல தரப்பினரும் ஏற்றுக்கொள்ளும் தீர்வு" என வரையறை செய்யப்பட்டது. மேலும் மத்தியிலும் சுற்றிலும் அதிகாரங்களை எவ்வாறு பகிர்ந்து கொள்வது, புவியியல் பிரதேசங்கள், மனித உரிமைப் பாதுகாப்பு, அரசியல் மற்றும் நிர்வாகப் பொறிமுறை, பொது நிதி நிர்வாகம், சட்டம் ஒழுங்கு ஆகியவற்றைப் பேசித் தீர்த்துக்கொள்வது என்றும் இருதரப்புகளும் இணங்கிக்கொண்டனர்.

மேற்கூறப்பட்ட விடயங்களில் தமிழீழத்தைப் புலிகள் விட்டுக் கொடுத்துச் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் சமஷ்டியை ஏற்பது என்பது அப்போதைய அரசுக்கு ஆறுதல் அளித்தது. (தற்போதைய சூழல் அவ்வாறல்ல) ஆனால் தமிழீழத்தைத் தவிர வேறு எந்தத் தீர்வையும் ஏற்க முடியாது என்பது பிரபாகரனின் நிலைப்பாடாக இருந்தது.

தற்போது புதிய அரசு வரையவுள்ள அரசியல் சீர்திருத்தத்துக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வழங்கியுள்ள ஆலோசனையில் புலிகள் ஏற்றுக்கொண்ட ஒஸ்லோ உடன்படிக்கையின் அடிப்படையில் தமது பரிந்துரைகளை முன்வைத்தோம் என்று அதன் தலைவர் சம்பந்தர் கூறுவது கருணா, அன்ரன் பாலசிங்கம் ஆகியோரால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தாலும் பிரபாகரனால் நிராகரிக்கப்பட்ட விடயத்தையே. ஒட்டுமொத்தத்தில் ஒஸ்லோ உடன்பாட்டைப் புலிகள் ஏற்கவில்லை என்பதே உண்மை.

**"இதைவிட ஒரு தீர்வு எமக்குக் கிடைக்கப் போவதில்லை இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவது தான் சரியானது."**



# தனித்த இடங்களில் காதல் செய்பவர்கள் கவனம்!

## குற்றமும் கைதும்



ஆள்நடமாட்டம் அற்ற தனிமையான இடங்களை நாடிச் செல்லும் காதல் இணைகளின் உதவியற்ற நிலையைப் பயன்படுத்திக்கொண்டு அவர்களில் ஆணை அடித்துக் கட்டிப்போட்டு விட்டு பெண்ணை இழுத்துச் சென்று பாலியல் வன்கொடுமை செய்த கதைகளைத் தமிழ்நாட்டின் செய்தி ஊடகங்களில் படித்திருப்போம் திரைப் படங்களில் பார்த்திருப்போம்! ஆனால், உண்மையில் அப்படியொரு சம்பவம் யாழ்ப்பாணத்திலேயே நடந்தது என்றால் நம்ப முடிகின்றதா?

காதலன் என்று சொல்லப்பட்ட சிறுவனை அடித்து விரட்டிவிட்டு சிறுமியை கடத்திச்சென்று பட்டப் பகலில் வாழைத்தோப்புக்குள் வைத்து வன்புணர்வு செய்துள்ளார் இளம் குடும்பத் தலைவர் ஒருவர். அவருக்கு மற்றொருவர் துணையாகவும் செயற்பட்டுள்ளார். இந்தச் குற்றத்தைப் புரிந்தவர்கள் என்கிற சந்தேகநபர்கள் இருவரையும் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டு 24 மணித்தியாலத்திற்குள் கைது செய்தது யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு.

2019 கார்த்திகை மாதம் 15ஆம் நாள் இந்தப் பாலியல் குற்றம் இடம்பெற்றது. அன்றைய தினம் ஆனைக்கோட்டை பகுதியை சேர்ந்த 14 வயது சிறுமி தனது காதலனுடன் கொக்குவில் பகுதியிலுள்ள கோவில் ஒன்றின் அருகே இருந்த ஆள் நடமாட்டமற்ற பகுதியில் பேசிக் கொண்டிருந்தார். அச்சமயம் அங்குள்ள தண்ணீர் குழாய் ஒன்றில் கால் கழுவ வந்த ஒருவர் குறித்த இருவரையும் அவதானித்ததுடன் அவர்கள் இருவரும் சிறுவர்கள் என்பதையும் நன்கு பதிவுசெய்துகொண்டார்.

கால்களைக் கழுவிக் கொண்டு அங்கிருந்து அகன்ற அந்த நபர் சிறிது நேரத்திலேயே மற்றொருவரையும் அழைத்துக்கொண்டு உந்துருளியில் அந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார். அப்போதும் அந்தச் சிறுவர்கள் இருவரும் அங்கேயே பேசிக்கொண்டு நின்றிருந்தனர். அவர்கள் அருகில் வந்த இருவரும் தாங்கள் காவல்துறைப் புலனாய்வாளர்கள் என்று தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டனர். சிறுவர்கள் இருவரினதும் அடையாள அட்டைகளையும் வாங்கிப் பரிசோதித்தனர்.

பெண் 16 வயதுக்குக் குறைந்தவர் என்பதை உறுதிப்படுத்திக்கொண்ட அவர்கள் 16 வயதுக்கு குறைந்த பெண்ணை தனியே அழைத்துக் கதைப்பது பெரும் குற்றம் என்று கூறி அவரோடு இருந்த பையனை மிரட்டத் தொடங்கினர். இதை எமது அலுவலகத்தில் வைத்தே விசாரிக்கவேண்டும் எனக் கூறி அந்தச் சிறுமியை மோட்டார் சைக்கிளில் தன்னோடு வருமாறு கூறி அவர்களில் ஒருவர் ஏற்றிக்கொண்டார். மற்றைய நபர் அந்தப் பையனை அவரது துவிச்சக்கர வண்டியில் வருமாறு கூறிவிட்டு அவருடன் அந்தச் சிறுமியின் துவிச்சக்கர வண்டியில் தானும் சிறிது தூரம் பயணித்துள்ளார். முதன்மை வீதி வந்ததும் அந்தப் பையனை மிரட்டி விட்டு விடுவிப்பது போன்று விரட்டியடித்துவிட்டார். பின்னர் அந்தத் துவிச்சக்கர வண்டியைக் கோப்பாய் பகுதியிலுள்ள தனது வீட்டிற்கு எடுத்து சென்றுள்ளார்.

சிறுமியை உந்துருளியில் ஏற்றிய நபர் அவரை உரும்பிராய் பகுதியிலுள்ள ஆட்களற்ற வாழைத்தோட்டத்திற்கு அழைத்துச் சென்று அவருடன் பாலியல் துர்நடத்தையில் ஈடுபட்டார். பின்னர் சிறுமி அந்த விடயத்தை வெளியே சொல்லாமல், காவல்துறையிரிடம் முறையிடாமல் இருக்க வேண்டும் என்று மிரட்டியதுடன் நிர்வாணமாகச் சிறுமியைத் தனது கைப்பேசியில் ஒளிப்படங்களையும் எடுத்துள்ளார். முறையிட்டால் அந்தப் படங்களை இணையத் தளங்களில் வெளியிட்டு விடுவேன் என்றும் மிரட்டியுள்ளார்.

பின்னர் சிறுமியை மீண்டும் தனது உந்துருளியில் ஏற்றிக்கொண்டு தனது நண்பருக்கு அழைப்பெடுத்து அவரைச் சிறுமியின் வீட்டடிக்கு அவரது துவிச்சக்கரவண்டியுன் மோட்டார் சைக்கிளில் ஏற்றி கொண்டு, மற்றைய நபரிற்கு தொலைபேசி அழைப்பு எடுத்து துவிச்சக்கரவண்டியை எடுத்து வருமாறு பணித்துவிட்டு, சிறுமியின் வீட்டருகில் அவரை இறக்கிவிட்டதுடன் துவிச்சக்கர வண்டியையும் கையளித்துவிட்டு அவர்கள் இருவரும் தப்பிச் சென்றுவிட்டனர்.

வீடு சென்ற சிறுமி பயத்தில் யாரிடமும் தனக்கு நேர்ந்த அவலம் குறித்து மூச்சுவிடவில்லை. சில நாட்கள் கழித்து வவுனியாவிலுள்ள தனது சகோதரியின் வீட்டுக்கு சென்றுள்ளார் சிறுமி. அங்கு அவருக்குத் தலைச் சுற்றல் ஏற்பட்டுள்ளது. தமிழ்த் திரைப் படங்களில் பார்த்தைப் போன்று பாலியல் பலாத்காரத்தால் தான் ஒருவேளை கர்பமாகிவிட்டாரோ என்று நடுங்கிப்போன சிறுமி விடயத்தைச் சகோதரியிடம் தெரிவித்துள்ளார்.

மிரண்டுபோன சகோதரி உடனடியாக சிறுமியை அழைத்துக் கொண்டு யாழ்ப்பாணம் வந்ததுடன் சம்பவம் தொடர்பில் யாழ். மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவில் கார்த்திகை 24ஆம் நாள் முறையிட்டார்.

முறைப்பாட்டை ஏற்ற காவல்துறையினர் உடனடியாகச் சிறுமியை அழைத்து கொண்டு சம்பவ இடங்களை பார்வையிட சென்றனர். விசாரித்ததில் சிறுமிக்குத் தன்னுடன் தவறாக நடந்துகொண்டவர்கள் யார் என்பது தொடர்பில் எந்தத் தகவலும் தெரிந்திருக்கவில்லை. காவல்துறையினரிடம் இருந்த ஒரே ஒரு உருப்படியான தகவல் சிறுமியை சந்தேகநபர் இறக்கிவிட்ட இடம் மட்டுமே.

அந்த இடத்திற்குச் சென்ற காவல்துறையினர் துவிச்சக்கரவண்டியை சிறுமி பெற்றுகொண்ட இடத்திற்கு அருகாமையிலுள்ள வீடுகளில் விசாரித்தனர். ஒவ்வொரு வீடாகச் சென்றபோது ஒரு வீட்டினுள் நுழைந்ததும் அங்கு சுவரில் மாட்டப்பட்டிருந்த ஒரு ஒளிப்படத்தைப் பார்த்த சிறுமி அதிலிருந்த ஒருவரே தனது துவிச்சக்கர வண்டியை எடுத்துச் சென்றவர் என்று காவலர்களுக்குத் தகவல் தந்தார்.

இதனையடுத்து குறித்த நபரைப் பற்றிய விடயங்களை பெற்றுகொண்ட காவல்துறையிர் அப்பகுதியிலிந்து தமக்குத் தகவல் தரும் நபரைத் தொடர்புகொண்டு சந்தேகநபர் குறித்து விசாரித்தனர். ஆனால், பாலியல் துர்நடத்தைச் சம்பவம் தொடர்பாக அறிந்திராத அந்த உளவாளி, சந்தேகநபரும் அவருடைய நண்பரும் தாம் ஒரு பெண்ணுடன் அண்மையில் உடலுறவு கொண்டது குறித்து மற்றைய நண்பர்களிடம் பெருமையாகப் பேசித் திரிந்தனர் என்பதை உறுதிப்படுத்தினார்.

இதையடுத்து அந்தச் சந்தேகநபர் மீது காவல்துறையினர் ஒரு கண் வைத்தனர். தனது வீட்டுக்கு காவல்துறையினர் வந்ததை அறிந்து கொண்ட சந்தேகநபர் தான் மாட்டிக்கொண்டேன் என்று தெரிந்ததும் வீட்டுப் பக்கம் வருவதைத் தவிர்த்துக் கொண்டார். விசாரணையின்போது அவரது அம்மாவோ தனது பிள்ளை அத்தகைய குற்றங்களைச் செய்யக்கூடியவர் இல்லை என்று சத்தியம் செய்தார். ஆனாலும் மாலை வரையில் சந்தேகநபர் காவல்துறையினரின் விசாரணைக்கு நேரில் முகம் கொடுக்கவில்லை. தமது விசாரணைக்கு வராமல் சந்தேகநபர் ஒளித்து ஓடுவதை அடுத்து அவர் சம்பவ தினம் யாருடன் திரிந்தார் என்கிற தகவல்களை காவல்துறையினர் திரட்டினர். கொடிகாமத்தைச் சேர்ந்த குட்டி என்ற நபருடனேயே அவர் அன்று சுற்றித் திரிந்தார் என்பதை அறிந்து கொண்டனர்.

*குட்டியைப் பற்றி விசாரித்ததில் அவர் இதற்கு முன்னரும் பல குற்றச் செயல்களுடன் தொடர்பு பட்டவர் என்பது தெரியவந்தது.*

குட்டியைப் பற்றி விசாரித்ததில் அவர் இதற்கு முன்னரும் பல குற்றச் செயல்களுடன் தொடர்பு பட்டவர் என்பது தெரியவந்தது.

அவரது வீட்டுக்கு காவல்துறை வாகனத்தில் சென்றால் அந்த நபர் தப்பியோடி விடுவார் என்பதால் முச்சக்கரவண்டி ஒன்றை அமர்த்திக்கொண்டு ஒரு உபகண்காணிப்பாளரும் மற்றும் 3 காவலர்களும் அன்று இருட்டுகிற வேளையில் அவரது வீட்டுக்குச் சென்றனர். வருபவர்கள் காவல்துறையினர் என்பதை அறியாத குட்டி வெளியே வந்த

போதும் வந்தவர்கள் காவலர்கள் என்றும் தெரிந்ததும் தப்பியோடினார்.

அவரைப் பிடிப்பதற்கு காவலர்கள் முற்பட்ட போதும் சிட்டெனப் பறந்த குட்டி வேலி பாய்ந்து தப்பியோடிவிட்டார். கைக்கெட்டியது வாய்க்கெட்ட வில்லை என்கிற நிலையில் இருட்டிவிட்டதால் மேற்கொண்டு அருகிலுள்ள பற்றைக் காடுகளில் அவரைத் தேடமுடியாது காவலர்கள் திரும்பினர்.

அந்த நேரத்தில் சந்தேகநபர்களைக் கண்ட நிந்தபோதும் அவர்கள் இருவரையும் கைது செய்ய முடியாமல் கோட்டைவிட்டிருந்தனர் காவல்துறையினர். தாம் தேடப்படுகின்றோம் என்று தெரிந்த பின்னர் அவர்கள் தலைமறைவாகிவிடுவார்கள் என்பது நன்கு தெரிந்து கையறு நிலையில் நின்றார்கள் காவல்துறையினர்.

இரண்டாவது சந்தேகநபரை ஏற்கனவே கைது செய்ய முடியாத நிலையில் முதலாவது சந்தேக நபரையும் கோட்டைவிட்ட கோபத்தில் காவலர்கள் நின்ற போது அந்த இடத்திற்கு இரு பெண்கள் துவிச்சக்கர வண்டியில் அலைபேசியில் பேசிக் கொண்டே வந்தனர். அவர்களின் நடத்தை மீது சந்தேகம் கொண்ட காவல்துறையினர் சந்தேக நபரால் தகவலறிய அனுப்பப்பட்டவர்களே அவர்கள் என அனுமானித்தனர். எனவே அவர்கள் பார்க்கும் வகையில் அந்தப் பகுதியில் இருந்து புறப்பட்டுச் செல்வதாகப் பாவனை செய்து அங்கிருந்து புறப்பட்டனர். தாம் அங்கிருந்து அகன்றுவிட்டனர் என்கிற தகவல் சந்தேகநபருக்கு எட்டியதும் அவர் மீண்டும் வீட்டுக்கு வருவதற்கு முயற்சிப்பார் என்பதே அவர்களின் அனுமானமாக இருந்தது. அந்த நேரத்தில் அவரைக் கைது செய்துவிடலாம் என்று கணக்குப் போட்டனர். அதன்படி முதன்மை வீதிக்கு தமது வாகனத்தில் திரும்பிய காவல்துறையினர் அங்கு இறங்கிக்கொண்டு வாகனங்களை அனுப்பிவிட்டனர். பின்னர் அந்தப் பகுதியில் இருந்த பற்றைகளுக்குள் பதுங்கிக்கொண்டனர்.

இதற்கிடையில் 2ஆவது சந்தேகநபர் பற்றியும் அவர்கள் விசாரித்தனர். அப்போது அவர்களுக்கு ஒரு தகவல் கிடைத்தது. 2ஆம் சந்தேகநபர் அன்றிரவே தொடரி (ரயில்) மூலம் கொழும்புக்குத் தப்பிச் செல்கிறார் என்பதே அந்தத் தகவல். உடனடியாக சந்தேகநபரின் நண்பர் ஒருவரது உதவியை நாடிய காவல்துறையினர் எப்படியாவது 2ஆவது சந்தேகநபரைக் கொடிகாமம் தொடரி நிலையத்தில் இறங்க வைக்கும்படி அறிவுறுத்தினர். அந்தச் சந்தேகநபரைக் கைது செய்வதற்காக இரு காவலர்கள் கொடிகாமம் தொடரி நிலையத்திற்குச் சென்றனர். திட்டமிட்டபடி எந்தச் சிக்கலும் இல்லாமல் 2ஆவது சந்தேகநபரை கொடிகாமம் தொடரி நிலையத்தில் கைது செய்து அவரைக் கொடிகாமம் காவல் நிலையத்திற்குக் கொண்டு சென்றனர்.

இதற்கிடையில் மற்றொரு அணியாக இரு காவலர்கள் தொடர்ந்தும் முதலாவது சந்தேகநபரின் வருகையை எதிர்பார்த்து பற்றைக்குள் பதுங்கியிருந்தனர். அதிகாலை 3 மணியளவில் சந்தேகநபர் கையில் ஒரு டோர்ச்சுடன் முதன்மை வீதியிலிருந்து வீட்டுக்கு நடந்து வந்துகொண்டிருந்தார். வருபவர் சந்தேகநபர்தான் என்பதை அந்த இருட்டிலும் நன்கு உறுதிப்படுத்திக் கொண்ட காவலர்கள் அவரைக் கோழி அமுக்குவது போன்று பாய்ந்து அமுக்கி "நன்கு கவனித்து" கொண்டனர்.

கைது செய்யப்பட்ட இரு சந்தேகநபர்களையும் உடனடியாக கோப்பாய் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து வந்து 25ஆம் திகதி யாழ். நீதவான் நீதிமன்றில் முற்படுத்தினர். குற்றத்திற்குப் பயன்படுத்தப்பட்ட உந்துருளி, சிறுமியை நிர்வாணமாக ஒளிப்படம் எடுத்த கைபேசி என்பன கைப்பற்றப்பட்டு நீதிமன்றில் மன்றில் பாரப்படுத்தப்பட்டன. முறைப்பாடு பதிவுசெய்து 24 மணித்தியாலத்தில் இரு சந்தேகநபர்களையும் 4 பொலிஸ் உத்தியோகத்தர்கள் மாத்திரம் கைது செய்தனர்.

# காலாவதியான பொருள்களின் விற்பனை...!

● கமலநாதன்

உலகக் கோடீஸ்வரர்களில் ஒருவரை ஊடகவியலாளர் ஒருவர் செவ்வி கண்டபோது, "நீங்கள் எவ்வாறு இவ்வளவு பெரிய பணக்காரராக உருவாகினீர்கள்?" என்று கேட்டார். அதற்கு அந்தக் கோடீஸ்வரர், "நான் தரம் குறைந்த பொருள்களை ஒருபோதும் வாங்குவதில்லை" என்று பதில் அளித்தார்.

கேள்விக்கும் பதிலுக்கும் தொடர்பில்லாததுபோல வெளிப்படையாகத் தெரிந்தாலும் அவரது பதிலில் அதிகம் உண்மையிருந்தது. அதாவது தரமான பொருள்களைக் கொள்வனவு செய்தால் அடிக்கடி பிழைகள் ஏற்படாது, திருத்த வேலை வராது, நேரத்தை வீணே செலவிட வேண்டி ஏற்படாது, பாவனைக்கு இலகு, சௌகரியம் இருக்கும், மன உழைச்சல், பதற்றம் போன்ற தேவையற்ற விடயங்கள் தவிர்க்கப்படும்.

யாழ்ப்பாணத்திலும் ஏனைய தமிழ்ப் பகுதிகளிலும் "பேமன்ற்" என்ற வீதியோரங்களில் வியாபரிகளால் வைத்துக் குவித்து விற்கப்படுகின்ற உடுப்புகள், கைப்பைகள், பிளாஸ்ரிக் பொருள்கள், பழங்கள், மின்குமிழ்கள், உணவுப்பொருள்கள், குளிர்பானங்கள் என பலபொருள்கள் ஏனைய கடைகளைவிடக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளன. அந்த ஒரே காரணத்துக்காக மக்களும் இவ்வாறானவற்றை முண்டியடித்து வாங்குகின்றனர்.

சென்ற வாரம் யாழ். நகரில் காலாவதியாகச் சில நாள்களே இருக்கும் குளிர்பான வகையொன்றை அதன் முகவர்கள் தள்ளுபடி விலையில் மலிவாக விற்றனர். வருடப் பிறப்பு நாள்களில் அல்லது முக்கிய தினங்களில் இவ்வாறான ஏமாற்று வியாபாரம் சூடுபிடிக்கிறது. மக்களைப் பொறுத்தளவில் ஒரு பொருளின் தரம் என்பதற்கு அப்பால் எது மலிவு விலையில் கிடைக்கிறது என்ற திருப்தியே முன்னிலையில் இருக்கிறது.

"பேமன்றில்" ஷேர்ட் வாங்கிய ஒருவரிடம் "ஷேர்ட் மலிவோ?" என்று கேட்டால், "ஓம் நல்ல மலிவு...! ஆயிரம் ரூபாவுக்கு 3 ஷேர்ட்டுகள் வாங்கினான்...! ஆறு மாதம் பாவிச்சாலும்போதும்" என்றார். கொழும்பிலும் வேறு பகுதிகளிலும் களஞ்சியங்களில் விற்கப்படாது தேங்கியுள்ள உடுப்புகளை மிக மலிவு விலையில் கொள்வனவு செய்து சீரமைத்து விற்கின்ற ஆடைகளே அவை. இரண்டு மாதங்கள்கூட அவை பாவிப்பதில்லை.


**மேலும் பல பொருள்கள்**

மின் குமிழ்கள், விளையாட்டுப் பொருள்களை வீதியோரங்களில் குவித்து மலிவு விலையில் விற்பதைப் பார்த்து நிரந்தரக் கடைகளில் கூறப்படும் விலையுடன் ஒப்பிடும்போது குறைந்த விலையில் விற்கிறார்கள் என்று நம்பி வாங்குகின்றனர். நிரந்தரக் கடை ஒன்றில் "வரண்டி" எனப்படுகின்ற உத்தரவாதக் காலம் இருப்பதால் குறிப்பிட்ட பொருள் பழுதாகி விட்டால் அதை மாற்றிப் பெறவோ, திருத்தி வாங்கவோ முடிகிறது. வீதியோர வியாபாரிகளில் பலரும், பருவ கால வியாபாரிகளாக இருப்பதால் உத்தரவாதத்துடன் பொருளை வாங்கினாலும் அவர்களை மீண்டும் கண்டுபிடிக்க முடியாது.

நிரந்தரக் கடை ஒன்றில் வாடகை, ஊழியர் சம்பளம், மின்சாரம், நீர் என்று பல்வேறு செலவுகள் இருப்பதால் ஒரு நிர்ணயிக்கப்பட்ட விலையிலேயே பொருள்களை விற்கின்றனர். ஆனால் அவர்களிடம் பொறுப்புக்கூறல் என்ற விடயம் உண்டு. இதனால் மலிவு பார்த்து வீதியோர வியாபாரிகளை நாடிச் செல்லும் மக்கள் பாதிக்கப்படுகின்றனர்.

**காலாவாதித் திகதியில் சுத்துமாத்து**

பொதுவாக ஐரோப்பா, அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் பொதுமக்களின் பாதுகாப்பு விடயத்தில் அதிக கவனம் செலுத்தப்படுகிறது. ஆனால் இந்தியா, இலங்கை



போன்ற நாடுகளில் அவை கண்டுகொள்ளப்படுவதில்லை.

2010ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இந்தியாவிலிருந்து பிரிட்டனுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட ஒரு தொகை திராட்சைப் பழங்களை பிரிட்டன் அரசு பரிசோதித்துப் பார்த்தபோது அந்தப் பழங்கள் பழுதுபடாமதல் இருப்பதற்காக வேதிப் பொருள் ஒன்று பயன்படுத்தப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் அத்தனை திராட்சைக் கொள்கலன்களும் இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பப்பட்டன. ஆனால் அந்தப் பழங்கள் அழிக்கப்பட்டதாக எந்தச் செய்திகளும் வெளிவரவில்லை.

அவை உள்நாட்டிலோ அல்லது இலங்கை போன்ற நாடுகளிலோ விற்கப்பட்டிருக்கலாம். காரணம், இங்கெல்லாம் பெரிது மக்கள் பாதுகாப்புச் சட்டங்கள் இறுக்கமாக இல்லாமையே.

காலாவதியாகும் திகதிக்கு முன்னர் விற்பனை செய்யாது தேங்கிக் கிடக்கும் தமது பொருள்களைக் கழிவு விலையில் விற்கின்றன பல நிறுவனங்கள். இலாபம் இல்லாவிட்டாலும் நட்ட மடையாது இதன் மூலம் பார்த்துக்கொள்கின்றனர். இது ஒரு வகையில் நியாயமானது. ஆனால் கலாவதியாகிய பின்னர் கழிவு விலையில் வாடிக்கையாளர்களுக்கு விற்பது படுமோசமானது.

உணவுப் பொருள்களின் தரம் பற்றிப் பரிசோதிப்பவர்கள் காலாவதியான பொருள்களைப் பரிசோதித்துப் பல வியாபாரிகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. தவிர ஏதாவது பொருளை விற்பனை செய்த நிறுவனம் தனது அந்தப் பொருள் காலாவதியாகிவிட்டது என்று அழிப்பது நடந்ததாக இல்லை. மாறாகப் பல வகைக் குளிர்பானங்கள் மிக்சர் போன்ற பொருள்கள் மீளவும் புதி தாக்கப்பட்டு அல்லது கலப்படம் செய்து சந்தைக்கு வருவதைக் காணமுடிகிறது.

குளிர்சாதனப் பெட்டிக்குள் வைத்துப் பாதுகாத்து அல்லது பராமரித்து விற்பனை செய்யவேண்டிய பல பொருள்களில் கலாவதிக்கான திகதி இருந்தபோதிலும் பல வர்த்தகர்கள் அவற்றைக் குளிர்சாதனப் பெட்டிகளுக்குள் தொடர்ந்து வைத்திருப்பதில்லை. (இரவில் கடை பூட்டப்பட்டதும் குளிர்சாதனப் பெட்டிகள் நிறுத்தப்பட்டு மறுநாள் காலையிலேயே மீண்டும் இயக்கப்படுகின்றன) அதேவேளை குளிர்பானங்கள், குடிதண்ணீர், ஐஸ்கிறீம் போன்ற பல பொருள்கள் வெயில் படும் இடங்களில் வைக்கப்பட்டிருப்பதைக் காணமுடியும். அவ்வாறு வைக்கப்படும் பொருள்கள் கலவாதித் திகதிக்கு முன்னரே பழுதுபட அல்லது அவற்றின் தரம் கெட்டுப்போக வாய்ப்புண்டு. அவற்றைக் காலாவதித் திகதி இன்னும் உள்ளது என்று திகதியைப் பார்த்து மக்கள் வாங்குவது பயனற்றது.

தென்னையில் இருந்து செவ்விளநீர்க் குலைகள் வெட்டப்பட்டபின் அவை மீது வெயில் பட்டாலோ, அல்லது மழையில் நனைந்தாலோ அவற்றை அருந்தினால் வாதம் போன்ற நோய்கள் ஏற்படும் என்கிறார்கள் சாதாரண நாட்டு வைத்தியர்கள். அதனால்தான் சில வியாபாரிகள் புதிய ஓலைக் கொட்டில்களுக்குள் வைத்து அவற்றை விற்கின்றனர். தற்போதுள்ள கொரோனாப் பெருந்தொற்று வேளையில் சாதாரண நாள்களைவிட அதிக அவதானத்துடன் அனைவரும் செயற்படவேண்டியிருக்கிறது. அது குறித்துப் பொதுச் சுகாதார அதிகாரிகள், மருத்துவர்கள், காவல்துறையினர் என்று பல்வேறு தரப்பினரும் அறிவுறுத்தல்களை வழங்கிவரும் நிலையில் தரம்குறைந்த பொருள்களை விற்பதும், வாங்குவதும் மக்களின் விழிப்புணர்வற்ற தன்மையையே காட்டுகிறது.

# மனிதனுக்கு "கொரோனா" மாடுகளுக்கு "லம்பி"

● என்.குமரன்

2020 மனித குலத்தை கொரோனா கொலைவெறியோடு தாக்கியதென்றால், ஆண்டின் இறுதிப் பகுதியில் மாடுகளில் தொற்றிய ஒருவகை அம்மை நோய் பீதியைக் கிளப்பியுள்ளது. கால்நடை வளர்ப்பாளர்கள் இதனைப் பெரியம்மை நோய் எனச் சொன்னாலும் மிருக வைத்தியர்கள் அதற்குக் குறிப்பிடும் பெயர் "லம்பி".

மழைக்கு மத்தியில் திடீரென வடக்கில் இந்த நோய் பரவத் தொடங்கிய போது கால்நடை வளர்ப்பாளர்கள் பதறிப்போனார்கள். இது என்ன நோய், எப்படி வந்தது, எங்கிருந்து வருகிறது, என்ன மருந்து என்று தெரியாது பரிதவித்துப்போன அவர்களுக்கு கால்நடை மருத்துவத் துறையினர் உடனடி உதவிகளையும் தகுந்த விளக்கங்களையும் வழங்கி வருகின்றனர்.

மாடு வளர்ப்பாளர்கள் பலரையும் பயப்பீதிக்குள்ளாக்கியுள்ள இந்த நோய் பற்றி அறிந்துகொள்வதற்காக தெல்லிப்பளை கால்நடை மருத்துவ அதிகாரி மருத்துவர் இ.மீனயோகினியைச் சந்தித்துப் பேசினோம். பணிச் சுமைக்கு மத்தியிலும் நோய் பற்றிய தெளிவான விளக்கங்களை வழங்கினார் அவர்.

**கே:** திடீரென வந்திருக்கும் இது என்ன நோய்?

**ப:** தென்னாபிரிக்காவிலுள்ள ஒரு பிரதேசத்திலேதான் இந்த நோய் பல வருடங்களுக்கு முன்னர் இனங்காணப்பட்டது. ஒருவகை அம்மை நோய். இதனை லம்பி என்று மருத்துவப் பெயரால் குறிப்பிடுகிறோம். மாடுகளின் உடலில் கொப்புளங்கள் தோன்றும். அதற்குப் பின்னர் பல்வேறு உலக நாடுகளிலும் பரவியிருந்தது. எனினும் சில வருடங்களுக்கு முன்னரே எமது அயல் நாடுகளில் பரவியது. கடந்த வருடம் (2020) ஆவணி மாதமளவில் எமது நாட்டினுள்ளும் இந்த நோய் பரவத் தொடங்கியிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. வடக்கிற்கு கார்த்திகை மாதமளவில் வந்து சேர்ந்தது. இங்கு அதன் தாக்கம் மிகப் பரவலாக இனங்காணப்பட்டிருக்கிறது.

**கே:** எமது நாட்டுக்குள் எவ்வாறு நோய் பரவியிருக்கக்கூடும் என நினைக்கின்றீர்கள்?

**ப:** வெளிநாடுகளில் இருந்து கொண்டுவரப்பட்ட விலங்குகள் மூலம்தான் இங்கு பரவியிருக்கக் கூடும். இறக்குமதி செய்யப்பட்ட அல்லது களவாகக் கொண்டுவரப்பட்ட விலங்குகளில் இருந்து நுளம்புகள், தெள்ளு, உண்ணி, பூச்சிகள் என்பவற்றின் மூலம் இங்கிருக்கும் விலங்குகளுக்குத் தொற்று ஏற்பட்டிருக்கலாம். தற்போதைய குளிர் கால நிலைமை நோய் வேகமாகப் பரவுவதற்குச் சாதகமாக இருக்கின்றது.

**கே:** இந்த நோயின் அறிகுறிகள் என்ன?

**ப:** மாட்டுக்கு பரவலாக உடல் முழுவதும் கொப்புளங்கள் ஏற்படும்.



வைத்தியர் - இ.மீனயோகினி
*(கால்நடை வைத்திய அதிகாரி பணிமனை, தெல்லிப்பளை)*

சில மாடுகளில் ஒன்று இரண்டு தென்படும், சில மாடுகளில் உடல் முழுவதும் அள்ளிப் போட்டிருக்கும். அதேநேரம் 104-105 பாகை செல்சியஸ் அளவில் கடுமையான காய்ச்சலும் ஏற்படும். மேலும் கால் மற்றும் மூட்டுப் போன்ற பகுதிகளில் வீக்கங்கள் (நெறி போடுவது) தென்படும். அதேநேரம் மாடும் இரையை பெற்றுக்கொள்ள விரும்பாது. அதாவது பசியின்மை ஏற்படும்.

**கே:** இந்த நோயால் மாடுகள் இறக்க வாய்ப்புண்டா?

**ப:** பெரிதளவில் இறப்பதற்கான சூழ்நிலை இல்லை. 5-10 வீதமான மாடுகளே இறக்கும். நோய்த் தாக்கத்தால் மாடுகளின் வெளிப்புறத் தோலில் ஏற்படுகின்ற அறிகுறிகளைக் கண்டதும் உரிய நேரத்தில் சிகிச்சையை வழங்கினால் குணப்படுத்தலாம். மாறாக சுவாசக்குழாய், சலக் குழாய், இரைப்பைக் குழாய் போன்ற உள்உறுப்புகளில் பொக்களங்கள் உருவாகினால் அவற்றை இனங்காண்பது கடினம், அத்தகைய நேரங்களில் இதன் தாக்கம் கடுமையானதாக இருக்கும். அதேநேரம் நோய் ஏற்பட்டால் மாடுகள் உணவு எடுக்காது. அதேபோன்று இந்த நோயுடன் சேர்ந்து சளி, காய்ச்சல் என்பனவும் உருவாகுகின்றன. இவை தீவிர மடையும்போது மாடுகள் இறக்கக் கூடும்.

**கே:** மாடுகளுக்கு மட்டும்தான் இந்த நோய் ஏற்படுகின்றதா?

**ப:** இந்த வகையான வைரஸ்களை பொக்ஸ் வைரஸ் என்று அழைப்பார்கள். விலங்குகள் ஒவ்வொன்றிலும் இவ்வாறான வைரஸ் கூட்டங்கள் காணப்படும். எனினும் அவை பெரியளவில் வெளிப்படாது. அதேநேரம் மாடுகளில் உருவாகியுள்ள இந்த வகையான வைரஸ் தொற்று ஆடுகளுக்கோ, மனிதருக்கோ பரவாது. மாடுகளுக்குள் மட்டுமே பரம்பலடையும்.

**கே:** நோயைக் கட்டுப்படுத்துவதற்கு அல்லது வராமல் தடுக்க வழிகள் உண்டா?

**ப:** இதுவரை எமது நாட்டில் நோய்க்கான மருந்துகள் கண்டுபிடிக்கப்படவில்லை. ஏற்கனவே மாடுகளுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டிருப்பின் நோய் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் குறைவு. அத்துடன் ஒருதடவை இந்த நோய் ஒரு மாட்டுக்கு வந்துவிட்டால் மீண்டும் அந்த நோய் ஏற்படாது. அந்தளவிற்கு வாழ்நாள் நோய் எதிர்ப்பு சக்தி உருவாகிவிடும். எதிர்காலத்தில் மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டால் சிறப்பு.

மேலும் நோய் தொடர்பில் ஆராய்ச்சி செய்கின்ற கண்டி பெரதெனியாவிலுள்ள விலங்கு நோய் ஆராய்ச்சி நிலையம் (வீ.ஆர்.ஐ) மற்றும் யாழ்ப்பாணம் உள்ளிட்ட அனைத்து மாவட்டங்களிலும் குறித்த நிறுவனத்தின் கிளை நிறுவனம் போன்று செயற்படுகின்ற விலங்கு நோய் ஆய்வு நிலையம் (வீ.ஐ.சி) என்பவற்றின் ஊடாகக் கால்நடை வளர்ப்பாளர்களுக்கு இந்த நோய் தொடர்பான தெளிவூட்டல்கள் வழங்கப்படும்.

> "மாடுகளில் உருவாகியுள்ள இந்த வகையான வைரஸ் தொற்று ஆடுகளுக்கோ, மனிதருக்கோ பரவாது."

**கே:** நோய் ஏற்பட்ட மாடுகளின் பால் மற்றும் இறைச்சி போன்றவற்றை நுகர்வதால் ஏதேனும் பாதிப்புகள் ஏற்படுமா?

**ப:** நோய் தாக்கிய மாட்டின் பாலைக் குடிப்பதால் எதுவித பாதிப்புகளும் ஏற்படாது. காரணம் இந்த வைரஸ் மனிதனுக்கு தொற்றாது. அத்துடன் பாலைக் கொதிக்கவைக்கும் வெப்ப நிலையில் வைரஸ் கிருமிகள் இறந்துவிடும். அதனால் பால் நுகர்வதிலோ பாலை எடுப்பதிலோ எந்தவித பிரச்சினைகளும் இல்லை.

நோய் தாக்கிய மாட்டை இறைச்சியாக்கும்போது அவை நோய்த் தாக்கம் காரணமாகப் புண், சிதைவுகளால் பாதிக்கப்பட்டாமல் இருப்பதை உறுதிப்படுத்தவேண்டும். அத்தகைய மாடுகளின் இறைச்சியை விற்பனைக்கு அனுமதிப்பதில்லை. ஒழுங்கான முறையில் பெறப்பட்ட இறைச்சியை நாங்கள் சமைத்து உண்ணும்போது கிருமிகள் இறந்துவிடும். அதனால் பாதிப்புகள் இல்லை.

**கே:** இந்த நோய் தாக்கிய மாடுகள் எந்த வகையில் பாதிப்படைகின்றன?

**ப:** மாடுகள் சினைப்பட்டிருப்பின் அவற்றிற்குக் கருச்சிதைவு ஏற்படலாம். சிலநேரங்களில் இறப்பதற்கான சாத்தியங்கள் உண்டு. உணவு உட்கொள்வதை நிறுத்துவதால் பாலுற்பத்தி குறையும், சில மாடுகளுக்கு நிரந்தரமான மலட்டுத்தன்மை ஏற்படும்.இனப் பெருக்கக் கால்வாய் சிதைவு ஏற்பட வாய்ப்புகள் அதிகம்.

**கே:** மாடுகளை நம்பியிருக்கின்ற பண்ணையாளர்களுக்கான தீர்வு என்ன?

**ப:** உடனடித் தீர்வுகள் எதுவும் இதுவரையில் கண்டறியப்படவில்லை. எமது திணைக்களத்தில் இலவச மருந்துகள் என்று இல்லை. ஏதேனும் திட்டங்கள் ஊடாக வரும்போது மருந்துக் கொள்வனவு மேற்கொள்ளப்படும். எங்களால் முடிந்தளவு அதனைச் செய்கிறோம். களவேலைகளில் ஈடுபடுவதுடன் தேவையானவர்களுக்கு உரியமுறையில் ஆலோசனைகளையும் வழங்கிவருகின்றோம்.


**கே:** கால்நடை வைத்தியர் என்ற வகையில் பண்ணையாளர்களுக்கு சொல்லக்கூடிய தகவல் என்ன?

**ப:** இது ஒரு வைரஸ் நோய். எமது பிரதேசத்தினுள் இந்த நோய் வந்துள்ளதால் நிச்சயம் நுளம்பு, பூச்சி போன்றவற்றால் மாட்டுக்கு மாடு பரவுவதற்கான சாத்தியம் அதிகம். இதைத் தடுக்க மாடுகளை ஆரோக்கியமாக வைத்திருப்பது முக்கியம். மாடுகளுக்கு உரிய உணவுகள் சரியான முறையில் வழங்கப்பட வேண்டும். வழங்கும்போது எதிர்ப்பு சக்தி அதிகமாகி நோய் விரைவில் குணமடையும். மேலும் இந்த நோயிலிருந்து மாடுகள் மீள்வதற்கு 10 நாள்கள் முதல் 2 வாரங்கள் வரை ஆகும். இந்த நாள்களில் ஆரோக்கியமான உணவு களை வழங்க வேண்டும். இயலுமான அளவு நுளம்புகள் பூச்சிகள் நெருங்காதவாறு தொழுவங்களை துப்புரவாக வைத்திருந்து, புகை போடுதல் போன்றவற்றை மேற்கொள்வதன் மூலம் கட்டுப்படுத்தலாம் - என்றார்.





## கார்ட்டூன்



## ஆட்டம் 4

| | | | |
|---|---|---|---|
| மி | தி | கு | நா |
| ர் | கு | க் | கே |
| தி | து | த் | பு |
| பெ | கெ | தி | ம |

மேலே பெட்டிகளில் தரப்பட்டுள்ள எழுத்துக்களைப் பயன்படுத்தி 2 முதல் 7 எழுத்துக்களில் உள்ள சொற்களைக் கண்டு பிடிக்க வேண்டும். குறைந்தது 10 சொற்களைக் கண்டு பிடிப்பவர்கள் வெற்றியாளர்கள். அதற்கு மேலும் கண்டுபிடிப்பவர்கள் சாதனையாளர்கள். முக்கியமான நிபந்தனை, உருவாக்கப்படும் சொற்கள் அனைத்தும் தூய தமிழ்ச் சொற்களாக இருந்தல் வேண்டும். பிற மொழிச் சொற்களைத் தமிழில் எழுதுவதாக இருத்தல் கூடாது. சொற்கள் அனைத்தும் 2 நிமிட நேரத்திற்குள் கண்டு பிடிக்கப்படுதல் வேண்டும். சரியான விடையை எழுதியனுப்புவர்களில் வெற்றியாளர்கள் ஐவரின் பெயர்கள் பத்திரிகையில் வெளியிடப்படும்.






### செம்மண் வாரமலருக்கு...

- கவிதை
- கட்டுரை
- சிறுகதை
- நெடுங்கதை
- குறுங்கதை
- நிமிடக்கதை
- நாவல்(தொடர்)
- சிரிப்புத் துணுக்குகள்

ஆகியவற்றை எழுத விரும்புபவர்கள் அவற்றைப் பின்வரும் முகவரிகளுக்கு அனுப்பி வைக்கலாம்!


அஞ்சல் /தபால்
செம்மண் வாரமலர்
551A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

மின்னஞ்சல்
shemman.redsoil@gmail.com
தொடர்புக்கு: 021 492 7781


எந்தவொரு ஆக்கத்துக்கும் தெளிவான முழுப் பெயர், முகவரி புனைபெயர் (இருந்தால்), தொடர்பு எண் என்பன குறிப்பிடப்பட வேண்டும். இந்த விவரங்கள் இல்லாத ஆக்கங்கள் எவ்வளவு தரமானவையாக இருந்தாலும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

## இந்த வார சுடோக்கு - 23

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 4 | | | 1 | | | 6 | |
| 9 | | 6 | 5 | | 2 | | | 4 |
| | | | | | | 9 | 5 | |
| 3 | 2 | | | | | | 8 | |
| 1 | | | 7 | 5 | 9 | | | 2 |
| | 9 | | | | | | 1 | 5 |
| | 7 | 4 | | | | | | |
| 6 | | | 4 | | 8 | 5 | | 1 |
| | 5 | | | 2 | | | 9 | |

இந்த சுடோக்கு விளையாட்டு தர்க்க ரீதியாக எண்களை ஒரொழுங்கில் அடுக்குவதற்கானது. நேராகவும் கிடையாகவும் 9 பெட்டிகளைக் கொண்டுள்ள இந்தச் சதுரத்தினுள் ஒவ்வொரு சிறிய பெட்டியினுள்ளும் 1 முதல் 9 வரையான ஒரு எண் இடப்பட வேண்டும். பெரிய பெட்டியின் கிடை மற்றும் நேர் வகிடுகளிலும் இரண்டாவது மற்றும் மூன்றாவது நிலைப் பெட்டிகளின் நேர் மற்றும் கிடை வகிடுகளிலும்கூட ஒரு எண் இரட்டிப்பாகக்கூடாது என்பதே விதி. முயற்சி செய்து பாருங்கள். சரியாக நிரப்பி விட்டீர்களானால் அதனை அப்படியே வெட்டி

**செம்மண்**
சுடோக்கு,
551 A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

என்னும் முகவரிக்கு, உங்கள் முழுப் பெயர், வயது, தபால் முகவரி, தொடர்பு எண் என்பவற்றுடன் அனுப்பி வையுங்கள். சரியாக எழுதி வெற்றிபெறும் ஒரு அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250 பரிசாக வழங்கப்படும். விடையும் வெற்றிபெற்றவரின் விவரங்களும் அடுத்தவார பத்திரிகையில் வெளியாகும். வெற்றிபெற்றவர் பரிசுத் தொகையை செம்மண் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கடந்த வாரம் வெளியாகிய சுடோக்கிற்கான விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 5 | 4 | 8 | 9 | 7 | 6 | 3 | 1 |
| 3 | 6 | 7 | 2 | 4 | 1 | 9 | 8 | 5 |
| 8 | 1 | 9 | 3 | 6 | 5 | 7 | 4 | 2 |
| 7 | 4 | 8 | 1 | 3 | 6 | 2 | 5 | 9 |
| 6 | 2 | 1 | 5 | 8 | 9 | 4 | 7 | 3 |
| 5 | 9 | 3 | 7 | 2 | 4 | 1 | 6 | 8 |
| 4 | 8 | 2 | 6 | 1 | 3 | 5 | 9 | 7 |
| 9 | 3 | 5 | 4 | 7 | 2 | 8 | 1 | 6 |
| 1 | 7 | 6 | 9 | 5 | 8 | 3 | 2 | 4 |

**குறிப்பு:**
**கிறீன் மீடியா கவுஸ் நிறுவனத்தின் ஊழியர்கள் மற்றும் சக நிறுவன ஊழியர்கள் இப் போட்டியில் கலந்துகொள்ள முடியாது.**



# பாலைவனத்து ஊற்றடி நீ எனக்கு!

1

● கலியுக பித்தன்

"டேய் வருண் இங்க பாருடா... ரித்து உன்னட்ட என்னவோ சொல்லோனுமாம் டா..." கம்பஸூக்கு வந்த உடனேயே பெரிய குண்டா தூக்கி போட்டான் கார்த்திக்.

"என்ன ரித்து... சொல்லுடி... எனி ஸ்பெசல்?" சாதாரணமாக கேட்டான் வருண்.

"கார்த்திக் சும்மா அடிச்சு விடுறான் டா.. நீ நம்பாத.." கார்த்திக்கை முறைச்சு கொண்டே பதில் சொன்னாள்.

"ஏய்... ஏய்.... ரித்து.... நானும் கேள்விப்பட்டன்... சமாளிக்காத சொல்லு" இந்த தடவை ஜெய்.

"போடா.." சொல்லி கொண்டே அவனின் முதுகில் கிள்ளினாள்.

"சரி சொல்ல விருப்பம் இல்லாதவையள எதுக்கு வற்புறுத்திகொண்டு.." முகத்தை மறுபக்கம் திருப்பி கொண்டான்.

"டேய் அப்டி ஒன்டும் இல்லடா. அவங்கள் ஏதோ சும்மா......." வருணின் நாடியை பிடித்து தன்பக்கம் திருப்பியபடி சொன்னாள் ரித்து. அவள் குரலில் இனம்தெரியாத சோகம் ஒட்டிக் கொண்டது.

"ஓகே, நேரமாயிட்டுது நான் வீட்டை போகோனும்..."

"டேய் வருண் அவங்கள்தான் விளையாடுறாங்க என்டா, அத கேட்டு நீ எதுக்கு ரித்து ஓட கோவிக்கிறா?" அங்கிருந்து விலக முற்பட்ட வருணை இடைமறித்து கேட்டாள் ஜெனி.

"ஏய், நான் எதுக்கு கோவிக்கோனும்" செயற்கை புன்சிரிப்போடு கேட்டான்.

"வருண் ஏன்டா இப்டி பேசுறா..." கெஞ்சலோடு கேட்டாள்.

"சரி சரி! நான் போறன். நீங்களும் போயிட்டு நாளைக்கு க்ளாஸ் க்கு ஒழுங்கா வந்து சேருங்க..." யாருடைய பதிலுக்கும் காத்திராமல் தன்பாட்டிற்கு அங்கிருந்து விலகி கொண்டான்.

கார்த்திக்கும், ஜெய்யும் முகத்தை தொங்க போட்டு கொண்டு நிற்க, ரித்து அவர்களை எரிப்பது போல் பார்த்துவிட்டு வேகமாக அங்கிருந்து புறப்பட்டாள்...

"ஏய் ரித்து நில்லுடி... ரித்து..." வேகமாக அழைத்து கொண்டே அவள் பின்னாள் ஓடினாள் ஜெனி...

◆ ◆ ◆

வீட்டுக்கு போன ரித்துவுக்கு இன்று நடந்த சம்பவங்கள் பெரிய சங்கடத்தை கொடுத்து கொண்டிருந்தன. ஏதோ பெரிய குற்றத்தை செய்து கொண்டவள் போல் தன்னை தானே உருவகித்து கொண்டாள். அவளது மனம் எங்கெங்கோ எல்லாம் அலை பாய்ந்து கொண்டிருந்தது. இதை கட்டுப்படுத்த வேண்டுமானால் வருணோடு பேசவேண்டும் என்று அவள் ஆழ்மனம் சொல்லி கொண்டேயிருந்தது.

என்ன ஆனாலும் பரவாயில்லை என்ற மனநிலையோடு வருணின் தொலைபேசி இலக்கங்களை வலு ஈடுபாட்டோடு அழுத்தி அழைப்பை ஏற்படுத்தினாள். ஒவ்வொரு ரிங்கும் கடக்க கடக்க அவள் மனதில் சுமைகள் ஏற்றப்பட்டு கொண்டிருப்பதை உணர்ந்தாள். ஆனால் அது நீண்ட நேரம் நீடிக்கவில்லை. பத்து பன்னிரண்டாவது ரிங்கில் அவளது அழைப்பு அவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தயக்கத்தோடு "ஹலோ வருண்..." என்றாள்.

**இளசுகளைக் கிறங்க வைக்கும் புதிய காதல் தொடர்**



"ஓம் சொல்லுங்கோ மேடம்"
"என்னடா மரியாதை பலமா கிடக்குது"
"நீங்க பெரிய ஆக்களெல்லோ அதான் "

"ஏன்டா இப்டி பேசுறா?"
"சரி! சொல்லுடி லூசு!"
"என்ன மரியாதை நல்லா குறையுது? லூசு என்டுறா?"
"அம்மா தாயே! உன்னை எப்டி கூப்பிடோனும்? அதையாவது சொல்லுங்கோ.."
"ஹ.. ஹா.. போடா"
"என்ன சிரிப்பு? சரி என்ன திடீரென்டு போன் பண்றீங்கள்?
"ஏதோ தோணிச்சுடா"
"ஆ ஹா..... இதுல்லாம் உங்களுக்கு தோணும்... ஆனா சிலதுகள சொல்ல மாட்டீங்கள் "பொய் கோபத்தோட சொன்னான்.

ரித்து எதுவும் பேசாமல் மௌனமானாள்.
"ஹலோ... உங்களை தான்"
"ஹ்ம்..."
"என்ன ஹ்ம்... ஹ்ம்..."
"ஒன்னுமில்லை"
"சரி சரி அதை விடு! எதுக்கு போன் பண்ணினா?"
"நீ பின்னேரம் கோவிச்சுக்கொண்டு போன மாதிரி இருந்திச்சு. அதான் எடுத்து சேரை சமாதான படுத்துவமென்டு எடுத்தன்."
"நான் ஒன்டும் கோவிச்கொண்டு வரலையே.." கோவிச்சதை, கோவிக்காத மாதிரி குழைஞ்சு கொண்டு சொன்னான் வருண்.
"அப்டி என்டா சரி..."
"ஆமா ஆமா சரிதான்.."
"சரி டா நான் தூங்கிறன். குட் நைட். மார்னிங் க்ளாஸ் ல மீட் பண்ணுவம்."
"குட் நைட்"

பதினைந்து நிமிட உரையாடலுக்கு பிறகு ரித்து, மனதில் கொட்டி கிடந்த சுமைகள் தூக்கி வெளியே வீசப்பட்டதைப் போல் உணர்ந்தாள். சோகங்கள் காற்றிலே போக, இனிமையான உணர்வு தென்றலோடு வந்து அவளோடு இணைந்து கொண்டது. அந்த உணர்வோடு அவள் உறக்கத்திற்கு சென்றாள்.

வருணின் மனதிற்குள் ஏதோ இனம்புரியாத ஒன்று முளைவிட தொடங்கியது. புதுவித உணர்வொன்று அன்றைய இரவில் அவனுக்கு அறிமுகமாகியிருந்தது. அவனால் சரியாக அதனை அடையாளப்படுத்த முடியாமல் இருந்தது. அன்றைய இரவை அந்த அடையாளப்படுத்தும் பணியோடு கழிக்க அவன் நினைத்தாலும் நித்ரா தேவி சில கணங்களிலேயே அவனை ஆக்கிரமித்து கொண்டாள்...

(காதல் தொடரும்)


---

## மிதக்கும் திரையரங்கு!

கொரோனா பெருந்தொற்று முடக்கத்தால் அதிகம் பாதிக்கப்பட்டது திரையரங்குகள்தான். கிட்டத்தட்ட ஒரு வருடகாலமாக அவை மூடப்பட்டே கிடக்கின்றன. ஒருவேளை கொரோனா இல்லாத சூழல் ஏற்பட்டால்கூட மக்கள் மீண்டும் திரையரங்குகளைத் தேடிச் சென்று திரைப்படங்களைப் பார்ப்பதில் நாட்டம் காட்டமாட்டார்கள் என்கிற அச்சம் பலரிடம் இருக்கின்றது. ஆனால், என்னதான் சாமிப் படங்களை காலண்டரில் அச்சிட்டுக்கொடுத்தாலும் இறைவன் சந்நிதிக்குச் சென்று அவனை நேரில் தரிசிக்கும் அனுபவத்திற்காகவே கோயிலுக்குச் செல்பவர்கள் நாங்கள், அதனால் இதற்குப் பின்னரும் மக்கள் திரையரங்குகளை நாடுவார்கள் என்று திடமாக நம்புகின்றார் நடிகர் கமல்காசன்.

பிலிப்பைன்ஸ் நாட்டில் கொரோனா முடக்கத்திற்குப் பின்னர் மக்களை திரைப்படங்களின் பால் ஈர்ப்பதற்காகப் புதிய உத்திகளைக் கையாளத் தொடங்கிவிட்டார்கள். அதன் ஒரு பகுதியாக அதிக நீரோட்டம் இல்லாத கால்வாயில் படகில் இருந்தபடியே திரைப்படம் பார்க்கும் அனுபவத்தை ரசிகர்களுக்கு ஏற்படுத்திக்கொடுத்திருக்கிறார்கள். தலைநகர் மணிலாவில் அமைந்திருக்கின்றது இந்த மிதக்கும் திரையரங்கு. அங்கு சென்றதும் உங்கள் திறன் பேசிகளில் (ஸ்மார்ட் போஃன்) சேர்த்துக்கொள்ளக்கூடிய ஒரு வானொலி அலைவரிசை முதலிலேயே கொடுக்கப்படும். இதிலேயே படத்தின் ஒலி மற்றும் இசைத் தொகுப்பு இருக்கும் முன்னால் பெரிய திரையில் படம் ஓடிக்கொண்டிருக்கும். சிறிய படகுகளில் அமர்ந்திருந்தபடியே படத்தை ரசிக்கலாம். இது புது அனுபவமாக இருக்கும் என்பதால் பார்வையாளர்கள் கவரப்படுவார்கள் என்று நம்பப்படுகின்றது. உலகின் பல நாடுகளிலும் இத்தகைய திரையரங்குகள் இருந்தாலும் மணிலாவிற்கு இது புதிது.





# சம்பந்தர் கடையடிச் சமா...

நடந்த அரசியல் திருகுதாளங்களையெல்லாம் பாத்தும் கேட்டும் கொண்டிருந்த எனக்கு வீட்டுக்குள்ள இருப்புக் கொள்ளயில்ல. எப்படா கடையடிக்குப் போவம் எண்டிருந்துது. மெல்ல எழும்பிச் சத்தமில்லாமலுக்கு காலில செருப்பை மாட்டிக்கொண்டு மழை கிழை வந்தாலும் எண்டு கையில ஒரு குடையையும் எடுத்துக் கொண்டு வெளிக்கிட்டன்.

கடையடி வெறிச்சுக் கிடக்கு. என்னடா இது ஒருத்தரையும் காணயில்லையே எண்டு யோசிச்சுக்கொண்டே வந்து சேர்ந்தால், கடைக்குள்ள வாழைப் பழம் வாங்கிக் கொண்டு நிண்ட சுப்பன் என்னக் கண்டதும் சாரத்தையும் வாயில தூக்கிப் பிடிச்சுக்கொண்டு அரக்கப்பரக்க வந்து சைக்கிளயும் சுவரில சாத்திப்போட்டு "என்னண்ணை உன்ரையாக்கள் எல்லாம் வெண்டிட்டினம் எண்ட புளுகில வெள்ளனவே வந்திட்டாய் போல...." எண்டு வம்பிழுத்தான்.

எனக்குந்த என்ரையாக்கள் உன்ரையாக்கள் எண்டு வம்பிழுக்கிறதைக் கேட்டால் கடும் கோவம்தான் வாறது. ஆர் நல்லதைச் செய்தாலும் அவையள் எங்கடையாக்கள்தான் எண்டுறது உதுகளுக்குச் சொன்னாலும் விளங்காது. "அடேய்.... முதலில சாரத்தை ஒழுங்காக் கட்டு... பிறகு அரசியல் கதைக்கலாம். எங்கட அரசியல்தான் மானம் போகுதெண்டால் நீ மானத்தைப் போகவிட்டுட்டு அரசியல் கதைக்க நிக்கிறாய்"

"அண்ணை! எனக்குத் தெரியும் நீ என்னதான் மற்றப் பக்கத்து ஆள் எண்டு காட்டிக்கொண்டாலும் உள்ளுக்குள்ள உனக்கு கூட்டமைப்பு தோத்தது கவலைதான்..." எண்டு தொடர்ந்து வம்பிழுத்தான் சுப்பன்.

அப்ப பார்த்து கந்தையா மாஸ்டரும் வந்தார். அந்தாள் டீசண்டான மனுசன். கனக்கக் கதைக்காது, கதைச்சால் அது பெறுதியான கதைதான். மாறாது.

"என்ன மாஸ்டர் கன நாளைக்குப் பிறகு"

"ஓம் ஓம்! இந்த மழை குளிருக்குள்ள வெளியில வெளிக்கிடப் பயமாக்கிடக்கு. இருந்தாலும் அரசியல் போற போக்கப் பாக்க பயமாக் கிடக்கு, இவையள் இப்பிடி தங்களுக்குள்ளயே அடிபட்டுக் கொண்டு கிடந்தால் அவன் சிங்களவன் ஏறி மிதிச்செல்லோ ஓடப் போறான்"

"அது மாஸ்டர் நீங்கள் சொல்லுறது சரிதான். ஆனால், கெடுகுடி சொற்கேளாது எண்டு சொல்லுறவையள்தானே! அதுதான் மாஸ்டர் இஞ்சையும் நடக்குது.

ஆர்னல்டை போட்டாத் வெல்லுறத்துக்கு நூழிலை வாய்ப்புத்தான் இருக்குது எண்டு தெரிஞ்சு கொண்டுதானே போட்டவையள். 23ஆம் திகதி மாரட்டின் ரோட்டில நடந்த கூட்டத்தில ஆர்னல்டை போட்டால் வெல்ல ஏலாது எண்டு அவன் மகாலிங்கத்தாரின்ட பெடியனோட சேர்த்து மூண்டு பேர் தெளிவாச் சொன்னவங்களாம். பிறகு 29ஆம் திகதி நடந்த கூட்டத்தில் மாவையர் நீங்கள் 3 பேர்தான் எதிர்க்கிறீங்கள் மற்றெல்லாரும் ஆதரிக்கிற படியா நாங்கள் அவரையே திரும்பவும் வேட்பாளரா நிறுத்துறம் எண்டவராம்.

31ஆம் திகதி நடந்த கூட்டத்திலயும் அந்தப் பெடியன் எழும்பிச் சொன்னவன் தானாமே, நான் இஞ்ச ஒண்டு அங்க ஒண்டெண்டு நடக்கேல்லை, இங்க சொன்னதத்தான் அங்கயும் செய்தனான். நான் ஆர்னல்டையும் ஆதரிக்கேல்ல மணியையும் ஆதரிக்கேல்ல, வேணுமெண்டாச் சொல்லுங்கள் நான் இப்பவே கடிதத்தத் தந்திட்டுப் போறன் எண்டு....."

"அண்ண உன்ர தொகுதிக்காரன் எண்டுபோட்டுக் கதைக்காதையண்ணை, என்ன இருந்தாலும் கட்சி முடிவை மீறினது பிழைதானே?" எண்டார் வல்லி. கொஞ்ச நேரத்துக்கு முன்னம்தான் வந்திருந்து கதைக்குக் காது குடுத்தவன்.

"அவன் ஆதரிச்சிருந்தா மட்டும் இவையள் வெண்டிருப்பினமே என்ன? அப்பவும் வெல்லுறத்துக்கு ஒரு வாய்ப்பு வந்திருக்கும் அவ்வளவுதானே! டொஸ்ட்டில தோத்திருந்தா என்ன செய்வியள். இதென்ன ருவன்ரி ருவன்ரி கிரிக்கெட்டே டொஸ்ட் போட்டு வெற்றி தோல்வி பாக்கிறத்துக்கு.

வெற்றியை எப்படிக் கச்சிதமா கையில விழுத்திறது எண்டிறது தலைவர் மாருக்கு எல்லோ தெரிஞ்சிருக்கவேணும். நேற்றுப் பெய்த மழையில முளைச்ச காளானுகள் மாதிரி அரசியலுக்க வந்த மாநகரசபைக்காரர் சொல்லுறதக் கேட்டுப்போட்டு ஒருத்தரை நிறுத்திறதே! இதெல்லாத்துக்கும் சீனியர்தான் காரணம் எண்டிறாங்கள். அவர்தான் தமிழரசுக் கட்சிக்காரர் ஒண்டா நிண்டா எப்பிடியும் வெல்லலாம் எண்டு பிழையா வழி நடத்தினவராம்."

"45 பேர் இருக்கிற சபையில 16 பேரை மட்டும் வைச்சுக்கொண்டு வெல்லயேலும் எண்டு எப்படிக் கணக்குப் பார்க்கிறது? அப்படியெண்டா ஏதோ அண்டர்கிரவுண்ட் டீல் போயிருக்கெண்ட நம்பிக்கையிலதானே அப்பிடிக் கணிக்கலாம்!" எண்டார் மாஸ்டர்.

"அது மாஸ்டர், யுஎன்பி காரர் 3 பேரிட்டயும் விஜயகாந்த் மற்றது சு.கட்சிகாரன் ஓராள் எண்டு 5 பேரோட ஏற்கனவே எல்லாம் பேசி முடிச்சாச்சாம். அந்தத் துணிச்சலிலதான் சீனியர் எல்லாம் வெல்லலாம் எண்டு மாவையரையும் பிழையா வழிநடத்திப் போட்டாராம்"

"அதெல்லாம் சரி இனி என்ன செய்யப் போகினமாம்?" இது தங்கத்தின் கேள்வி.

"அவையள் திருந்திற மாதிரித் தெரியேல்ல. இந்த 21 பேரும் முன்னணி 3 பேரும் சேர்ந்து மணியின்ட பட்ஜெட்டை தோற்கடிக்கிற மாதிரித்தான் அண்ட கிரவுண் வேலையள் நடக்குதாம் எண்டு கேள்வி. பழையவர் அதில மும்முரமாய் நிக்கிறாராம். ஆனால் மற்றாக்கள் கொஞ்சம் பின்னடிக்கினம் எண்டும் கேள்வி. ஏனெண்டால் மாதம் சுளையா 25ஆயிரத்துக்கு குறையாமல் கிடைக்கிறதை நம்பி கனபேர் கடனுகள் எடுத்து வச்சிருக்கினமாம். சபை கலைஞ்சால் பெரிய கஸ்ரமாகிப் போகும் எண்டு தமிழரசுக் கூட்டத்தில் ஏற்கனவே அவன் கம்பஸ் பெடியன் தர்சானந் நேரிலேயே சொன்னவனாம்.

அதால, இரகசிய வாக்கெடுப்பு நடந்தால் ஒரு வேளை மணி வெல்லலாம். இல்லை பகிரங்க வாக்கெடுப்பு, கட்சி முடிவை எதிர்த்தா நடவடிக்கை எண்டு கடும் பிடி பிடிச்சா மணியின்ர பட்ஜெட்டும் தோத்துத்தான் போகும். அடுத்த நாளே சபையைக் கலைச்சுப் போடுவினம்.

ஒருவேளை அப்பிடிச் சபை கலைஞ்சால் கொழும்பில இருந்து ஒரு சிறப்பு ஆணையாளரப் போடுவினம், அமைச்சர் எண்ட ரீதியில சபையைத் தங்கட கட்டுப்பாட்டில வைச்சிருக்கலாம் எண்டு ஈ.பி.டி.பிக்காரங்களும் நினைக்கக்கூடும். இன்னொரு மாசம் போனால் எல்லாம் தெரியப் போகுது!"

"அப்ப! இது நாடாளுமன்றத்தில ஆட்சியப் பிடிக்கிறதைவிட பெரிய அக்கப் போராத்தான் போகும் போல..." எண்டுகொண்டு மாஸ்டர் எழும்பினார்.

"அண்ணை! உனக்கு மணியின்ர பதவி போகப் போகுதெண்டு கவலையென்ன?" எண்டு திரும்பவும் வம்பிழுத்தான் சுப்பன்.

"அடேய்! அவன் 10 நாள் இருந்தா என்ன ஒண்டரை வருசம் இருந்தா என்ன அவன் மேயர் மேயர் தானேடா! அதை அழிக்கவே ஏலும்!!" எண்டபடிக்கு நான் எழும்பி வந்திட்டன்.

- ஆதிரன்

# மாற்றம் ஒன்றே மாறாதது...?

பிரிட்டனிலும், தென்னாபிரிக்காவிலும் புதிய வகை வைரஸ் பரவி வருகின்றது என்ற செய்தி பிறந்திருக்கின்ற புதிய வருடத்தையும் மனச்சஞ்சலத்துடனேயே வரவேற்க வைத்துள்ளது. மாத்திரமன்றி வைரஸ் பீதியால் அனைவரையும் திடுக்கிடவும் வைத்துள்ளது.

கொரோனா வைரஸுடன் போராடியே கழிந்த 2020 ஆம் ஆண்டுபோக மறுபடியும் தொடர் போராட்டமா...? என்று கவலைகொள்ளும் நிலையைத் தொற்றுவித்திருக்கிறது இந்தப் புதிய வைரஸ் தொடர்பான திடுக்கிடும் தகவல்கள். மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போலாகிவிட்டதே எமது வாழ்க்கை என்று கொரோனாத் தொற்றுக்கு மத்தியில் பெரும் சிரமங்களையும் இடர் பாடுகளையும் எதிர்கொண்டு வருகின்ற சாதாரண மக்களை ஆதங்கப்பட வைத்துள்ள இந்த வீரியம் மிக்க வைரஸ் பரவல்.

இப்படியாகப் புதிய வைரஸ் குறித்துப் பல திடுக்கிடும் செய்திகள் அடுத்தடுத்து வெளிவந்தவண்ணமிருந்தாலும் இந்த வைரஸ் ஒன்றும் புதியதல்ல என்று சொல்கின்றது மருத்துவத் தரப்பு. அதாவது, பிரிட்டனிலும் தென்னா பிரிக்காவிலும் தற்போது வேகமாகப் பரவி வருவது புதிய வைரஸ் அல்ல. பழைய கொரோனா வைரஸ்தான் அது. ஆனால் தனது மரபணுவில் சிறியளவு மாற்றத்தைக் கண்டுள்ளது. எனவே அதைப் புதிய வைரஸ் பரவுகிறது என்று பயமடைய வைக்கும் வகையில் சொல்லாமல் மாற்ற மடைந்த வைரஸ் அல்லது உருமாறிய வைரஸ் பரவுகிறது என்று சொல்லுங்கள் என்கின்றனர் அவர்கள். ஆனாலும் இந்த உருமாறிய வைரஸ் பழைய வைரஸை விடவும் வேகமாகப் பரவும் ஆற்றலைக் கொண்டுள்ளது என்று பிரிட்டிஷ், தென்னாபிரிக்க மருத்துவர்கள் சொல்லிவைக்கத் தவறவில்லை. ஆனால் அதற்கு ஆதாரம் ஏதுமில்லை என்கிறது உலக சுகாதார அமைப்பு.

இதுகுறித்துத் தேடிப்பார்த்ததில், இந்த வைரஸ் மர பணு மாற்றம் இயற்கையானது என்றும் சீனாவின் வூஹா னில் இனம்காணப்பட்ட கொரோனா வைரஸில் இருந்து இன்றைக்கிருக்கின்ற வைரஸ் 4 ஆயிரத்துக்கு மேற்பட்ட மரபணு மாற்றங்களைப் பெற்றுவிட்டது என்றும் தெரிய வந்தது. தென்னாபிரிக்காவிலும் பிரிட்டனிலும் இந்த வைரஸ் அடைந்துள்ள மாற்றங்கள் வெவ்வேறானவை என்பதுடன் வுகான் மூதாதையரைத் தாண்டிய தலைமுறை வைரஸ்களே இப்போது பரவி வருகின்றன என்பதும் மருத்துவத் தரப்பினரின் கண்டுபிடிப்பாக இருக்கிறது. அத்தோடு கொரோனா வைரஸின் இந்த மாற்றம் இத்தோடு முடிவுக்கு வருமா அல்லது போனால் இன்னும் நீளுமா? என்ற கேள்விக்கு - மாற்றம் ஒன்றே மாறாதது என்பதாகவே மருத்துவத் தரப்பின் பதில் இருக்கிறது. வைரஸ்களின் வாழ்க்கைச் சுற்றில் தலைமுறை தலைமுறையாக அவற்றின் மரபணுக்களில் மாற்றங்கள் நிகழ்ந்து அவை உருமாறிக்கொண்டு தானிருக்கும். எனினும் அவற்றின் அனைத்து மாற்றங்களாலும் (பரிணாம மாற்றம் அல்லது வளர்ச்சி என்றும் சொல்கிறார்கள்) மனிதர்களுக்குத் தீங்கு நிகழும் என்று கூறவியலாது என்கிறார்கள் அவர்கள். அதாவது பழைய வைரஸ் இப்போது 4ஆயிரம் தடவைகள் மாற்றமடைந்துவிட்டாலும் பிரிட்டன், தென்னாபிரிக்கா ஆகிய இரண்டு மாற்றங்கள் பற்றி மட்டுமே பேசுகிறோமே ஏன்...? காரணம், இவ்வாறான சில மாற்றங்களே தீங்கு மிகுந்தவையாக இருக்குமாம்...!



## லோரன்ஸுடன் பவானி சங்கர்!

சின்னத்திரையில் செய்தி வாசிப்பவராகத் தொடங்கிப் படிப்படியாகப் பெரிய திரைக்கு முன்னேறியவர் பவானி சங்கர். மேயாத மான் திரைப்படம் அவரை ஒரு நடிகையாக தமிழ்த் திரையுலகில் நிலை நிறுத்தியது. தொடர்ந்து மொன்ஸ்டர், கடைக்குட்டி சிங்கம், மாபியா போன்ற பெயர் சொல்லும் படங்களிலும் நடித்து ரசிகர்களிடம் நிலையான இடத்தையும் பிடித்துக் கொண்டார். அடுத்ததாக அவர் நடிகர் ராகவா லோரன்ஸின் படமான ருத்ராவில் இணையவுள்ளார்.

இது குறித்து லோரன்ஸே தனது கீச்சகப் பக்கத்தில் பகிர்ந்துள்ளார். இவர்கள் இருவரும் இணையும் முதல் படமாக இது இருக்கும். பவானி சங்கர் ஏற்கனவே சிம்புவின் பத்துத் தல படத்திலும் நாயகியாக நடித்து வருகிறார். படப்பிடிப்பு முடிந்து விரைவில் திரைக்கு வரவுள்ளது அந்தப் படம். மெல்ல மெல்ல ஆனால் உறுதியாக பவானி தனது அடுத்த தளத்திற்கு தமிழ் சினிமாவில் முன்னேறி உள்ளார் என்கின்றன கோடம்பாக்கம் வட்டாரம்.






இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ, கஸ்தூரியர் வீதியிலுள்ள கிரீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.01.2021 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு: 0214927781